# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்

56





கலை இலக்கிய மாத சஞ்சிகை

வைகாசி – 2013

80/=

# நதியினுள்ளே...


## கவிதைகள்

வெற்றி.துஷ்யந்தன்

எஸ்.பி.பாலமுருகன்

எஸ்.திலகவதி

நிலாதமிழின் தாசன்

அருட்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின்

எம்.எம் மன்ஸூர்

வெலிப்பன்னை அத்தாஸ்

## நேர்காணல்

டாக்டர்.எம்.கே.முருகானந்தன்

## கடிதங்கள்

வல்லிக்கண்ணன்

பேராசிரியர் கா.சிவத்தம்பி

## சிறுகதைகள்

இப்னு அஸூமத்

சுதர்மமகாராஜன்

யாழ்.ஸைனப்

ஏ.எஸ்.உபைதுல்லாஹ்

## கட்டுரைகள்

எஸ்.முத்துமீரான்

ராதா

இ.சு.முரளிதரன்

யுகாயினி

அயூர்வன்

அந்தனிஜீவா

முருகபூபதி

## குறுநாவல்

ஆனந்தி

## நூல் விமர்சனம்

க. கோபாலகிருஷ்ணன்




பேசும் இதயங்கள்

அட்டைப்படம் - நன்றி இணையம்

# ஜீவநதி

**2013 வைகாசி இதழ் - 56**

**பிரதம ஆசிரியர்**
கலாமணி பரணீதரன்

**துணை ஆசிரியர்**
வெற்றிவேல் துஷ்யந்தன்

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் குழு:**
திரு.தெணியான்
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

E-mail : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank
Nelliady
A/C - 8108021808
CCEYLKLY


இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளப்படும் படைப்புகளைச் செம்மைப்படுத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு.

- ஆசிரியர்

# ஜீவநதி

**(கலை இலக்கிய மாத சஞ்சிகை)**

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!

- பாரதிதாசன்-

## இலக்கியப் படைப்பாளிகளே...

இலக்கியமானது மனிதனை ஆறுதல் படுத்தும், அவனை நல்ல வழியில் திசைப்படுத்தி வழிநடாத்தும் பண்பு உடையது. மனிதனாக பிறந்தவன்(தமிழனாக) பல துன்பங்களாலும் அவஸ்தைகளாலும் துவண்டு வருகின்ற காலகட்டத்தில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். எமது இருப்பே கேள்விக்குறியாக உள்ள காலகட்டத்தில் தான் எமது வாழ்க்கை ஓடிக் கொண்டிருக்கின்றது.

இலக்கியங்களில் படைக்கப்படும் படைப்புகள் துன்பப்படும் மனிதனை அவன் துன்பங்களில் இருந்த விடுபட்டு மன ஆறுதல் அடையச் செய்வனவாகவும், பாதை தெரியாது சிக்கித் தடுமாறி நட்டாற்றில் நிற்கும் மனிதனை நேரான பாதையில் செல்ல வழிசமைப்பதாகவும், மனிதனை மனிதனாக வாழ கற்றுக் கொடுப்பவையாகவும், சமூக அவலங்களை சித்திரித்து காட்டுபவையாகவும் அமைதல் வேண்டும்.

வெறுமனே தற்புகழ்ச்சி, சுயகாழ்ப்புணர்வு, விருதுகள் நோக்கிய பயணம், தனிப்பட்ட தாக்குதல்கள், குழுவாத விமர்சனங்கள், பாலியல் கிளர்ச்சியைத் தூண்டும் படைப்புகள் என்பன தவிர்க்கப்பட்டு எழுத்தாளர்கள் மேலும் நல்ல இலக்கியங்களை மக்களுக்காக படைக்க வேண்டும். இலக்கியங்கள் மக்களுக்கானவையே.

இன்று எம் சமூகத்தில் அதிகரித்து வரும் சிறுவர் துஷ்பிரயோகம், விபச்சாரம், முதியவர்கள் பிரச்சினை, போரிற்கு பின்னரான மனவடு, விதவைகள் பிரச்சினைகள், திருமணத்திற்கு முன்னரான கற்பம், நடத்தைக் குழப்பங்கள், ஒழுக்கச் சீர்கேடுகள், தற்கொலைகள், கற்பழிப்புகள், கொலை என்பவற்றில் இருந்து எமது சமூகத்தை பாதுகாக்க வேண்டிய கடமைப்பாடு எங்கள் அனைவருக்கும் உண்டு. எழுத்தாளர்கள் தமது எழுத்துக்களை இவற்றின் பக்கம் திசை திருப்ப வேண்டும். எழுத்தாளர்கள் தமது திறமைகளை தனிப்பட்ட தாக்குதல்களுக்காக பயன்படுத்தாமல் சமூக முன்னேற்றத்திற்காக பயன்படுத்தவேண்டும் என ஜீவநதி அன்போடு வேண்டுகின்றது.

– க.பரணீதரன்



# கிழக்கிலங்கை முஸ்லிம்களின் நாட்டார் பாடல்களும் கிராமத்துப் பெயர்களும்

எஸ்.முத்துமீரான்

கிழக்கே இல்லையென்று சொல்லாமல் அள்ளிக் கொடுக்கும் வங்களா விரிகுடாவையும், மேற்கே பச்சைப் பசேலென்று விரிந்து கிடக்கும் வயல் நிலங்களையும், மலைகளையும், காடுகளையும் கொண்ட கிழக்கிலங்கையில் முஸ்லிம்கள் வாழும் கிராமங்கள் வளம்கொழித்துக் கிடப்பதை இன்றும் காணலாம். முல்லையும், மருதமும், நெய்தலும், குறிஞ்சியும் வாழ்த்தொலி முழங்க, செழிப்போடு இயற்கையின் இனிய தாலாட்டில் என்றும் கோலோச்சிக் கொண்டிருக்கும் இக்கிராமத்து மக்களால் பாடப்பட்டு, இன்றும் ஏடுகளைக் காணாது இவர்களின் இதயங்களே தஞ்சமெனக் கிடக்கும், இம்மக்களின் நாட்டுப்புறப் பாடல்கள் இனிமையும், எழிமையும் கொண்டவைகள். இவைகளில் இவர்கள் வாழும் கிராமங்களின் பெயர்களைக் கொண்ட பாடல்களையும், இப்பாடல்கள் இவர்களின் கிராமத்து வளங்களையும் வாழ்வியல் பற்றியெல்லாம் கூறும் சிறப்புகளையும் இப்பொழுது பார்க்கலாம். கிழக்கிலங்கை, முஸ்லிம் மக்கள் வாழும் கிராமங்கள் தனித்துவமான இஸ்லாமிய விழுமியங் களையும், சிறப்புக்களைப் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது. இவர்களுடைய கலை கலாச்சாரம், பண்பாடு என்பன இக் கிராமங்களில் பளிச்சிட்டுக் கொண்டி ருக்கும். இவை அனைத்தும் இம்மக்களின் நாட்டுப் புறப் பாடல்களில் தெளிவாக சொல்லப்படுவதைக் காணலாம். ஒழுக்க நெறிகளும், சமயப் பண்பாட்டு விழுமியங் களும். இங்கு வாழும் கிராமத்து மக்களிடையே நிறைந்திருக்கும். எவ்வளவுதான் நாகரிகம் வளர்ச்சி பெற்று வானுயரப் பறந்தாலும், இக்கிராமங்களில் வாழும் முஸ்லிம்கள் ஒழுக்க நெறி தவறாமல், உயர் பண்புகள் மாறுபடாமல், மரபு முறைகளில் மாற்றங்கள் குலையாது, வாழ்ந்து வரும் பண்புள்ளவர்களாக இருப்பதைக் காணலாம்.

செழுமையும், சிறப்பும் பெற்று இன்றும் இளமைப்பொலிவோடு கிராமங்களில் கோலோச்சிக் கொண்டிருக்கும் முஸ்லிம்களின் நாட்டுப்புறப் பாடல்கள் காதலும் நையாண்டியும், கருணையும், காதலொழுக்கமும், பக்தியும், பண்பாட்டு விழுமியங் களும் நிறைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இப்பாடல் களில் இங்குள்ள ஊர்ப் பெயர்களை வெளிப்படுத்தும் சில பாடல்களை இங்கே பார்ப்போம். இப்பொழுது கிழக்கிலங்கையில் உள்ள பொத்துவில் என்னும் பழை மையான சிறப்புமிக்க ஒரு முஸ்லிம் கிராமத்தைப் பற்றி எழுந்துள்ள சில நாட்டார் பாடலைப் பார்க்கலாம். இக்கிராமம் பண்டைய சிங்கள மன்னர்களின் கோடை கால விடுமுறை வாசஸ்தலமாகவும் இருந்துள்ளது குறிப்பிடத்தக்கது. குடாக்கடலும் இக்கிராமத்திற்கு சிறப்பூட்டிக் கொண்டிருப்பதும் தனிச் சிறப்பெனலாம்.

01.சீனட்டி நெல்லும்
செல்ல இறால் ஆணமும்
பொத்துவில் ஊரும் - இப்ப
பொருந்தினதோ வன்னிமைக்கு? (ஆணம்: கறி)

அக்காலத்தில் கிராமப்புறங்களில் அமைந் துள்ள குளங்களிலிருந்து விவசாயத்திற்கு நீர்பாய்ச்சும் வேலைகளையும் விவசாயிகளிடமிருந்து விவசாயவரி அறவிடப்படும் வேலைகளையும் கவனிப்பதற்கு பிரித்தானிய அரசாங்கம் ஓரளவு ஆங்கிலம் தெரிந்த இலங்கையர்களை அதிகாரிகளாக நியமித்திருந்தது. இவர்களை நீர்ப்பாசன வன்னியனார் அல்லது வன்னிமையென்று அழைப்பார்கள். இவர்கள் அக்காலத்தில் குதிரைகளில் சில நேரம் வண்டில்களில் இவ்வூர்களுக்குச் சென்று, அங்குள்ள குளங்களி லிருந்து, விவசாயத்துக்கு நீரைத் திறந்து கொடுப்பது வழக்கம். இப்படிப்போகும் வன்னிமைகள் சில நேரங் களில் அவ்வூர்களில் மாதக் கணக்கில் தங்கி விடுவார் கள். இவர்களையும். இவர்களின் வாழ்வியலையும்

நாசுக்காக நையாண்டி செய்யும் தோரணையில் பாடப் பட்டுள்ள இந்நாட்டார் பாடல், படிக்கப் படிக்க ருசிக்கிறது. கிராமத்து மக்களின் களவொழுக்கம் எவ்வளவு பண்போடு இப்பாடலில் வெளிக்காட்டப்படுகிறது என்பதைக் காணும்போது உள்ளமெல்லாம் புல்லரிக் கிறது. எழுத்தறிவில்லா இவ்வேழைக் கிராமத்து மக்களின் ஒழுக்க நெறிக்குத்தான் நிகரேது?

அக்காலத்தில் பல பெயர்களைக் கொண்ட நெல்லினங்கள், இங்குள்ள மக்களால் வயல்களில் விதைக்கப்பட்டன. இந்நெல்லினங்களில், "சீனட்டி நெல்"லின் அரிசி சாப்பாட்டுக்கு கூடிய சுவைதரும் ஒரு நெல் இனமாகும். மேலும் பொத்துவில் கோரக்களப்பில் விளையும் இறாலும், ருசியும், சுவையுமுடையன. இதனால்தான் "சீனட்டி நெல்லும் செல்ல இறால் ஆனமும்" என்று சாப்பாட்டின் சுவையை இந்நாட்டுப் புறப்பாடல் மெருகூட்டிக் கூறுகின்றது. இயற்கையோடு ஒன்றித்து வாழும் கிராமப்புற மக்களின் வாழ்க்கை புனிதமும், இனிமையும் நிறைந்தது.

**கிழக்கிலங்கை, முஸ்லிம் மக்கள் வாழும் கிராமங்கள் தனித்துவமான இஸ்லாமிய விழுமியங் களையும், சிறப்புக்களைப் பெற்றிருப்பது குறிப்பிடத் தக்கது. இவர்களுடைய கலை கலாச்சாரம், பண்பாடு என்பன இக் கிராமங்களில் பளிச்சிட்டுக் கொண்டிருக்கும்.**

பொத்துவிலுக்கு போன வன்னிமை நாட்கள் கடந்தும் அவருடைய சொந்த ஊருக்கு வராமல் பல நாட்களாக இங்கேயே தங்கி விட்டதால், இவர் அங்கு கலியாணம் முடித்து வாழ்கின்றாரோ என்று சந்தேகம் வந்து வன்னிமையை நையாண்டியாக "பொருந் தினதோ வன்னிமைக்கு" என்று இப்பாடலின் மூலம் இந்நாட்டுப் புறக் கவிஞன் வன்னிமையை கேலி செய்கிறான். இந்நாட்டுப்புறப்பாடல் பொத்துவிலுக்கு நீர்ப்பாசன விடயமாகப் போன வன்னிமை நாட்கள் கடந்தும் ஊருக்கு வராததினால் இக் கிராமத்து நாட்டுப் புறக் கவிஞனொருவன் நகைச்சுவையோடு வன்னிமை யைக் கேலி செய்வது எவ்வளவு சிறப்பாக இருக்கிறது. இதைப்போன்ற இன்னொரு பாடலையும் பாருங்கள்.

02. போறாருகா வன்னியனார்
பொத்துவிலப் பாப்பமெண்டு
மாயமருந்தால் - கள்ளி
மயக்கிறாளோ நானறியேன்! (மாயமருந்து : வசியம் செய்தல்)

பொத்துவில் ஊர் செழிப்பான ஊர். இவ்வூரில் வாழும் பெண்களும் அழகானவர்கள். இங்கு ஒருவர் போனால் இங்குள்ள நல்ல வடிவான ஏழைப்பெண் களைப் பார்த்து முறைப்படி பேசித் திருமணம் முடிக்கலா மென்றும் கூறுவார்கள். இப்படி அங்கு போய்த் திருமணம் முடித்தவர்கள் எல்லா ஊர்களிலும் இருக்கிறார்கள். இதற்கு மூலகாரணம், இங்கு வாழும் மக்களில் அநேகம்பேர் ஏழைகளாக இருப்பதேயாகும். இப்பாடலில் வரும் "மாயமருந்து" என்னும் சொல் இக்கிராமத்தில் வாழும் ஏழைப்பெண்களின் அழகிற்கே உவமையாக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. இப்பெண்களின் அழகு எல்லோரையும் வசிகரித்து மயக்கத்தக்கது. கிராமத்து இளம் பெண்களின் அழகில் மயங்காதோர் யாருளர்? இவர்களின் செயற்கை இல்லா அழகு, என்றும் சிறப்பானதே.

இதைப்போன்று கீழ்வரும் நாட்டார் பாடலும், கிராமத்தில் வதியும் பெண்கள் ஒழுக்கமானவர்கள். இவர்கள் யாராலும் வஞ்சிக்கப்பட்டால் அவ்வஞ்சித் தவனை சாபமிட்டு அவனுக்கு கேடு இறையிடம் பிரார்த் தனை செய்வார்கள். இம்மக்களின் இறைபக்தி மேலானது. இதை இந்நாட்டார் பாடல் சிறப்பாகக் கூறுகிறது.

03. பொத்துவில் ஊராள்
பொல்லாத ராசுடையாள்
திட்டுப் பலிச்சா - நம்முட
சீவனுக்கும் தீங்கு வரும்.

கற்புடைய ஏழைப் பெண்களுக்கு நாங்கள் தீங்கு செய்தால், அது எங்களுக்கு பாவத்தையும் பழியையும் கொண்டு வரும் என்பதை இந்நாட்டார் பாடல் அழகாகக் கூறுகிறது. இப்பாடலில் வரும் "திட்டுதல்" என்னும் சொல் சபிக்கின்றதையே குறிக்கும். கற்பின் மகத்துவத்தை இப்பாடல் புடம் போட்டுக் காட்டுகிறது இப்பொழுது, கிழக்கிலங்கையில் முக்கிய மான கிராமங்களில் ஒன்றான அக்கரைப்பற்றைப் பற்றி குறிப்பிடப்பட்ட பாடல்களைப் பார்ப்போம். இக்கிராமத் தில் தான் கூடுதலான நாட்டுப்புறப்பாடல்கள் என் கள ஆய்வில், தேடி எடுக்கப்பட்டன. இங்கு நல்ல புலவர் களும், கவிஞர்களும் இருந்து சிறந்த இலக்கியப் படைப்புகளை ஆக்கித் தந்து இலக்கிய உலகிற்கு அழகு சேர்த்துள்ளனர். இப்பொழுது இங்கு தேடியெடுக்கப்பட்ட நாட்டுப்புறப் பாடலொன்றைப் பார்ப்போம். இப்பாடல், காதல் வயப்பட்ட ஒரு இளைஞனின் இதயதாபத்தை சிறப்பாக வெளிப்படுத்துகின்றது. வெட்டுக்குத்துக்காலம் இங்குள்ள வயலொன்றில் சில பெண்கள் கதிரு பொறக்கிக் கொண்டிருக்கின்றனர். இவர்கள் அக்கரைப் பற்றுக் கிராமத்தையும், பாலமுனைக் கிராமத்தையும் சேர்ந்தவர்கள். இங்கே உப்பெட்டிகைச் சேர்த்து கட்டு களாகக் கட்டிக் கொண்டிருக்கும் இளைஞன் ஒருவன்

பாலமுனைக் கிராமத்தைச் சேர்ந்த அழகி யொருத்தி யின் மேல் காதல் கொள்கிறான். அன்பு மேலோங்க இவன் தன் இதயதாபத்தை வெளிக்காட்ட பாலமுனை அழகியைப் பார்த்து சிலேடையாக இப்படிப் பாடுகிறான்.

**04. அக்கரைப்பற்று**
**அழிஞ்சாலும் குத்தமில்ல - என்ர**
**பாலமுனை ஊரு - இப்ப**
**பவுத்திரண்டா ஆண்டவனே** (பவுத்திரம் : கவனம்)

இப்பாடலின் மூலம், தான் விரும்பிய பால முனைப் பெண்ணுக்கு தன்னுடைய உள்ளக் கிடக்கையை இவ்விளைஞன் சிலேடையாக இங்கு வெளியிடுகின்றான். இது ஒரு அழகான காதல் பாடலாகும். இப்பாடல் இப்பகுதியில் உள்ள அக்கரைப் பற்று, பாலமுனை ஆகிய இரு கிராமங்களை சுட்டிக் காட்டிக் கொண்டிருக்கிறது. கிராமத்து மக்களின் காதல்தான் எத்தனை உயிர்த்துடிப்பானது என்பதற்கு இப்பாடல் நல்ல உதாரணமாகும்.

இதே போன்று, அக்கரைப்பற்று, கரவாகு, சாய்ந்தமருது ஆகிய கிராமங்களின் பெயர்களைச் சொல்லும் நாட்டுப்புறப் பாடலொன்றைப் பார்ப்போம். இப்பாடல் கிழக்கிலங்கையில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் கிராமங்களை வெளிக்காட்டி நிற்கிறது.

**05. அக்கரைப்பத்தோ, இல்ல**
**அவரும் கரவாகோ?**
**சாய்ந்தமருதூரில் - அவருக்கு**
**சாதிசனம் உண்டாமோ?**

இப்பாடல், சாய்ந்தமருது என்னும் கிராமத்துப் பெண்ணொருத்தியை திருமணம் முடிக்க நிச்சயிக்கப்பட்ட இளைஞனொருவனின் பூர்வீகம் பற்றி பெண் பகுதியிலிருந்து, இளைஞனின் உறவினர்களிட மிருந்து அறிந்து கொள்ளபட்ட பாடலாகும். கிராமத்து மக்கள் திருமணங்களின் போது ஆணின் பூர்வீகம் பற்றி அறிகின்ற பழக்கம் இன்றும் இப்பகுதிகளில் இருப்பதைக் காணலாம்.

**06. அக்கரைப்பற்றில், இப்ப**
**அதிக மழுபேஞ்சி நம்முட**
**ஊரழிஞ்சி போச்சாம் - இதை**
**உத்துணர்ந்து பார் ராசா...** (மழ : மழை)

இப்பாடலிலும், அக்கரைப்பற்று கிராமம் சிறப்பாக விழித்து சொல்லப்படுகிறது. இறையின் மகத்துவத்தையும், அவனின் சக்தியையும் வாழ்விய லோடு ஒப்பிட்டுப் பாடப்பட்ட இப்பாடல், நம்பவைத்துக் கழுத்தறுக்கும் இளைஞர்களுக்கும், அநியாயம் செய்வோருக்கும் படிப்பினையாகப் பாடப்பட்டது. ஒரு கிராமத்தில் பாவம் மலிந்தால் அக்கிராமத்தையே ஈசன் அழித்து விடுவான் என்ற உண்மையை இப்பாடல் வெளிப்படுத்துகிறது.

**07. அக்கரைப்பத்திலயோ - இல்ல**
**அங்கு கரவாகிலயோ**
**சம்மாந்துறையிலயோ - என்ர**
**தங்க வண்டார் தங்கிறது?**

இப்பாடலிலும் கிழக்கிலங்கை அம்பாரை மாவட்டத்தில் பேர்போன கிராமங்களான அக்கரைப் பற்று, கரவாகு, சம்மாந்துறை ஆகிய முஸ்லிம் கிராமங்கள் இப்பாடலில் விழிக்கப்படு வதைக் காணலாம். இதுவும் காதல் வயப்பட்ட நாட்டுப்புறப் பாடலாகும். பெண்ணொருத்தி அவள் விரும்பிய இளைஞனின் ஊர் பற்றியும் அவனின் பூர்வீகம் பற்றியும் வினாவுகின்றாள். இவள் தன் உள்ளம் கவர்ந்த இளைஞனைத் "தங்க வண்டாக" உருவகப் படுத்திப் பாடுவது சிறப்பாக இருக்கிறது. அவளை மலராகவும், தன் காதலனை வண்டாகவும் இவள் உருவகப்படுத்திக் காட்டும் நிலை சங்ககால அகநானூற்றுப் பாடல்களை எங்களுக்கு நினைவூட்டி நிற்கிறது. கிராமத்து கவிஞன், கற்பனையில் எவ்வளவு தூரம் வெற்றி பெற்று விட்டான் என்பதை நினைக்கும் போது உள்ளமெல்லாம் புல்லரிக்கிறது.

கீழ்வரும் பாடலும் அக்கரைப்பற்று கிராமத்தைச் சேர்ந்த பட்டியடிப்புட்டியென்னும் ஊரைப் பற்றியும் அதன் வளத்தைப் பற்றியும் அழகாக எடுத்துரைக்கின்றது.

**08. பட்டியடிப்புட்டி**
**பால் தயிரு கனத்த இடம்**
**நெய்யுருக்கி ஊத்துறாங்க - என்ர**
**நேசக்கிளி போயிருக்கி** (கனத்த : கூடுதலான)

பட்டியடிப்புட்டி என்னும் கிராமம் அக்கரைப் பற்றிலுள்ளது. இங்கே கூடுதலான பசு எருமை மாட்டுப் பட்டிகளை அக்கரைப்பற்று பணக்காரப் போடிமார்கள் விவசாயத் தேவைகளுக்காக வைத்திருந்தார்கள். மேலும் இங்கு பாலும், தயிரும், நெய்யும் கூடுதலாக இருந்ததையே இந்நாட்டுப்புறப்பாடல் கூறுகின்றது. இதையே "பால் தயிரு" கனத்த இடமென்று, இக்கவிஞன் கூறுகிறான்.

மேலும் கிழக்கிலங்கையில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் கிராமங்களான காத்தான்குடி, சம்மாந்துறை, நிந்தவூர் ஆகிய கிராமங்களையும் இங்கு வாழும் மக்களுடைய வாழ்வியலையும் பற்றி கீழ்வரும் நாட்டார் பாடல் சிறப்பாகக் கூறுகின்றது.

**09. அப்பம் சுடும் காத்தான்குடி**
**அவல் இடிக்கும் காரைதீவு**
**முட்டி தூக்கும் சம்மாந்துறை - நாங்க**
**முகப்பழக்கம் நிந்தவூ ரு**

இப்பாடல்மூலம், இக்கிராமங்களில் வாழும்

மக்களின் பண்புகளையும், அவர்களின் தொழிலையும் அறியக்கூடியதாக இருக்கிறது. காத்தாங்குடி, காரைதீவு, சம்மாந்துறை ஆகிய கிராமங்களை இப்பாடல் சிறப்பாகச் சித்திரிக்கின்றது.

இப்பகுதியில் அட்டாளைச்சேனை சிறப்புப் பொருந்திய கிராமமாகும். மீன்பிடி தொழிலுக்கும், பாய், தட்டு இழைத்தலுக்கும் பேர்போன இக்கிராமத்தில் கூடுதலான மௌலவிகள் இருக்கின்றனர். இங்குள்ள வயல்நிலங்களிலும், சதுப்பு நிலமான அல்லையிலும் கூடுதலாகப் பன் வளர்கின்றது. இதையே கீழ்வரும் பாடலும் எடுத்துக் காட்டுகிறது. இங்குள்ள பெண்கள் அழகான பாய்களை பன்களால் இழைப்பார்கள்.

10. அட்டாளைச்சேனை
அல்லயில பன்புடிங்கி
பாயிழைச்சி போட்டிரிக்கன் - அவர்
பக்குவமாப்படுத்துறங்க.

கணவன் படுத்துறங்க அழகான பாய் இழைத்துப் போட்டிருக்கும், மனைவியின் அன்பை இப்பாடல் எடுத்துக் காட்டுகிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம்கள் கூடுதலாக வாழும் ஏறாவூர் கிராமத்தை கீழ்வரும் நாட்டார் பாடல் சொல்லிக் காட்டுகிறது. ஏறாவூர் தமிழ் கிராமங்களுக்கிடையில் இருந்தாலும், இங்கு வாழும் முஸ்லிம்கள் தனித்துவமான பண்பும், பழக்க வழக்கங்களும் உள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது.

11. ஏறாவூ ரிலிருந்து
எளயமச்சான் வந்திரிக்கார்.
பூ முளையாச் சாவலொன்ற - பகலைக்கு
புடிச்சறுகா சோத்துக்கு.

இப்பாடல் மூலம், இக்கிராமத்து ஏழை மக்களுடைய வாழ்வியல் பண்பாடு, பளிச்சென்று வெளிப்படுகிறது. விருந்தோம்பலில் ஏழைக் கிராமத்து முஸ்லிம் மக்கள் என்றும் சளைத்தவர்கள் இல்லை என்பதை இப்பாடல் மூலம் அறியக் கிடக்கிறது.

கீழ்வரும் பாடல், கிழக்கிலங்கையில் சின்ன மக்கா என்று சிறப்பாக அழைக்கப்படும் மருதமுனைக் கிராமத்தைக் கூறுகின்றது.

12. மருதமுனை மச்சானுக்கு - இந்த
மச்சிர ஊட்ட வர
காலென்ன கொட்டானாமோ இல்ல
கண்ணென்ன பொட்டயாமோ?

கேலியும், குத்தலும் நிறைந்த இந்நாட்டுப் புறப் பாடல் உறவின் ஒழுக்கத்தை உரிமையுடன் தொட்டுக் காட்டுகிறது. படிக்கப்படிக்க ருசிக்கிறது. கிழக்கிலங்கையில் முஸ்லிம்கள் செறிந்து வாழும் கிராமங்களில் மருதமுனையும் ஒன்றாகும். இங்கே, காத்தான் குடியின் பெயரை தாங்கிய நாட்டுப்புறப் பாடலொன்றைப் பார்ப்போம்.

13. காத்தான்குடியிருந்து
கன்னிநாகு வந்திரிக்காம்.
காசத்தா வாப்பா - நானத
கைவிலைக்கு வாங்கி வாறன்

இப்பாடல் ஒரு இளைஞனின் ஆசையை அப்பட்டமாக வெளிக்காட்டி நிற்கிறது. அன்பு கொண்ட பெண்ணைத் திருமணம் முடித்து தருமாறு, தகப்பனிடம் தனயன் எவ்வளவு ஒழுக்கமாகக் கேட்கிறான். இங்கே, “மகர் கொடுத்து திருமணம் முடிக்கும் இஸ்லாமியப் பண்பு சிறப்பாகக் காட்டப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட ஊர்ப்பெயர்களை மையமாகக் கொண்டு பாடப்பெற்ற ஆயிரக் கணக்கான நாட்டுப்புறப் பாடல்கள், இப்பகுதிகளில் வாழ்ந்த எழுத்தறிவில்லா ஏழைக்கிராமத்து முஸ்லிம் மக்களின் இதயங்களே தஞ்சமெனக் கிடந்து அவர்களின் வாழ்வோடு அவைகளும் மறைந்து விட்டன. இதற்கு முக்கிய காரணம் சர்வகலாசாலைகளில் கோலோச்சிக் கொண்டிருந்த முஸ்லிம் பேராசிரியர்களும், கலாநிதிகளும் நாட்டாரியலைத் தேடிக் கள ஆய்வு செய்யாமலும் கண்டு கொள்ளாமலும் மாக்ஷிய சித்தாந்த வெறிபிடித்து அலைந்து திரிந்தமையே யாகும். விலைமதிப்பற்ற இவ்விலக்கியப் பொக்கிசங்கள் மறைந்து அழிவதைத் தடுக்க முன்வராமல் இவர்கள் போனதற்கு (மார்சிஷ) கம்மினிச சித்தாந்தங்களை மட்டும் பேசிக்கொண்டு திரிந்தமையேயாகும். ஆன்மீகம் கிஞ்சித்துமில்லாமல் வாழ்ந்த, வாழ்ந்து கொண்டிருக்கின்ற இஸ்லாமியப் பேராசிரியர்களும், கலாநிதிகளும், இவர்களைப் பின்பற்றி வாய்ச்சவடால் பேசிக் கொண்டிருக்கும் இவர்களின் அடிவருடிகளும் எப்பொழுது முன்வரப் போகிறார்களோ? நுனிப் புல்லோட்டத்தில் நாட்டுப்புறவியலில் ஏதோ ஓரிரு கட்டுரைகள் எழுதிவிடுவதினால் மட்டும், ஆய்வுகள் நிறைந்து விடாது.

எதையும் புரியாமல், புரிந்து கொள்ள முடியாமல் செஞ்சோற்றுக் கடனுக்காக உயிரை மாய்த்த கர்ணனைப் போல் வாழும் இச்சித்தாந்த வாதிகள், உண்மையைப் புரிந்து தான் வாழும் முஸ்லிம் சமூகத்திற்காக, நாட்டுப்புற இலக்கியத்தில் கள ஆய்வு செய்து முஸ்லிம்களின் நாட்டுப்புற இலக்கியம் வளர உதவுதல் வேண்டும். ஏதோ சாட்டிற்கு சில காதல் வயப்பட்ட நாட்டுப்புறப் பாடல்களை மட்டும் வைத்து கட்டுரைகளை எழுதி விட்டு பெருமூச்சு விடுதல், ஒருபோதும் நாட்டுப்புற இலக்கிய ஆய்வாகக் கருதப்படலாகாது. இதுவொரு வெறும் கண்துடைப்பு மட்டுமே. பட்டங்கள் பெறுவதற்காக பக்திவயப்பட்ட சில மாணவர்கள் இக்கட்டுரைகளை வானுயரத் தூக்கிப் பிடிக்கலாம். ஆனால் இதுவெல்லாம் அடிமைத்துவ புலுடாக்களே.

சிங்களத்தில் – குமாரி குமாரகமகே

தமிழில் – இப்னு அஸூமத்

# பெட்டை



அப்பம்மா அழுது புலம்பிக் கொண்டு தரையில் விழுந்து கட்டிப் பிடித்த போதுகூட கால்களில் உஷ்ணம் இருந்தது. பெட்டை இன்னும் உயிருடன் இருக்கிறாளா என்பதில் அப்பம்மாவிற்கு சந்தேகம்.

வாழ்நாள் முழுவதுமாக இதோ... இப்போது உயிரற்றிருக்கும் இந்த உடலை நூறு தடவைகளுக்கு மேல் கண்டிருக்கும் அப்பம்மாவிற்கு சந்தேகம் இருக்க வில்லைத்தான்.

அவள் இறந்து விட்டாள்.

அப்பம்மாவின் பெருமூச்சில் மறைந்திருப்பது நிம்மதியா?... பின்னடைவா?... எதிர்பார்ப்பின் சிதைவா?... யார் கண்டது.

சிலவேளை கூறப்படுகின்ற எல்லாமே இருந்திருக்கக் கூடும்.

அவள் இறந்து விட்டாள்.

இறந்தல்ல... கொல்லப்பட்டு விட்டாள்.

அவளை இறக்கப் பண்ணியுள்ளனர்.

அப்பம்மா எழுப்பிய ஒப்பாரிச் சத்தத்தில் அண்மித்த ஏழு கிராமங்களின் மக்களும் கூடியிரா விட்டால்தான் ஆச்சரியம்!

யுத்தம் முடிந்தும்<br>
இப்போது பிரச்சினைகள் முடிந்தும்<br>
இவ்வாறு ஒப்பாரி வைப்பதானது...

இப்படியல்ல. எப்படிக் கூக்கிரலிட்டாலும் ஒருவருமே வராத ஒரு காலம் இருந்ததுதான்.

எவருமே வராத<br>
எவருமே போகாத<br>
இப்போது –<br>
அந்தக் காலம் முடிந்து விட்டதாம்.<br>
என்றாலும்<br>
அவள் போய்விட்டாள்...<br>
போயே போய் விட்டாள்...

வந்தவர்கள் எல்லோரும் ஒப்பாரி வைப்பதில் அப்பம்மாவுடன் கூட்டு சேர்ந்து விட்டனர்.

எனது நெஞ்சும் பதறிவிட்டது. அவளைப் பற்றி நாங்கள் சொல்வதானால் அவளுக்கு இறக்க நேரிட்டு விட்டது. அதுவரையில் அவளைப் பற்றி கடுகளவேனும் நாங்கள் அறிந்திருக்கவில்லை. அறிந்து கொள்வதுதான் எப்படி? அதிலும் எந்தள விற்குத்தான் அறிந்து கொள்வது?... தெரிந்து கொள்ள வழிவகுப்பதாலும்... விளக்கிக் கூறுவதாலும் இன்னும் எத்தனைப் போர்தான் மரணிக்கக் கூடும்? அதற்குப் பிறகு... புரிந்து என்ன செய்வது?...

உனது தாயும் மிகவும் கறுப்பானவள்<br>
உனது தந்தையும் மிகவும் கறுப்பானவர்<br>
நீயும் பெட்டை கறுப்போ கறுப்பு!

தாலாட்டுகிற நான் மாநிறம்

தாலாட்டுப் பாடி அவளைத் தாலாட்ட வேண்டும் போல் எனக்குத் தோன்றியது.

பெட்டை...

உனக்கும் விருப்பமா தாலாடிக் கொள்வ தற்கு?

அம்மாவினது... அப்பாவினது... மாமியினது...

அன்பு செலுத்துகின்ற எவரேனுமினது அணைப்பில் தாலாடுவதற்கு...

என்றாலும்<br>
நீ கறுப்பு<br>
கறுப்போ... கறுப்பு

அதாவது அசிங்கமானவள்...

அசிங்கமோ...அசிங்கம்...

நானுனக்கு அன்பு செலுத்துவது எப்படி?...

நீ தமிழ்

...

இதெல்லாம் தலைகளில் இருக்கின்ற பிரமைகள்

எனது தலையில் பிரமைகள்

அவர்களது தலைகளிலும் பிரமைகள் ...

பார்த்துக் கொண்டே போனால் எல்லோருடைய தலைகளிலும் பிரமைகள்...

அப்படி இல்லாமல் இருக்க முற்படுபவர் களுக்கு இங்கு இருக்க முடியாததுதான்.

எங்கே... இருப்பதற்கென்று உங்களுக்கொரு உலகம்?...

கடந்த காலங்கள் முழுவதுமாக அப்பம்மா வின் வாழ்க்கையாக இருந்தவள் – வாழ்க்கையின் காரணமாக இருந்தவள் பெட்டை. வன்னிப் பகுதி மாபெரும் யுத்தமொன்றுக்கு முகங் கொடுக்க தயாராகி வருவதாக தகவல் வரும் போதும் அப்பம்மா மரண வீடொன்றில் இருந்தாள். அந்த சந்தர்ப்பத்தில் இருந்து அவளது நெஞ்சில் உருண்டை ஒன்று சிக்குண்டு இருந்தது. தலையில் பாரிய சுமையை வைத்துக் கொண்டே அவள் நடந்தாள். ஆச்சரியம்தான்... இன்னும் எத்தனைப் பேர் யுத்தத்திற்குள் அகப்பட்டுக் கொண்டனர்... என்றாலும் அவளுக்கு சுமையாக இருந்தவள் பெட்டை...

கடைசி யுத்தத்தில் அப்பம்மாவிற்கு மிஞ்சியது பெட்டை மட்டும்தான். அதுவும், எந்தவித பாதிப்புக் களும் இல்லாமல்.

முகாமில் வைத்து அப்பம்மா அவளைத் தேடிக் கண்டுபிடித்த போது அவள் மெலிந்திருந்தாள். மேலும் கறுத்திருந்தாள். இழுபட்டுப் போய் இருந்தாள். பற்களும் இரு கண்களும் மட்டும்தான்... என்ன இருந்தாலும் கை கால்கள், முகம், வாய் எதிலும் குறையில்லை. ஏனையவை சரியாகிவிடும்... என அப்பம்மா மனதை திடப்படுத்திக் கொண்டிருக்கக் கூடும்.

அப்பம்மாமார் அப்படித்தான் மனங்களை திடப்படுத்திக் கொண்டிருக்கக் கூடும்.

மம்... அப்படித்தான் நடந்திருக்கக்கூடும்.

எழுதுவதற்கு ஆரம்பித்த பின்னர்தான் புரிகிறது...

அப்பம்மாமாரினைப் பற்றி நாங்கள் தெரிந்து வைத்திருப்பது எவ்வளவு எனில்... கடுகளவா?

தெரியும் என்றுதான் நினைத்துக் கொண்டிருக் கிறோம்.

அப்பம்மாமாருக்கு நடந்தவை...

நடந்து கொண்டிருப்பவை



நடக்கப் போகின்றவை

நடக்க வேண்டியவை

இந்த எல்லாமே ...

பார்த்துக் கொண்டே போனால் இவை யெல்லாம் எந்தளவிற்கு பெருமையான சிந்தனைகள்!

நடந்தவை என்னவென்று அப்பம்மா மாருக்கே தெரியுமோ... தெரியாது...

நடந்து கொண்டிருப்பவைப் பற்றிக் கூற அப்பம்மாமாருக்கும் இயலுமா?

அவர்களுக்கு ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமா? எதையாவது கூற?...

அப்பம்மாவிற்குக் கூட கடந்த காலங்கள் பூராவும் ஒப்பாரி வைப்பதற்கு நேரம் கிடைத்திருக்க வில்லை. நெஞ்சில் அடித்துக் கொண்டு ஒப்பாரி வைத்து அழுவதற்கு ... மண் அள்ளித் தூற்றி சாபமிடுவதற்கு ... தலை திரும்பிய பக்கம் ஓடுவதற்கு ... அந்தளவிற்கு வேதனைமிக்க, தாங்கிக் கொள்ள இயலாத எவ்வளவோ சம்பவங்கள் கடந்த காலங்களில் நிகழ்ந்தன...

என்றாலும் ... எங்கே... அவை எதையுமே செய்வதற்கு நேரம்?.....

என்றாலும் அப்படிச் செய்தோமென்றுதான் யாருடைய அனுதாபத்தை, அன்பை, பாதுகாப்பை எதிர் பார்ப்பது? யாருடன் பகிர்ந்து கொள்வது?

எல்லோருக்கும் ஒரே நிலைமை.

எல்லோரும் ஒரே குட்டையில்தான்.

ஆக,

அப்பம்மா போதுமானளவிற்கு ஒப்பாரி வைத்தாள்.

வந்திருந்த மற்றவர்களும் சளைத்துவிட வில்லை.

போட்டியைப் போல்.

பார்த்துக் கொண்டே போனால் பெட்டைக்கு நன்றி சொல்வதுதான் பெறுமதி.

நீ சிரிப்பாய்
உந்தக் கதைகளால் என்ன பயன்?
தீர்ப்புகளும் நிவாரணங்களும்
சென்ற சந்தர்ப்பங்களை
திருப்புவதற்கா?...
...
இனிமேலும்
பிறக்க வேண்டாம்.
தவறியேனும்...
நான் சொல்வது
இந்த மானுட உலகிற்கு
சரிப்பட்டு வராது
தெரியவில்லையா.....
எல்லா இடங்களும் குப்பையாகி...
இத்தனைக் காலமேனும் நீ இருந்தது
அறியாயம்!
பதினைந்து வருடங்கள்!
என்ன பெற்றுக் கொண்டாய்?
குறைந்த பட்சம்
தங்கையை???
அவள் வருவாள் என்றா
இந்த இரண்டு வருடங்களாக
நீ பார்த்துக் கொண்டிருந்தாய்?
உனக்குத் தெரியாது
அப்படி ஏதும் நடக்காது
காணாமற் போனோர் குறித்த
தகவலேதும்.....

எத்தனைப் பேர் பார்த்துக் கொண்டிருக் கிறார்கள்...

இவ்வளவும் நடந்த பிறகும்
பெரிய மனுசி போல் நீ
சடலங்களின் மீது பாய்ந்து
ஒரு விரலில் கோர்த்து
கொண்டு வந்தவள்
சிறுமி...
தங்கை...
...
அவளைக் கொண்டு சென்றது யார்?
எங்கே அவளைக் கொண்டு சென்றார்கள்?
எதற்காக?

கடைசி நொடியிலும் உனது தலை குழம்பி யிருந்தது.

...
நீ சரிதான்...

இன்னும் எதற்காகப் பார்த்துக் கொண்டிருப்பது?...

இன்னும் எதைப் பெற்றுக் கொள்வதற்காக?...
...
விட்டுச் செல்ல முடியாத
உனது ஒரே காரணம் அப்பம்மா!...
சாவு வீடுகளுக்கு செல்வதையே
பார்த்துக் கொண்டிருந்தவள்தானே நீ...
சுப நேரம் ...
கல்லாக்கிக் கொள்
பூவின் மென்மையை?...

இந்தளவிற்கு ஒப்பாரி வைப்பது எதற்காக என்பதை அப்பம்மாவுடன் சேர்ந்து போட்டிக்கு ஒப்பாரி வைத்துக் கொண்டிருந்த எவருமே அறிந்திருக்க வில்லை.

எல்லோரும் ஒப்பாரி வைப்பதற்கு இச் சந்தர்ப்பமேதான் காரணமாக இருந்தது.

பெட்டை.

அவள் தூக்கிட்டு இறந்து விட்டாள்.

யுத்தம் முடிந்து இரண்டு வருடங்கள் சென்ற பின்பும் ...

மனிதாபிமான நடவடிக்கையிலிருந்து உயிர் பிழைத்து வந்த பின்பும்

நாதியற்ற ஒருத்தியாய் அகதி முகாமில் இருந்த போது அப்பம்மா கண்டுபிடித்து, கஷ்டங்களை அனுபவித்து... இந்த வீட்டில் வாழ்வதற்காக கூட்டி வந்ததன் பின்பும்,

மேலும் பெரும்பாலானவர்கள் ஷெல் விழுந்து இறந்த போது திடீரென... கண்களுக்கு முன் பாக வெடித்துச் சிதறியவர்கள் அம்மாவும் அப்பாவும் மட்டுமல்ல என்பதை புரிந்து கொள்வதற்கு போது மானளவு காரணங்கள் இருந்ததற்கு பின்பும்

எல்லாவற்றையும் இழந்த மக்கள் புதிய எதிர் பார்ப்புகளை... கனவுகளை உருவாக்கிக் கொண்டு, போட்டி போட்டுக் கொண்டு, சண்டை, சச்சரவுகளுடன் வாழ முயற்சிப்பதை கண்டதற்கும், கேட்டதற்கும் பின்பும்

அவள் மிகவும் பிரியப்பட்ட அப்பம்மாவின் சேலையை கூரை கம்பத்தில் மாட்டி தூக்கிட்டு இறந்து விட்டாள்.

அவள் என்ன நினைத்துக் கொண்டு அதைச் செய்தாள்?

பெட்டை என்னதான் நினைத்திருப்பாள்?

பெட்டைக்கு என்ன நினைவுக்கு வந்திருக்கும்?

இந்த பதினைந்து வருடங்களில் பெட்டை கண்டவை, கேட்டவை, உணர்ந்தவை எவை?

வாழ்க்கை என்று அறிந்திருந்த, அன்போடு அரவணைத்துக் கொண்டிருந்த வாழ்க்கையின் அர்த்தம் சூனியம் என்றா?

பாரம்பரியங்கள், அர்த்தங்கள், சம்பிரதாய சடங்குகள், உரிமைகள், மரபுகள்... என்பவற்றின் பொய்யையா?

வாழ்க்கை என நாம் நினைத்துக் கொண்டிருப்பது நிம்மதியின்மை, அதிருப்தி, பாதுகாப்பின்மை என்பன நிறைந்த பாரிய மோதல் மட்டுமே என்பதையா?

நிகழும் எதுவுமே இல்லை என்ற விடயத்தையா?

வாழ்வதன் கடினத்தையா?

இறப்பதன் வசதியையா?

யுத்தத்தின் ஊடாக நடந்து வரும் போது அவள் கண்ட...

நாம் காணாத...

...

எது?

எனக்குத் தெரியும். இல்லை, உண்மையை சொல்லப் போனால் எங்களுக்குத் தெரியும்...

நான் கூறுவது பொய்யா?

அறிவு உள்ள... பயபக்தி உள்ள... புண்ணியம் உள்ள... குணம் உள்ள... தனம் உள்ள... பாண்டித்தியம் உள்ள... உள்ள... உள்ள... உள்ள...

முதியவர்கள் என்ற வகையில்...

அப்படித்தானே? எங்கள் எல்லோருக்கும் தெரியும்.....

எங்களுக்குத் தெரியாதது என்னதான் இருக்குது பெட்டை?

என்றாலும் நாங்கள் தெரியாதவர்களைப் போலிருப்போம்.

அப்படித்தான், எங்களுக்கு உங்களைப் போல் இயலாது.

வெற்றிபெற... பாதுகாக்க... மேற்கொண்டு செல்ல...

எங்களுக்கு இச் சந்தர்ப்பத்தில், நிகழ்காலத்தில் வாழ இயலாது..... எங்களுக்கு அது தெரியாது... எதிர்காலம் குறித்து அச்சத்துடன், நிச்சயமற்ற வகையில், பெரிய எதிர்பார்ப்புகளால் நிரம்பிய... கடந்த காலம் குறித்த வைராக்கியத்துடன் கிடைக்காதவை குறித்து வேதனையுடன்... விரக்தியுடன்... பயத்துடன்... சந்தேகத்துடன் வெறி பிடித்து

இனி?... எப்படி நாங்கள் இச் சந்தர்ப்பத்தில் மகிழ்ச்சியுடன் இருப்பது, அன்புடன் இருப்பது?... இன்னொருவருக்கு அன்பு செலுத்துவது?...

"எல்லா உயிர்களும் இன்பமடையட்டும்" சொல்ல இயலும். எனினும் அதனிடையே தோன்றும்... நான் இன்பமடையட்டும்... எனக்கே கிடைக்கட்டும். எனக்கே சரிவரட்டும்... இல்லையேல் என்னைச் சார்ந்தவர்களுக்கு... எனது உறவுகளுக்கு... கூடி உண்டு, குடித்து மகிழும் நண்பர்களுக்கு, எனது நாட்டுக்கு,... எனது இனத்திற்கு, எனது மதத்திற்கு, எனக்கு. எனக்கு. எனக்கு... மன்னிக்க வேண்டும்.

இவை இப்போது உனக்குத் தேவையற்றது. இப் பயணத்தில் உன்னைப் போன்ற சின்னவஉகள் கைவிடப்படுவர்தான். இதற்கு உலக தர்மம் என்று நாம் கூறுவோம். எங்களால் எதுவும் செய்ய முடியாது என்று.

இல்லை... இல்லை... இயற்கையின் தர்மமல்ல... அது வேறொன்று.

அதனால் நான் கூறுகிறேன்.

நீ சரி.

எதற்கு?

சடலத்தை கொண்டு செல்வதற்காக வந்திருந்த இரண்டு ஆண்களைக் கண்டதும் அப்பம்மா நடுங்கிப் போய் விட்டாள். கடவுளே! பெட்டையை இவர்கள் கற்பழித்து விடுவார்களோ?

அம்மன் கோவிலுக்கு ஓட வேண்டும் போல் அப்பம்மாவிற்கு தோன்றிற்று. பெட்டையின் பாதுகாப்பு!

அந்தக் காலத்தில் அப்பம்மா இங்கிருந்து பெட்டைகளைப் பார்ப்பதற்காக வன்னிக்கு சென்ற போதெல்லாம் அம்மன் கோவிலுக்கு செல்வது வழக்கம் ...ம்ம்ம்... அது அந்தக் காலம்.

அப்பம்மாக்கள் இப்படித்தான்.

காலம் மாறிவிட்டது என்பது நினைவுக்கே வருவதில்லை.

மனிதாபிமான நடவடிக்கைக்குள் சிக்கி, எங்களுக்குத் தெரியாத, நாங்கள் நினைக்காத, நாங்கள் பார்த்திராத, நாங்கள் கூறாத, நிறையவே சம்பவங்களுக்கூடாக நடந்துவந்து தனித்து... முகாமுக்குள் சிறைபட்டு...

அந்தக் கால கட்டத்தில் என்ன நடந்தது என எவருக்குமே தெரியாது. எவரும் கூறவுமில்லை. எவரும் கேட்கவுமில்லை.

இப்போது இந்த சடலத்தில் எதைப் பாதுகாப்பது என அப்பம்மாவிற்குத் தோன்றவே இல்லை. அப்பம்மாக்கள் இப்படித்தான்.

அஞ்சலி,

நாங்கள் சௌந்தர்யத்தில் இருக்கின்றோம்.
சௌந்தர்ய வீதியில்
நீ மரணத்தைக் கண்டிருந்தாலும்
அழியாத்தன்மையை
கண்டாலும்

நீ சிரிப்பதானது
காணாத கண்களுடன்
கேட்காத செவிகளுடன்
இருக்கும் எங்களுக்கும்
நப்பாசையுடன்
வைராக்கியத்துடன்
மமதையுடன்
குருடாகி
மூடர்களாக இருக்கும் எங்களுக்கும்
அஞ்சலி...
நீ
உரிமை, உரித்து
மட்டுமல்ல
விறகுக் கட்டைகளும் கேட்காது
இறுதி ஊர்வலம் போகிறாய்......
இனி..... இப்போது
விடைபெறும் சந்தர்ப்பம்

அப்பம்மா அன்றிரவு கனவு கண்டாள். பெட்டை வானத்தில் மிதந்து கொண்டிருந்தாள், மேகத்தைப் போன்று.

அப்பம்மா பெட்டையை அருகில் வரும்படி கத்தினாள். அவள் சிரித்துக் கொண்டே மேலும் தூரத்திற்குப் போனாள்.

"அப்படி என்றால்... தங்கை? தகவலேதும் உண்டா?... மற்றவர்கள்..."

எங்கே?... அதையெல்லாம் கேட்பதற்கு ஏது வசதி?

அவளுக்குக் கணக்கே இல்லை.

"அம்மாவையும் அப்பாவையும் கண்டாயா?

அவர்களுடன் சென்ற மற்றவர்களை?

அவர்கள் எல்லோரும் அப்படியே இருக்கிறார்களா? இப்போதாவது மகிழ்ச்சியுடன் இருக்கிறார்களா?"

இல்லை, இல்லை... இதில் எதையுமே கேட்க அப்பம்மாவால் இயலவில்லை. அவள் மிதந்து கொண்டே சென்றுவிட்டாள். இன்னும் தூரத்துக்கே சென்றுவிட்டாள்.

அவள் மிகவும் விரும்பியிருந்த அப்பம்மாவின் சேலை கூந்தலைப் போல் அவள் பின்னாலேயே இழுபட்டுச் சென்றது... பெட்டை.

# நூல் அறிமுகம்



**நூல் : அம்மாவின் உலகம்**
**(சிறுகதைத்தொகுதி)**
**வெளியீடு : ஜீவநதி**
**ஆசிரியர் : த.கலாமணி**
**விலை : 200/=**



**நூல் : ஏனிந்தத் தேவாசுர யுத்தம்**
**(கவிதைத்தொகுதி)**
**வெளியீடு : ஜீவநதி**
**ஆசிரியர் : த.கலாமணி**
**விலை : 150/=**



**நூல் : புதிய கண்ணோட்டங்களும் புதிய பார்வைகளும்**
**வெளியீடு : ஜீவநதி**
**ஆசிரியர் : த.கலாமணி**
**விலை : 200/=**



**நூல் : மாற்றம் காணும் உலகுடன் இணைதல்** (கல்வியியற் கட்டுரைகள்)
**வெளியீடு : ஜீவநதி**
**ஆசிரியர் : த.கலாமணி**
**விலை : 350/=**



**நூல் : இளையோர் இசைநாடகம்**
**(5 இசைநாடகங்கள்)**
**வெளியீடு : ஜீவநதி**
**ஆசிரியர் : த.கலாமணி**
**விலை : 200/=**

–ராதா

# காதல்காவியங்களை அலசாமல்

## மறைந்த இலக்கிய நாயகன்

# “மேலங்கி கொகேல்”


“நாங்களெல்லாம் கொகேலின் மேலங்கி யிருந்து உருவானவர்கள்” என ரஷ்ய நாவலாசிரியன் டாஸ்டாவஸ்கி கூறினார். ஆம்! ரஷ்யாவை மக்களிற்குத் தனது எழுத்து வன்மையால் அறிமுகப்படுத்திய உண்மை இலக்கியத்தின் சிகரம். ரஷ்ய இலக்கியம் தான் ரஷ்யப் புரட்சிக்கு வழி காட்டியது. ரஷ்யப் புரட்சி ரஷ்ய இலக்கியத்தை உலகிற்கு படம் பிடித்தக் காட்டியது.

இந்த ரஷ்ய இலக்கியமானது பொழுது போக்கிற்காக பேனா பிடிக்கப்பட்டு எழுதப்பட்டது அல்ல. தன்பத்தின் கடைசி எல்லையில் நின்றவர்களைத் துன்பப் பட்டவர்களே சித்திரித்த காவியம் இதற்கெல்லாம் உறு துணையாக நின்றவர் தான் கொகேல். ரஷ்ய வசன காவியங்களின் உற்பத்தியாளர். அவருடைய முழுப் பெயர் நிக்கோலி வாஸ்ஸிலிவிச கொகேல் என்பதாகும். அவர் 1809ம் ஆண்டு பங்குனி மாதம் 31ம்நாள் ரஷ்யாவில் உள்ள உக்ரெய்னில் அவதரித்தார். கொகேலுடைய தந்தை சிறந்த அறிவாளியும் இலக்கியப் பற்றும் கொண்டவர். இதனால் கொகேலிற்கு சிறுவயது முதலே எழுத்தின் மேல் பிரியம் அதிகம். 19 ஆவது வயதில் கீவ் நகரத்தில் படிப்பை முடித்துவிட்டு பீட்டர்ஸ் பார்க் நகரத்திற்கு வேலை தேடிப் போனார். அங்கு அரசாங்கத் திணைக்களத்தில் எழுது வினைஞர் ஆகக் கடமையாற்றினார். அத்துடன் அங்குள்ள நாடக அரங்கிலும் வேலை தேடினார். ஆனால் அங்கோ அவரிற்கு வேலை மறுக்கப்பட்டது. இதனால் மன முடைந்த கொகேல் தான் பார்த்த வேலைக்கு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு முழு எழுத்தாளனாக மாறினார்.

1829ஆம் ஆண்டு “டிகாங்காவின வயற் புறத்திலே சில இரவுகள்” என்ற கட்டுரை ஓவியங்களை வெளி யிட்டார். இது கொகோலிற்குப் பெரும் புகழை ஈட்டிக் கொடுத்தது. இதன் பின் இப்பொழுது இலக்கிய உலகில் பெரும் புகழுடன் விளங்கிய புஸ்கின் கொகேலைப் பற்றிக் கேள்வியுற்று அவருடன் நட்புறவு கொண்டார். இரு பெரும் இமயங்கள் இலக்கிய உலகில் சந்தித்தமை இந்த உலகத்தில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தின.

கொகேல் எழுதியவைகளில், உலகில் இன்று வரை சிகரத்தில் வைத்துப் போற்றக்கூடிய காவியங் களாக “மேலங்கி”, “இன்ஸ்பெக்ரர் ஜெனரல்”, “இறந்த மனிதர்கள்” திகழ்கின்றன.

மேலங்கி “கொகேலுடைய எழுத்து வன்மையை மிகத்திறமையாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளது. ஏழ்மையில் வாடிய ஓர் அரசாங்க ஊழியனின் சோகச்சித்திரம். அவனுடைய வீட்டு வாசலிற்கு இன்பத்தின் முகவரியே தெரியாது. எந்த வித ஆசையுமற்ற அவன் அந்த அலுவலகத்தில் நகலெடுக்கும் வேலையை ஆர்வமாகச் செய்து வந்தான். அவனுக்கு திடீரென்று ஓர் ஆசை வருகிறது. கிழிந்த மேலங்கியை எறிந்து விட்டுப் புதிய மேலங்கி வாங்க வேண்டுமென்று. அவனிடம் பணம் ஏது? வறுமையானவன் எப்படி வாங்குவான்? பழைய செருப்பு சீக்கிரம் தேய்ந்து விடுமோ எனப்பயந்து மெதுவாக நடந்து. இரவில் விளக்கு எரிக்காமல் சிக்கன வாழ்க்கை நடாத்திச் சிறுகச் சேமித்து புதிய மேலங்கியை வாங்கி அனிந்து கொள்கிறான். அந்தோ! பரிதாபம். அன்றிரவே கொள்ளையர்கள்



அதைக் களவாடி விட்டார்கள். இதனால் அவனோடு வேலை செய்த சக ஊழியர்களே அவனைக் கேலி செய்கிறார்கள். இதனால் ஏற்பட்ட சோகத்தால் குளிர் பிடித்து இறந்து விடுகிறான். அவனைக் கேலி செய்த ஊழியனின் மேலங்கியை, ஆவியாக வந்து அபகரிக்கிறான்.

வறுமையில் வாடி அறிவிருந்தும் வாழவழியற்று வாழ்க்கையில் இன்பம் காணாமல் மடியும் அத்தனை கோடி மனிதரின் பிரதி விம்பம் தான் மேலங்கி.

அடுத்த காவியம் தான் "இன்ஸ் பெக்ரர் ஜெனரல்". இந்தக்காவியம் வெளி வந்த பின் கொகேல் நிரந்தரமாகவே நாடக அரசன் பதவியைப் பெற்று விடுகிறார். இது புஸ்கினின் தூண்டுதலால் எழுதப் பட்டது. அப்போது செயற்பட்டுக் கொண்டிருந்த அரசாங்க ஊழியர்களின் கீழ்த்தரமான செயல்களை வெளிக்காட்டும் ஓர் சிந்தனை நகைச் சுவைச் சித்திரம்.

அரசாங்கத்தின் அந்தரங்க ஊழியன் தான் இன்ஸ்பெக்டர் ஜெனரல். அவர் எந்த நேரமும் ஊழல்களைக் கையும் களவுமாகப் பிடிப்பதற்கு வரலாம் என எல்லா அரசாங்க ஊழியர்களும், கவர்னர்களும் உஷாராகவே இருந்தனர். என்ன வேடத்தில் வருவார் என யாருக்கும் தெரியாது. ஆனால் ஓர் நகரத்துக் கவர்னரோ வதந்தி பரப்புவர்களை நம்பி ஓர் பரதேசியை இன்ஸ்பெக்ரர் ஜெனரல் எனத் தீர்மானம் செய்து எல்லா வித மரியாதையும் செய்கிறார். அது தான் கதையின் சராம்சம்.

சுருக்கமாகக் கூறின் இன்ஸ்பெக்ரர் ஜெனரல் உலகத்தர வரிசை நாடகங்களில் 1ஆம் வரிசையைப் பிடித்தது. நாடகம் அரங்கேறிய போது கொகேவல் ஒரே ஒரு நபரிற்குத் தான் பயந்தார். அவர் தான் அவருடைய மனச்சாட்சி.

அடுத்தது மிகப் பெரும் கற்பனைத் திறனுடன் எழுதப் பெற்ற "இறந்த மனிதர்கள்". இந்நூலிற்குப் புகழும் எதிர்ப்பும் கிடைத்தன. ரஷ்யாவின் உண்மை வாழ்க்கையை அப்படியே படம் பிடித்துக் காட்டியது. மனதில் வஞ்சகத்தை வைத்துக் கொண்டு சமூகத்தில் நல்ல பெயரோடு வாழும் வீணர்களைப் பற்றி தெளிவாகக் கொகேல் இங்கு எடுத்துக் காட்டியுள்ளார்.



பதினொரு அத்தியாயங்கள் கொண்ட இறந்த மனிதர்களின் 1ஆம் பாகம் 1846 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அதன் பின் ஆறு ஆண்டுகள் உயிரோடிருந்தார். அதற்குப் பின் அவருடைய மனநிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் இறந்த மனிதர்களை முற்றுப் பெறாமல் செய்து விட்டது.

அவர் ஒரு மதவாதி கடைசி காலங்களில் மதத்தில் தீவிர நம்பிக்கை கொண்டிருந்தார். இயேசுவின் பிறந்த இடமான பெத்லகேயிற்குச் சென்றார். சொந்தப் பணத்தையெல்லாம் தர்ம காரியங்களில் செலவு செய்தார். கடைசியாக மனிதனின் துர்க் குணங்களையெல்லாம் விவரித்து எழுதுவது மதத்திற்கு விரோதமான செயலென எண்ணினார், இறப்பதற்கு முன் எழுதி வைத்திருந்த இறந்த மனிதர்கள் இரண்டாம் பாகத்தை நெருப்பில் இட்டார். இதனால் உலக இலக்கியத்திற்கு மாபெரும் சரிவு ஏற்பட்டது.

> கொகேல் எந்த விதக் காதல் காவியங்களையும் படைக்கவில்லை. அவருடைய உருவகங்கள் எல்லாம் மிருது தன்மையற்றவை. கற்பனை இல்லாத நிஜ உருவங்கள். அதனால் தான் கொகேல் உண்மை இலக்கியத்தின் தந்தை எனப் போற்றப்படுகிறார்.

கொகேல் எந்த விதக் காதல் காவியங்களையும் படைக்கவில்லை. அவருடைய உருவகங்கள் எல்லாம் மிருது தன்மையற்றவை. கற்பனை இல்லாத நிஜ உருவங்கள். அதனால் தான் கொகேல் உண்மை இலக்கியத்தின் தந்தை எனப் போற்றப்படுகிறார். ரஷ்ய இலக்கியம் காலத்தால் இளமையானாலும் உலகிற்கு அறிவின் முதிர்ச்சியை உபதேசம் செய்கிறது. இதற்கெல்லாம் காரணமானவர்களில் தலை சிறந்தவர் தான் கொகேல். இவர் 1852ஆம் ஆண்டு பங்குனி மாதம் நாலாம் நாள் நீண்ட நாள் வலியின் மூலம் மனஅழுத்தற்றிற்குட்பட்டு கால மெய்தினார். அவர் புகழ் உலகம் உள்ள வரை வாழும் என்பதில் ஐயம் இல்லை.



# அகிலத் தரமான ஆப்கானிஸ்தான் சினிமா

இ.சு.முரளிதரன்

மதத்தின் ஒளி வட்டத்தினை ஒடுக்குமுறைச் செல்நெறிக்கு உறுதுணையாக அவாவும் தலிபான்களின் மகளிர் விரோத மனப்பாங்கின் காத்திரமான பதிவாக "OSAMA" என்ற துன்பியற் படிமம் காணப்படுகின்றது. siddiq Barmak என்ற ஆப்கானிஸ்தான் இயக்குநர் மெய்ந்நிகழ்வொன்றினை பின்புலமாகக் கொண்டு "ஒசாமா" திரைப்படத்தினை உருவாக்கியுள்ளார். பொருளாதார அழுத்தத்தால் ஆண் வேடந் தரிக்கும் சிறுமியின் அவலத்தினை அற்புதமாக ஊடக மொன்றின் மொழியில் அழகுற வெளிப்படுத்தியுள்ளார்.

தலிபான்களின் வன்மம் பிரவாகிக்கும் ஆட்சியில் பெண்களுக்கு தொழில் நாடும் உரிமை மறுக்கப்பட்ட சூழலில் பாட்டி – தாய்– மகள் என்ற மூவரை மட்டுமே உறுப்பினராகக் கொண்ட குடும்பம் வாழ்வினை எதிர்கொள்ள தடுமாறுகிறது. போரின் உக்கிர பசிக்கு ஆடவர்கள் இரையானதால், பன்னிரு வயதுச் சிறுமிக்கு ஆணவேடமிட்டு வேலைக்கு அனுப்பத் தயாராகின்றனர். சிறுமியின் தலைமுடி கத்தரிக்கப் படுகின்றது. சிறுமியோ தலைமுடி மீது கொண்ட உச்சமான பற்றாலும், அறியாமையாலும் சாடி யொன்றில் கத்தரிக்கப்பட்ட பகுதியினை நட்டு நீரூற்று கிறாள். தந்தையின் நண்பரது ரொட்டிக்கடையில் அச்ச மயமான உணர்வுகளோடு சிறுமி பணிபுரிகிறாள். உல்லாச உலகினை இழந்துவிட மனமின்றிக் கடையினுள் "ஸ்கிப்பிங்" விளையாடுகிறாள். சிறுவர் களை வலுக்கட்டாயமாகப் படையில் இணைக்கும் தலிபான் ஒருவன், அவளை பலவந்தமாக அழைத்துச் சென்று விடுகிறான். ஏராளமான சிறுவர்களுக்கிடையில் "எஸ்பண்டி" என்ற சிறுவன் ஏற்கெனவே அவளை நன்கறிந்ததால் நட்புக் கொண்ட ஆண் வேடங்கலையாமற் பாதுகாக்க முயல்கிறான். அவளுக்கு "ஒசாமா" என்று பெயரிடுகிறான்.

எனினும் மென் கரங்களும் மிருதுவான பேச்சும் சிறுவர்களை ஐயங்கொள்ள வைக்கின்றன. நம்பகத்தன்மையை ஏற்படுத்த "ஒசாமா" மரத்தின் மேலேறுகிறாள். கீழிறங்க முயன்று இயலாத பட்சத்தில் தலிபான்களால் இறக்கப்பட்டு, அச்சத்தைப் போக்குவதற்காக கயிறு கட்டி கிணற்றிலிறக்கப்படு கிறாள். வெளியேற்றப்பட்டபோது கால்களிடையே பெண்மைக்குரித்தான குருதிக்கசிவு தென்பட வேடங்கலைகிறது. குற்றமிழைத்தவர்களுக்கு தண்டனை வழங்கும் நாளில், முதியவர் ஒருவருக்கு நான்காவது மனைவியாக்கப்படுகிறாள். கிழவன் கழுதை வண்டியில் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்கிறான். இன்பம் துய்த்த பின் வெந்நீரில் குளிக் கிறான். சிறுமி "ஸ்கிப்பிங்" ஆடிய முன்னைய காட்சி ஒன்று தோன்றி மறையப் படம் நிறை வடைகிறது.

யுத்தம் பெண்களின் மீது நிகழ்த்தி வரும் வன்மத்தின் அதிர்வினை "ஒசாமா" நன்கு வெளிப் படுத்தியுள்ளது. தலிபான்களின் கொடூர முகத்தை படம் பல்வேறு இடங்களில் பதி வாக்கியுள்ளது. மகிழ்நெறிப் பாடல் புலம்பல் ஒலியாக மாறுதல், காணொளிப் பதி வாளனை சுட்டுக் கொல்லும் போது "பர்தா"வில் தெறிக்கும் உதிரத்துளிகள், வேக நீர் பாய்ச்சும் போதான குழந்தையின் அவலம் போன்ற பல காட்சிகள் சிறப்பாக அமைந்து உள்ளன. பனித்திரை சுவறிய கண்ணாடியில் வரையப்படும் தலைமுடியுடைய சிறுமியின் படிகக் கோட்டுருவும் மறுபுறம் தெரியும் பெண்களின் ஓட்டமும் தொடரும் தலிபான்களின் வாகனமும் குறித்த காட்சி உன்னத கவிதையாகவே மாறிவிடுகின்றது. பெண்ணுட லின் வெளிப்பாடுகளை கொண்டு வணிக ஆதாயம் தேடாமல் விடுதலை குறித்த பிரக்ஞையினை தொற்ற வைக்கும் "ஒசாமா" கனதியான படைப்பு முயற்சி யென்பதை தனது ஒவ்வொரு சட்டகத்திலும் உறுதி செய்துள்ளது.





# கனவுகளைத் தின்றவன்

சுதர்மமகாராஜன்

உறையும் இருளில் உச்சிகளில் நித்திரை, அவருக்கு பிடிபடாது அலைந்து திரிந்தது. பனிக்காற்று முகத்திலறைய யன்னல் கம்பிகளிடையே பொதிந்த முகம் விறைத்தது. சலனமற்று அவளுக்குள் உருண்டு புரளும் அவஸ்தையின் எச்சங்களை இருளோடு கலக்க விட்டபடி கலங்கி நின்றாள்.

வீடே தூக்கத்தில் சுருண்டு கிடக்க, அர்த்த ஜாமத்தில் யன்னல் கதவுகளை திறந்து விட்டபடி இரவின் மடியில் முகம் புதைத்து அழுதாள். இருளின் அகோர முகம் எப்போதும் அவளுக்கு பயத்தை கொடுத்த தில்லை. நேற்று வரை கூடவே வந்து ஒவ்வொரு இரவு களையும் அதனுள் புதைவுறும் தன் உணர்வுகளையும் பகிர்ந்தும், பங்கிட்டும் இருந்திருக்கிறது.

ஆனால் இன்று அது கொடுக்கும் பீதி தனக்குள்ளே ஏற்படும் மாற்றங்களை கண்டு வெளிக் கிளம்பும் ஒரு கோரமாய் உணர்ந்தாள்.

உடலில் ஏற்படும் சிறு சிறு மாற்றங்கள் அவளுள் ஒரு வகையான மாற்றத்தை ஏற்படுத்தின. ஆரம்பத்தில் இருந்த இலேசான தலை சுற்றல், அடி வயிற்றின் பிடிப்பு என்பன நாளுக்கு நாள் அதிகரிப்பதன் காரணம் அறியாது சுருண்டு படுத்துக் கொண்டாள். அம்மாவிடம் சொல்லலாமா? பலமுறை தோன்றி மறை யும் கேள்வி அப்படியே பின்வாங்கி அவளைப் போல் அறைக்குள் முடங்கி சுருண்டு படுத்துக் கொள்கிறது.

பிறர் முகம் பார்த்து கதைக்க மனம் அஞ்சி அவதியுற்று உள்ளுக்குள் உறும் துக்கம் கண்ணீராய் வடித்து அவளை அறைக்குள் சிறுக சிறுக கரைத்துக் கொண்டிருந்தது.

தனக்குள் ஏற்படும் இந்த மாற்றத்தை எத்தனை நாட்களுக்குத் தான் மறைப்பது? வெகு விரையில் அம்மா அறிந்து கொள்வாள். அதன் பின் அவஸ்தையையும். கண்ணீரையும் நினைக்கும் போது அவள் நெஞ்சு அடைத்தது. முகம் சிறுத்து உதடு கடித்து தன்னையறியாமலேயே விம்மினாள். விம்மலின் ஒலி உதடுகளின் இடைவெளிவழியே வெளிக்கிளம்பி அவருடம்பை சிறுகுலுக்கி விட்டு இருட்டோடு கலந்தது.

யன்னல் கம்பிகளில் முகம் புதைத்து எட்டிய தூரம் வரை இருட்டோடு பயணித்துக் கொண்டே இருந்தாள். அதன் வழியே அவள் இறந்தகால நினைவுகளில் நிலைத்து நின்றவர்கள் மாறிமாறி வந்து போனார்கள். அதில் எப்போதும் கூடவே, அன்று வரை இருக்கும் அம்மா, என்னை கண்கலங்காமல் பாதுகாத்து இடையிலேயே விட்டுச்சென்ற அப்பா, வெளிநாடுகளில் குடும்பமாகிப் போன தம்பி தங்கைகள் எல்லோரும் முகம் காட்டி தன்னைப் பார்த்து பரிதவித்து கத்துவதாய் உணர்ந்தாள்.

அவர்களிடையே திடீரெனத் தோன்றி மறைந்தான் விஜயன். அவன் இன்று எங்கிருப்பான். உள்ளுக்குள் தேடல் தீவிரமாகியது. முதன் முதலாக தன் மனதுக்குள் தோன்றிய காதலுக்கு சொந்தக்காரன். சில காலம் தன்னையும், மனதையும் மேகமாக மிதக்க விட்டவன்.

பேசாமல் அவனை கல்யாணம் கட்டி யிருக்கலாம். இன்று தன் நிலை அறிந்து கொண்டால் அவன் துக்கப்படுவானா? தூர்ந்து திரிவானா? என்ற கேள்வி! கண்களை மூடி அவனை நினைத்துப் பார்த்தாள். மூடிய கண்களை கவிழ்த்து கண்ணீர் கண்ணத்தின் வழியே புரண்டோடியது.

இடுப்பில் தோன்றி மறையும் வலியும், அடிவயிற்றின் கணமும் அவளை அடிக்கடி சோர் வாக்கியது. சாப்பாட்டை கண்டாலே ஒரு அருவருப்பும் எரிச்சலும். எண்ணிப் பார்க்கையில் மாதவிடாய் தள்ளிப்போய் மூன்று மாதங்களாகிறது. முதல் மாதம் சிறு சிறு துளியாய் வெளிப்பட்டு நின்று போனதின் பின்னாலான உடலில் ஏற்படும் மாற்றங்களும், அதனா லான உபாதைகளும் யாரிடம் பரிமாறிக் கொள்ள இயலாது உள்ளுக்குள் புழுங்கினாள்.

அம்மாவுக்கு இன்றோ நாளையோ தெரியத் தான் போகிறது. அப்போது அவள் இவ்வளவு நாளும் காட்டிக்கொண்டிருந்த கனவுக்கோட்டையின் அழிவை எப்படித் தாங்கிக்கொள்ளப் போகிறாள்?

கரையும் கனவுகளின் வழியே பரந்த இருள் வெளியில் தானும் கரைந்து மறைந்து விட்டாள். நாளை என்றொரு பொழுதை கடந்து விடலாம் என்ற எண்ணம் எழ, மூடிய கண்களை திறந்து இருட்டைப் பார்த்தாள். கண்களில் மூச்சு இமைகளுக்கிடையில் விரிந்து கண்களை திரை உடைந்து, உதித்து. அதன் கூச்சம் மீண்டும் கண்களை மூடிக்கொண்டாள்.

மூடிய கண்களின் வழியே தன்னைப் பார்த்து குலுங்கி, குலுங்கி சிரிக்கும் ரமணனின் முகம் தோன்றி மறைந்தது. வீடு தேடி வந்தவனை அவமானப்படுத்தி விரட்டியதன் பலன் இது. அவன் அறிந்து கெண்டால் ஊருக்கே பறைசாற்றி கொண்டாடி மகிழ்வானா?

"பிள்ளை ரமணன் நல்லவன் ... நல்ல உழைப்பாளி பேசி முடிப்பமே ..."

அம்மாவுக்கும் அவனில் விருப்பம். இருந்தும் தனக்குள் இருந்த பிடியாமைக்கு யார் காரணம்? சிலநேரம் அன்று தலையாட்டியிருந்தால் இன்று பரிதவிப்பும், ஒழிச்சலும் இருந்திருக்காது.

இன்று அடி மனதில் ரமணன் நல்லவனாகவே படுகிறான். அந்த நினைப்பு அவளை வெட்கி தலை குனிய வைத்தது.

தலை சுற்றலும், இடுப்பின் கணமும் அதனா லான உலைவும் அடிக்கடி அவளுக்கு அவஸ்தையை கொடுத்தது. முடிந்த வரை அவற்றை அம்மாவுக்கு உணர்த்தாமலிருக்கவே முயற்சித்தாள்.

அம்மாவுக்கு தெரியாமல் கோயிலுக்கு செல்வதாய் போக்குக்காட்டி டாக்டரிடம் சென்றதில் தான் அது உறுதியானது. ஆரம்பத்தில் இருந்த சந்தேகம் அதற்குள் எட்டிப்பார்த்த சிறு நம்பிக்கை எல்லாமே டாக்டரின் உறுதிப்படுத்தலால் சிதறுண்டு. மூர்ச்சயாய் வீடு வந்து சேர்ந்த போது, இவ்வளவு காலமும் தனக்குள் குடிகொண்டிருந்த கனவுகளை பாதையில் எறிந்து வெறுங்கையோடு வந்ததாகவே உணர்ந்தாள்.

அம்மாவின் முகம் பார்க்க அஞ்சி அடுப் படிக்குள் சுருண்ட பூனையாய், அறைக்குள் சுருண்டவள் பாயில்படுத்தும் இரவுகளில் விழித்து இப்படி புலம்பி அழுதுகிடந்தாள்.

இதற்கெல்லாம் யார் கரணம்? நானா? அவனா? அவளுக்குள் கேள்வி பூதாகரமாய் முன்நின்றது.

மனதின் தராசு தனக்குத்தானே குற்றம் சாட்டி அவள் பக்கமாக சரிந்தது. தனது பிடிவாததனமும், அளவுக்கதிகமான எதிர்பார்ப்பும், அலட்சியமும் தான் இதற்கு காரணம் என பட்டியலிட்டு தன்னையே வெறுத்தாள்.

மறுகணம் தராசு மறுபுறம் சாய்ந்து அவளுள் வாழும் அவனை காட்டியது. இவ்வளவுக்கும் அவன் தானே காரணம் சரியான நேரத்தில் அவன் வந்து சேர்ந்து தன்னை ஏமாற்றாமலிருந்தாள், இந்த நிர்கதி தனக்கு ஏற்பட்டிருக்காது.

அவளுக்குள் உலவும் அவனை வெறுத்தாள். ஒவ்வொரு நாளும் கனவுகளில் அவனின் அசைவு களையும், அலாவுதல்களையும் நினைத்து நினைத்து தூற்றினாள். தூற்றல் மீண்டும், மீண்டும் அவன் நினைவுகளை கிளறி வெளித்தள்ளியது.

விஜயனின் பிரிவுக்கு பின் வெகு நாட்களுக்கு பின் தன் மனதிற்குள் அவனின் வருகை அவளுக்கு மகிழ்ச்சியையும், உற்சாகத்தையும் கொடுத்தது.

ஆரம்பத்தில் அவன் விஜயனின் சாயலில் இருந்தான். அதனால் தான் என்னவோ ரமணனை பிடிக்காமல் அலட்சியப்படுத்தியதாய் உணர்ந்தாள்.


நாட்கள் செல்லச் செல்ல அவனில் இருந்த விஜயனின் சாயல் அழிந்து ஒரு சில நேரம் தனக்குப் பிடித்த நடிகனின் சாயலில் அலைந்தாள். இன்னும் சில நேரங்களில் தான் பார்த்த ரசித்த வீரனின் சாயலில் சிரித்தான்.

நாட்கள் அவன் நினைவுகளோடு நகர்ந்து கொண்டே இருந்தது. சதா அவன் மீதான எதிர்பார்ப் பும், நம்பிக்கையும் அவளை ஆட்கொண்டு மற்றவரை யெல்லாம் புறத்தள்ளி ஒதுக்கியது. ஆவனின் கம்பீரம், அழகு அனைத்தும் சேர்ந்து அவள் வருவோரை ஏழை யாய் பார்த்து, குறைகண்டு சிரிப்பதை தவிர்த்தாள். ஒரு நாள் அம்மா சலித்துக் கொண்டாள்

"எல்லாத்தையும் வேணான்னு தட்டிக் கழிக்கிற... யாரைத்தாண்டி ஒனக்கு பிடிச்சிருக்கு ..."

அம்மாவின் சலிப்பில் உள்ளுக்குள் சிரித்து அவனை நினைத்துக் கொள்வாள். ஒரு நாள் அவன் வருவான்! தன்னைப் போலவே அம்மாவுக்கும் அவனைப் பிடிக்கும். ஆப்போது ஊரே கூடி தனக்கும், அவனுக்கும் திருமணம் நடக்கும். அந்த பூரிப்பு அப்படியே பல நாட்கள் அவளை உட்சாகமூட்டி திரிய வைக்கும்.

மாதங்கள், வருடங்களாய் கடக்கும் போது



இவ்வளவு காலமும் அவனுக்காக சேமித்து பாதுகாத்து, பராமரித்து தன் இளமை ஆள் அரவமற்ற பாழடைந்த வீடாய் சிறுகசிறுக தூர்ந்து போவதை கண்கூடாக கண்ணாடிகள் உணர்த்திய போது அதிர்ந்து நின்றாள்.

இறுதியாக வந்தவன் பக்கவாட்டில் சற்று அவனைப் போலவே இருந்தான். உள்ளுக்குள் சிறு மகிழ்ச்சி அம்மாவிடம் வெட்கி தலையசைத்த மறுகணம் வந்தவன் தன்னை நிராகரித்ததன் வலி அம்மாவின் மடியில் முகம் புதைத்து ஒட்டு மொத்தமாய் அழுது தீர்த்தாள்.

அம்மாவும் சேர்ந்து அழுதாள். தன் மகளின் மங்கி விடும் இளமையின் நெடி அம்மாவை பதறவைத்தது.

மூப்பின் முடிச்சாள் ஒவ்வொன்றும் அவருக்குள் நெருக்க நெருக்க அதன் வலி முகத்தின் தென்படத் தெடங்குகையில் இப்போது இறுகி முடிச்சாய் இது!

எப்போதும் அவிழ்க்க முடியாத இந்த முடிச்சு, அவளின் இறுதி நம்பிக்கையை சிதறடித்து துளிர்க்க முடியாத மரமாய் பட்டு நின்றாள்.

இனி அவன் வர வேண்டாம் அப்படி வந்தாலும் அவன் குழந்தை தன் வயிற்றில் வளராது! சிதறிய கனவுகளின் எச்சங்கள் தன் காலடியில் மிதிபட்டு நொறுங்குவதை உணர்ந்தாள்.

தன் முதுமையின் நிழல் மகளில் படர்வதைக் கண்டு அம்மா பதறித் துடித்தாள்.

அவள் அவன் வரவுக்காக விடாது காத்திருந்த படி சுகித்து வீட்டுக்குள் சுழன்று கொண்டிருந்தாள்.

சில இரவுகளில் அவனின் நினைவு உடலின் இரகசிய பிரதேசங்களை வருடி வதைத்து விலகும் போது மூச்சு சிதற மல்லாக்கு படுத்தபடி வெறித்து கிடப்பாள்.

அவனுடனான உறவில் அவன் குழந்தை தனக்குள் வளர்வதாய் கனவு கண்டாள். குழந்தைகள் என்றாள் அவளுக்கு இஷ்டம். அதுவும் அவன் குழந்தையென்றால்?

அந்த நினைப்பு அவளை அப்படியே கண்கள் சொருக மயக்கம் வருவதாய் இருந்தது. ஒரு கையால் யன்னல் கம்பியை பிடித்தபடி மறுகையால் அடிவயிற்றை மெதுவாய் தடவினாள். தடவலின் தாக்கம் கண்களில் கண்ணீர் பெருகி வழிய குலுங்கி குலுங்கி அழுதாள்.

யன்னலின் வெளியே படர்ந்திருந்த தனிமை அவள் நெஞ்சின் துயரத்தை பகிர்ந்தபடி அவளை அழ விட்டு வேடிக்கை பார்த்தது. இப்படி நடந்து விடக்கூடாது என்பதற்காக தான் அம்மா அவசரப்பட்டாள்.

"பிள்ளை இந்த இடத்தையாவது பேசி முடிப்பமே..."

என்று இரண்டு மாதங்களுக்கு முன் அம்மா கூறிய போது அரை மனதில் அவள் தலையாட்டினாலும்

அந்த குளிர் பனியிலும் அவளுக்கு வியர்த்தது. அவனின் விதைகளுக்காக காத்திருந்த தன் ஈரநிலம் உலர்ந்து போனதன் அறிகுறிகள் வெளிக்கிளம்ப பிடிபடாது ஓடித்திரிந்த அவள் மனதுக்கு திடீரென்று நேற்று அம்மா வாங்கிக் கொடுத்த அதன் ஞாபகம் வந்தது. வியர்த்து விழும் முகத்தை கைகளால் வலித்து துடைத்தாள். சுவரில் தொங்கிக் கொண்டிருந்த பையில், துருத்திய அந்த பொதியை உருவி எடுத்தாள்.

ஒரு வெறியோடு சமையலறைக்கு ஓடி அடுப்படியில் இருந்த மண்ணெண்ணெய் போத்தலை எடுத்துக் கொண்டு பின் வாசலுக்கு சென்றாள்.


அந்த பொதியை கீழே எறிந்து அதன் மேலே மண்ணெண்ணையை கொட்டினாள்.

" இனி இது தேவைப்படது" முனங்கிய படியே தீர்க்குச்சியை உரசி வீசினாள். குபு குபு வென்று நெருப்பு மூள கலங்கிய படியே சுவாலையை பார்த்துக் கொண்டிருந்தாள்.

நெருப்பின் வேகம், பொதியின் மேலுறை உருகி வழிந்தது. பின் அதனுள்ளிருந்த ko tex துண்டுகள் எரிந்து சுருங்கி அழிவதை பார்த்துக் கொண்டேயிருந்தாள். கூடவே அவன் நினைவு களாகும். அவன் கொடுத்த கனவுகளும்.

# குடும்ப மருத்துவரின் இலக்கிய தாகம்

சிறந்த குடும்ப நல மருத்துவராக திகழும் டாக்டர் எம்.கே.முருகானந்தன் அவர்கள் அதிக இலக்கிய ஈடுபாடு கொண்டவரும் சிறந்ததொரு விமர்சகருமாவார். இவர் சிறந்த கவிதைகளையும், கட்டுரைகளையும், விமர்சனங்களையும் மேற்கொண்டு வருபவர். இலக்கிய நேசிப்பு மிக்க டாக்டரின் நேர்காணலை ஜீவநதி வாசகர்களுக்கு தருவதையிட்டு மகிழ்கின்றோம்



டாக்டர் எம். கே.முருகானந்தன்

**சந்திப்பு - பரணீ**

**பரணீ - ஈழத்து இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டுள்ளவர் நீங்கள். உங்களின் குடும்பப் பின்னணி, கல்விப் பின்னணி என்பன பற்றிக் கூறுவீர்களா?**

**டாக்டர் எம்.கே.** - ஐந்து பேர் கொண்ட குடும்பத்தில் மூத்தவன் நான். அப்பா புகையிரத் திணைக்களத்தில் உதவி அட்சகராக இருந்தவர். அம்மா எல்லா அம்மாக்களையும் போலவே அன்பையும் பாசத்தையும் ஒழுக்கத்தையும் விதைத்தவர். பருத்தித்துறையில் உள்ள வியாபாரமூலை நான் பிறந்த கிராமம். அமைதியான கிராமம். சோலி சுரட்டுக்குப் போகாத ஊரவர்கள். அரசாங்க உத்தியோகங்களும் வியாபாரமும் எம்மவர்களது முக்கிய தொழில்களாகும். மனைவியும் அதே ஊர். எனது எல்லா முயற்சிகளிலும் உதவியும் ஒத்தாசையாகவும் இருப்பவர். வளர்ந்த இரு பிள்ளைகள்.

ஆரம்பக் கல்வி அங்குள்ள மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலையில். பின்னர் பருத்தித்துறையில் உள்ள ஹாட்லிக் கல்லூரி. பட்டப் படிப்பு கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடம். கொழும்பு மருத்துவ பட்டமேற்படிப்பு நிலையத்தில் குடும்ப மருத்துவத் துறையில் டிப்ளோமா பெற்றேன்.

**பரணீ - உங்களுக்கு இலக்கியத்தில் எவ்வாறு ஈடுபாடு ஏற்பட்டது?**

**டாக்டர் எம்.கே.** - வாசிப்பில் ஆழ்ந்த ஈடுபாடுள்ள குடும்பப் பின்னணி. பாட்டியின் தகப்பனார் கண்ணாடி அப்பா என்போம். ஐம்பதுகளின் ஆரம்பமான அந்தக் காலத்திலேயே தினமும் வீரகேசரியும் கல்கியும் வாராவாரம் அவர் வீடு தேடி வரும். தொட்டுப் பார்த்து, அழகு பார்த்து, விரித்துப் பார்த்து, எழுத்துக் கூட்டிப் படித்தது எனப் படிமுறை

வளர்ச்சியாக எனது வாசிப்புப் பழக்கம் வந்தது.

அப்பா கலைமகள் அமுதசுரபி கொண்டு வருவார். அம்மா தீவிர வாசகி. அப்பா ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் வாசிப்பார். பக்கத்து வீடு பண்டிதர் பொன் கிருஷ்ணபிள்ளை. சிறந்த வாசகரும் பேச்சாளரும் ஆவார். அவரது வீடு நிறையப் புத்தகங்களும் சஞ்சிகைகளும் நிறைந்து கிடக்கும். தமிழ் புத்தகங் களுடன் National Geography அறிமுகமானது. அவருடன் தொத்திக் கொண்டு கூட்டங்களுக்குப் போவதில் கலைமகள் ஆசிரியர் கி.வா.ஜா, நா.பா, எமது ஊர் யாழ்ப்பாணன் முதலான பல இலக்கியக்காரர்களை நேரில் காணவும் பேசவும் அவர்களது சொற்பொழிவு களைக் கேட்கவும் முடிந்தது.

ஹாட்லியில் அருமையான ஆசிரியர்கள். W.N.S சாமுவெல் Emergency 1958, Psychologist போன்ற கனதியான வாசிப்பிற்கான ஆர்வத்தைத் தூண்டி விட்டார். வித்துவான் கார்த்திகேசு மரபு வழி வாசிப்பிற் கும், வித்துவான் வேலோன் நவீன இலங்கியங்களிலும் ஈடுபாட்டை ஏற்படுத்தினர். கனக செந்திநாதனை முதன் முதலில் கேட்க முடிந்தது ஹாட்லியின் இலக்கிய நிகழ்வின்போதுதான். அக்காலத்திலே மல்லிகை, வசந்தம், கலைச்செல்வி போன்றவற்றின் அறிமுகம் ஈழத்து இலக்கியத்திலும் முற்போக்கு இலக்கியத்திலும் ஈடுபாட்டை ஏற்படுத்தின.

மருத்துவ பீடத்தில் மாணவனாக இருந்த காலத்தில் தமிழ்ச்சங்கம் இந்து மன்றம் போன்றவற்றில் நிறைய பங்குபெற முடிந்தது. சஞ்சிகை ஆசிரியராக, தலைவராக, பொருளாளராக எனப் பொறுப்புகளும், கவிதை அரங்கு, மேடைப்பேச்சு, நாடகத்தில் நடிப்பு, நாட்டாரியலில் ஆய்வுக்கட்டுரை, வானொலி சங்கநாதம் நிகழ்ச்சிகளில் பற்கேற்பு என கலை இலக்கியத்தில் பரவலான ஈடுபாடு வளர்ந்தது.

**பரணீ - நீங்கள் எழுத்துத் துறையில் காலடி எடுத்து வைப்பதற்கு உந்து சக்தியாக அமைந்த பிரதான காரணியென எதனைக் கருதுகிறீர்கள்?**

**டாக்டர் எம்.கே.** - மேற் கூறிய அனைத்துமே அத்திவாரம் தான். 5 வயதில் தினகரன் மாணவர் பகுதி யில் கட்டுரை, ஹாட்லிக் கல்லூரி Miscellany யில் கட்டுரை, பல்கலைக்கழக கால சஞ்சிகைக் கட்டுரைகள் யாவும் மாணவப் பருவத்தின.

பருத்தித்துறையில் தனியார் மருந்துமனையை ஆரம்பித்து ஒரு சில வருடயங்கள் கழிந்த பின்னர்தான் தீவிரமாக எழுத ஆரம்பித்தேன். மல்லிகை ஜீவா சிரித்திரன் சுந்தர் இருவரது நட்பும் என்னில் எழுத வேண்டும் என்ற ஆர்வத்தைத் தூண்டிய போதும் சிரித்திரனில்தான் எனது முதல் தொடரான ஒரு டொக்டரின் டயறியிலிருந்து தொடங்கியது. பிறகு மல்லிகையில் விமர்சனங்கள், சிறுகதை என வளர்ந்தது.

"உந்து சக்தியாக அமைந்த பிரதான காரணி" எனப் பெரிய வார்த்தைகளைப் போடுகிறீர்கள். ஆனால் எழுதப்புகும் எல்லா எழுத்தாளர்களையும் போலவே எனது சுயஅடையாளத்தை நான் சார்ந்த சமூகத்தில் வைப்பதற்காகவே எனது ஆரம்ப எழுத்துகள் இருந்தன.

ஆனால் மருத்துவன் என்ற முறையில் சமூகம் சார்ந்த கடப்பாடு ஒன்று இருப்பதை படிப்படியாக உணர ஆரம்பித்தேன். மருத்துவர்கள் சொல்வதை நோயாளி கள் சரியாகப் புரிந்து கொள்வதில்லை. அவர்களுடன் செலவிடும் குறுகிய நேரத்திற்குள் தெளிவாகச் சொல்லப்படாதவற்றை தெளிவாகவும் பரவலாக சென்றடையும் வண்ணம் தெரிவிப்பது முக்கிய தேவை யாக இருந்தது.

இதற்காக முற்றிலும் வித்தியாசமான இரண்டு வகையான எழுத்து வடிவங்களை நான் பயன்படுத்த வேண்டியிருந்தது. மருத்துவக் கட்டுரைகள் ஒரு புறமாகவும், அனுபவப் பகிர்வுகள், சிறுகதைகள், புகைப்படங்கள், ஒரு சில கவிதைகள் என்பன மறுவித மாகவும் அமைந்தன. மருத்துவம் சார்ந்த படைப்பு களை நான் தொடர்ந்து எழுத ஆரம்ப காலத்தில் தூண்டியவர்களில் முக்கியமானவர் டொக்டர் சுகுமார் ஆகும். அதேபோல முரசொலி ஆசிரியரான எஸ்.திருச்செல்வத்தையும் குறிப்பிட வேண்டும்.

**பரணீ - அறிவியல்- மருத்துவத்துறை சார்ந்த ஈழத்து எழுத்தாளர்களுள் யாருடைய படைப்புகள் உங்களை வெகுவாகப் பாதித்துள்ளன?**

**டாக்டர் எம்.கே.** - இதில் இரண்டு தேர்வுகள் கிடையாது. ஒரே ஒருவர் மட்டும்தான். நந்தி எனப் பரவலாக அறியப்பட்ட பேராசிரியர் சிவஞானசுந்தரம் அவர்களே. அவர் மிகப் பெரிய ஆளுமை. நான் அவரது மாணாக்கனாக இல்லாதது போனது எனது துரதிஸ்டம். அவரது நலவியல் நூலான அன்புள்ள தங்கைக்கு, மற்றும் அவரது நாவலான மலைக்கொழுந்து ஆகியவை என்னை ஆரம்பகாலத்தில் ஆழமாகப் பாதித்தன. என்னுடைய வழிகாட்டியாகவும் மற்றொரு புறத்தில் குடும்ப நண்பராகவும் இருந்தவர்.

**பரணீ - உயர் தொழில் (Profession) பார்க்கும் ஒருவர், இலக்கியத்துறையில் அதீத ஈடுபாடு காட்டுவது, அவரின் தொழிலில் பாதிப்பை ஏற்படுத்தாதா?**

**டாக்டர் எம்.கே.** - அவ்வாறு பாதிப்பு ஏற்பட நிச்சயம் வாய்ப்பு உண்டு என்பதை மறுப்பதில்லை. ஆனால் இந்த விடயத்தில் மிகவும் கவனமாக இருக்கிறேன். என்னுடைய மருத்துப் பணிநேரத்தில் எனது முன் உரிமை எனது நோயாளிகளுக்கே. முன்னுரிமை என்று சொல்லக் கூடாது முழுமையான உரிமை அவர் களுக்கே. எனது பணிநேரத்தில் நான் எந்த முக்கிய மான இலக்கியக் கூட்டம் விழா நிகழ்வு எதுவானாலும் விட்டுக் கொடுப்புகள் இல்லை.

எனது ஓய்வு நாட்களான ஞாயிறு மாலை மற்றும் வர்த்தக விடுமுறைதினங்களின் மாலை நேரத்தில் மட்டுமே அவற்றில் கலந்து கொள்கிறேன். வருடத்தில் 365 நாட்களும் வேலை செய்கிறேன். மிக அத்தியாவசியமான தேவைகளுக்காக மட்டுமே வருடத்தில் 3-4 நாட்களுக்கு லீவு எடுத்திருப்பேன்.

**பரணீ- சமுதாய மருத்துவம் (community medicine) என்ற துறையின் பிரதான செயற்பாடுகள் எவ்வாறு அமைய வேண்டும்?**

**டாக்டர் எம்.கே.** - சமுதாய மருத்துவம் என்பது ஒரு கிராமத்தின் பிரதேசத்தின் அல்லது தேசத்தின் நலத்தை ஒட்டுமொத்தமாகக் கவனத்தில் எடுப்பதாகும். ஒரு குறிப்பிட்ட சமுதாயத்தில் தோன்றும் நோய்கள் எவை, அவை தோன்றுவதற்கான காரணங்கள் எவை. அவற்றைத் தடுப்பது போன்ற விடயங்களில் கவனம் செலுத்துவதாக இருக்கும். தனி நபரை மட்டும் பார்க்காமல் அந்த நபர் சார்ந்த சமூகத்தின் பின்னணி யில் பார்ப்பதாகும். பேராசிரியர் செ.சிவஞானசுந்தரம் (நந்தி) அத்துறை சார்ந்தவர். அத்துறைக்கான கல்வியில் பேராசிரியராகப் பணியாற்றி எண்ணற்ற மருத்துவர் களிடம் சமூக நோக்கை விதைத்தவர் எனச் சொல்லலாம்.


எனது துறை குடும்ப மருத்துவமாகும் (Family medicine). நாங்கள் சமூகத்தின் மத்தியில் இருப்போம். அது கிராமமாகவோ நகரமாகவோ இருக்கலாம். நாங்கள் தனி மனிதர்களை அவர்கள் சார்ந்த குடும்பப் பின்னணியில் அணுகுவோம். நான் குடும்ப மருத்து வனாக நீண்டகாலம் பணியாற்றிய பருத்தித்துறையில் டொக்டர்களான தம்பித்துரை, பத்மநாதன், கணபதிப் பிள்ளை, பாலகிருஷ்ணன், கதிர்காமத்தம்பி போன்றோர் எனது முன்னோடிகளாக அரும்பணி ஆற்றியுள்ளனர்.

அம்மம்மா, அம்மா, மகள், பேத்தி எனப் பலதலைமுறையினருக்கு மருத்துவம் செய்தவர்கள் அவர்கள். இதனால் அவர்களுக்கு தனது நோயாளி களின் பரம்பரை நோய்கள், உணவு முறைகள், பழக்க வழக்கங்கள், உறவுமுறைகள் என யாவுமே அத்துபடி யாகத் தெரிந்திருந்தது. இது தங்கள் நோயாளிகளின் பிரச்சினைகளை அவசியமற்ற ஆய்வுகூடப் பரிசோதனைகள் இன்றி பார்த்த மாத்திரத்திலேயே கண்டறிய முடிந்திருக்கிறது. வாழும் சூழலுக்கு ஏற்ற ஆலோசனைகளை வழங்கி அவர்களை ஆராக்கிய மாக வாழ நெறிப்படுத்த முடிந்திருக்கிறது.

இத்துறை மிக அற்புதமாக செயற்படும் நாடாக இங்கிலாந்தைக் கூறலாம். இங்கு இலங்கை யில் அரச ஆதரவில்லாத காரணத்தால் இத்துறையின் எதிர்காலம் கேள்விக் குறியாக இருக்கிறது. அரச மருத்துவர்களுக்கு நல்ல சம்பளம் மற்றும் வசதிகள் தரப்படுவதால் இத்துறைக்கு புதிதாக வருபவர்கள் மிகக் குறைவாகவே இருக்கிறது.

**பரணீ - ஒரு மருத்துவரின் அநுபவங்களைப் படைப்பு களாகத் தரும்போது ஏற்படக்கூடிய பிரச்சினைகளைக் குறிப்பிடுங்கள்?**

**டாக்டர் எம்.கே.** - மருத்துவர் தனது அனுபவங்களை படைப்புகளாகத் தரும்போது அது அவரது நோயாளி



களின் அந்தரங்க விடயங்களை பகிரங்கப்படுத்து வதாக இருக்கக் கூடாது. பெயர், ஊர், உருவ அடை யாளங்கள் போன்ற நோயாளியின் தனித்துவமான குறிப்புகள் எதுவும் படைப்பில் இருக்கக் கூடாது. அவ்வாறு செய்தால் அந்நோயாளியின் மன உணர்வுகளை மட்டுமின்றி சமூக ரீதியான தாக்கத்தையும் அவருக்கு ஏற்படுத்தலாம்.




ஆனால் இது மருத்துவரின் படைப்புகளுக்கு மட்டும் பொருத்தமானது அல்ல. எல்லாப் படைப்பாளிகளுக்கும் பொருத்தமானது. எந்த ஒரு படைப்பாளியும் ஒரு குறிப்பிட்ட நபரை அடையாளம் காணும் விதத்தில் தனது பாத்திரங்களை அமைக்கக் கூடாது. அவ்வாறு எழுதுவது அவர்களின் தனிநபர் சுதந்திரத்தைப் பறிப்பதாகவே இருக்கும். இருந்தபோதும் பல பிரபல எழுத்தாளர்கள் கூட தமது படைப்புகளில் சில தனிநபர்களை குறிவைத்து அடிப்பதாக எழுவதைக் காணும்போது வேதனையாக இருக்கிறது.

எந்தவொரு நோயாளியையும் இனங் காணும் வகையான குறிப்புகள் எதுவும் எனது படைப்புகளில் இருக்காது. மருத்துவக் கட்டுரையாயினும் சரி அனுபவப் பகிர்வாயினும் சரி சிறுகதை கவிதை போன்ற படைப்பிலக்கியங்களானாலும் சரி அவற்றில் யாரையும் குறிப்பாக எழுதக் கூடாது என்பதில் நான் மிக அவதானமாக இருக்கிறேன். அது எனது தொழில் தார்மீகமும் கூட. பல நோயாளிகளில் பெற்ற அனுபவங்களை ஒன்று சேர்த்து அவற்றை நம்பத்தக்க விதமான உயிரோட்டமுள்ள புதிய பாத்திரங்களாகப் புனைந்து எழுதுகிறேன். அதனால் அவை எந்த ஒருவரையும் குறிப்பிட்டுச் சுட்டுவதாக இருக்காது

பொதுவான சில பிரச்சினைகள் பற்றி எழுதும் போது அது எனக்காகவே எழுதப்பட்டது போல இருந்தது என ஒருவர் அல்ல, பலர் என்னிடம் கூறியிருக்கிறார்கள். "பரவலான பிரச்சினை பற்றி எழுதியிருக்கிறேன் அது அவர்களைச் சென்றடைந்திருக்கிறது அவர்களுக்கு மருந்தாக அமைந்தது" என திருப்தி கொள்ளுவேன்.

**பரணீ - மருத்துவக் கருத்துக்களை இலக்கியப் படைப்புகளில் கருப்பொருளாகக் கொள்ளும்போது, அப்படைப்புகளினூடாகச் சொல்ல வேண்டியவற்றைத் தெளிவாகச் சொல்லலாம் எனக் கருதுகிறீர்களா?**

**டாக்டர் எம்.கே.** - நிச்சமாக இல்லை. குறிப்பிட்ட ஒரு விடயம் பற்றிய அருட்டுணர்வை பரந்த வட்டத்தில் ஏற்படுத்துவதே அதன் நோக்கமாகும். தெளிவான மருத்துவக் கருத்துக்களை சொல்வதற்கு நலவியல் கட்டுரைகளே ஏற்றவை. இலக்கியப் படைப்புகள் இலகு வாசிப்பானவை. எந்த ஒரு நோய் பற்றியாவது தெளிவாக அறிய விரும்புவர்கள் அது பற்றிய மருத்துவக் கட்டுரையை வாசிக்க வேண்டும்.

ஆனால் மருத்துவக் கட்டுரைகளை இன்று யார் வேண்டுமானாலும் பத்திரிகைளில் எழுதலாம் என்றாகிவிட்டது. யார் எழுதுகிறார் எழுதுபவரது மருத்துவக் கல்வித் தகமை என்ன போன்றவற்றை கவனத்தில் கொண்டே அவற்றைத் தேர்ந்தெடுத்து வாசிக்க வேண்டியது வாசகர் பொறுப்பாகிவிடுகிறது. எழுதுபவர் பெயர் இல்லாமல் கூட நலவியல் கட்டுரைகளை வெளியிடுமளவிற்கு பல பத்திரிகைகள் தமது பத்திரிகா தார்மீகத்தை கைநழுவிவிட்டுள்ளன.

**பரணீ - இணையத்தள வலைஅமைப்புகளினூடாக இன்று வெளியிடப்படும் படைப்புகள் வெகுசன மட்டத்தில் சென்றடையக் கூடிய வாய்ப்புகளை எவ்வாறு ஏற்படுத்தலாம்?**

**டாக்டர் எம்.கே.** -இணையதள வாசிப்பு பெருகி வருகிறது. இருந்தபோதும் அச்சு ஊடகம் அளவிற்கு வெகுசன மட்டத்தை அவை சென்றடைவதில்லை என்பது உண்மையே. இருந்தபோதும் பத்திரிகைகள் கூட வெகுசனமட்டத்தை அடைவதாகத் தெரியவில்லை. இலங்கையில் வெளியாகும் தமிழ்த் தினசரிப் பத்திரிகைகள் அனைத்தையும் ஒன்று சேர்த்தால் கூட அவற்றின் தினசரி விற்பனை முப்பதாயிரத்தை தாண்டுவதில்லை என அண்மையில் ஒரு தினசரி ஆசிரியர் குறிப்பிட்டது நினைவிற்கு வருகிறது.

ஒரு படைப்பிற்கான எதிர்வினை அதை வெளியிட்ட அடுத்த கணமே கிடைக்கும் என்ற சுய திருப்திக்காகவே பல எழுத்தாளர்கள் இணையத்தில் எழுதுவதை விரும்புகிறார்கள். ருவிட்டர், பேஸ்புக், லிங்டென், கூகுள் பிளஸ் போன்ற சமூக வலைத் தளங்கள் ஊடாக பரலாக கிடைக்கச் செய்ய நானும்

முயல்கிறேன். ஆனால் சமூக வலைத்தளங்களைப் பயன்படுத்தும் பெரும்பாலானோர் அவற்றை வெறும் திண்ணைப் பேச்சாகவே கொண்டு செல்கின்றனர்.

**பரணீ - உங்களின் நலவியல் நூல்கள் பற்றிய சுருக்கமான விபரங்களைக் கூறுங்கள்?**

**டாக்டர் எம்.கே.** - இதுவரை 11 நலவியல் நூல்கள் வெளியாகியுள்ளன.

1. சிறுவர்களின் கண்களைக் காக்க வாரீர்,
2. பாலியல் நோய்கள்,
3. போதையைத் தவிருங்கள்,
4. தாயாகப் போகும் உங்களுக்கு – இலங்கையில் 1 பதிப்பு, NCBH சென்னை 3 பதிப்புகள்,
5. எயிட்ஸ்– இலங்கையில் 3 பதிப்புகள், NCBH சென்னை 3 பதிப்புகள்,
6. வைத்திய கலசம்,
7. சாயி காட்டிய ஆரோக்கிய வாழ்வு,
8. நீங்கள் நலமாக– இலங்கையில் 5 பதிப்புகள்,
9. நீரிழிவுடன் நலமே வாழுங்கள் – 3 பதிப்புகள்,
10. கொலஸ்ரோல் கட்டுப்படுத்துவது எப்படி? 2 பதிப்புகள் ,
11. உயர் இரத்தநோயைப் புரிந்கொள்ளல்.

இவற்றைத் தவிர பத்திரிகைகள் சஞ்சிகை களில் 2007 ஆண்டிற்கு பின்னர் எழுதி வெளியான 400 ற்கு மேற்பட்ட நலவியல் கட்டுரைகள் நூலாக்கப்படாமல் கைவசம் இருக்கின்றன.

**பரணீ - உங்களது இலக்கியப் படைப்புகளை நூலாக்கம் செய்யும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளீர்களா?**

**டாக்டர் எம்.கே.** - "மறந்து போகாத சில" என்ற கட்டுரைத் தொகுப்பு நூலை மீரா பதிப்பகம் ஊடாக பல வருடங்களுக்கு முன் வெளியிட்டேன். நூல் விமர்சனம், சினிமா விமர்சனம், புகைப்படம், சிற்பம் ஓவியம் போன்ற பல்துறை கலை இலக்கியக் கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்தது.

ஒரு டொக்டரின் டயறியில் இருந்து மல்லிகைப் பதிப்பக வெளியீடாக வந்தது. இது எனது மருத்துவப் பணியூடாக சுற்றியுள்ள உலகத்தை பார்க்கும் சமூகவிமர்சன அனுபவப் பதிவு நூலாக வந்தது. ஆரம்பத்தில் சிரித்திரனிலும் பின்னர் மல்லிகை யிலும் வெளியான கட்டுரைகளின் தொகுப்பு இவை.

இன்னமும் நிறையக் கட்டுரைகள் உள்ளன. சினிமா விமர்சனங்கள் பல உள்ளன. ஒரு நூலாகப் போடலாம். நிறைய இலக்கியக் கட்டுரைகள் உள்ளன. அண்மைக்காலமாக புகைப்படங்கள் எடுக்கும் ஆர்வம் பிறந்திருக்கிறது. பல கவிதைகளும் எழுதியுள்ளேன். புகைப்படங்களும் கவிதையும் சேர்ந்ததாக ஒரு நூல் போடவேண்டும் என்ற விருப்பும் உண்டு.

Steth இன் குரல் என்ற தலைப்பில் புதிதாக பல எனது அனுபவப் பகிர்வுகள் ஊடகங்களில் வெளியாகி உள்ளன. இப்பொழுது அறிவியல் களரி என்ற தொடரில் இலகுவாக தமிழில் அறிவியல் கட்டுரைகளை சமகாலம் சஞ்சிகையில் எழுதி வருகிறேன். மிகுந்த தேடலுடன் எழுதும் கட்டுரைகள் இவை. இவற்றைத் தொகுத்தால் சாதாரண மக்களும் இன்றைய அறிவியல் வளர்ச்சியின் சில கோணங்களை புரிந்து கொள்ளக் கூடிய வித்தியாசமான நூலாக அமையும்.

ஆனால் இவை எவற்றையும் நூலாக்கும் முயற்சியில் நான் இறங்கத் தயங்குகிறேன்.

காரணம், இலங்கையில் ஒரு நூலைப் போட்டால் அதன் விற்பனையையும் எழுத்தாளனே பொறுப்பேற்க வேண்டிய இடரான சூழலே இருக்கிறது. அதற்கான நேரமும், விற்பனை இரகசியங்களும் என்னிடம் கிடையாது. அதனால் யாவற்றையும் இணையத்தில் போட்டு பலதரப்பட்ட வாசகர்களையும் அடைய முயற்சிக்கிறேன். அதில் ஓரளவு நிறைவு காண முடிகிறது.

**பரணீ - உங்களுக்குக் கிடைத்த விருதுகள் பற்றி...**

**டாக்டர் எம்.கே.** - "தாயாகப் போகும் உங்களுக்கு", "நீங்கள் நலமாக" ஆகிய இரண்டும் இலங்கை தேசிய சாஹித்திய விருதுகளைப் பெற்றன. "தாயாகப் போகும் உங்களுக்கு" இலங்கை இலக்கியப் பேரவை விருதையும் பெற்றது. இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் ஊடகத்துறை பங்களிப்பிற் கான விருது. கொழும்பு பல்கலைக் கழக தமிழ்ச் சங்கத்தின் சிறந்த வலைப் பதிவாளர் விருது 2011

**பரணீ - நீங்கள் ஒரு சிறந்த வாசகர் என்பதை நீங்கள் அவ்வப்போது எழுதும் கட்டுரைகள் வெளிபடுத்துகின்றன. உங்களுடைய தொழில் ரீதியான கடமைகளுக்கும் அப்பால், வாசிப்புக்கான நேரத்தை எவ்வாறு ஒதுக்கு கிறீர்கள்?**

**டாக்டர் எம்.கே.** - எழுத்து வாசிப்பு யாவும் எனது ஓய்வு நேரத்தில்தான். கிடைக்கும் நேரம் முழுவதையும் இத்தகைய கலை இலக்கிய முயற்சிகளில் செலவழிக்க வழிசமைத்துத் தருவது எனது துணைவியார்தான். எனது எழுத்து முயற்சிகளின் முதல் வாசகர், விமர்சகர் படிதிருத்தம் செய்வது யாவும் அவரே.



# பிறழ்வடையும் மனிதப் பண்புகள்

யுகாயினி

நவீன காலத்தில் மனித நாகரீகம் மேம்பட்டுள்ளதாக நாம் பீற்றிக் கொள்ளும் இன்றைய காலத்தில் தான் பெண்களுக்கு எதிரான வன்முறைகளும், வன்கொடுமைகளும் குரூரமாக அதிகரித்து வருகிறது. இதைப் பார்க்கும் போது, உணவையும், பாலுறவையும் பகிர்ந்து வாழ்ந்த பண்டைய கற்கால மனிதன் எவ்வளவோ மேல் என்ற எண்ணம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. எல்லா மட்டத்திலும் ஆதிக்கவெறியும், வன்முறையும் அதிகரித்து வருகின்ற இன்றைய உலகைத்தான் நாம் நாகரீக மேம்பட்ட உலகாகக் கூறுகின்றோம். போரிடுவதும், மனிதனை மனிதன் கொல்வதும், ஆயுதம் கொண்டு அடக்கியாழ்வதும், பிறருக்கு வதை செய்வதும் தான் நாகரிகமா? மனித உரிமைகள் துளியேனும் மதிக்கப்படாத அதிகார வர்க்கம் மேலோங்கிய இன்றைய காலகட்டத்தில் மனிதநேயம், மனிதாபிமானம் அனைத்தும் குழிதோண்டிப் புதைக்கப் பட்டு விட்டது. அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி என்பது வாய் மக்கள் மத்தியிலும் மனிதாபிமானம் மரணித்து வரு கின்றது. இதன் உச்ச கட்டம் தான் இன்றைய வன்முறைகள். இவற்றிற்கு மேலாக போதைப்பொருட்களின் பாவனை!

வன்முறைகள் எல்லாவற்றிற்கும் மகுடம் வைத்தாற் போல சகல மட்டத்திலுமான பெண்களுக்கு எதிரான வன்முறைகளும், அடக்கு முறைகளும் அதிகரித்து வருகின்றது. பெண்ணியத்தை ஏற்றுக் கொண்ட ஆண்களினால் கூட எதையும் செய்ய முடியாத நிலை! அதிலும் பெண்களுக்கு எதிரான பாலியல் வன்முறை மிக மோசமாக அதிகரித்துள்ளமையைக் காண முடிகிறது.

பாலியல் வன்முறைகள் இன்று வயது பேதமின்றி சின்னஞ்சிறு பாலகர்கள் முதல் மூதாட்டிகள் வரை சகல வயதுப் பெண்களையும் பலிக்கடாவாக்குவதைக் கண்டு மனம் வெதும்புகிறது. பாலியல் வன்முறை என்றதும் இன்று பல வழிகளில் இது நிகழ்த்தப்படுகிறது. தெரியாது ஒரு பெண் மீது பலாத்காரமாக வன்புணர்வு கொள்வத, தெரிந்த ஆசைப்பட்ட பெண் மீது வன்புணர்வு கொள்ளுதல், நட்பான, தெரிந்த மற்றும் உறவு முறையில் உள்ளவர் களுடன் வல்லுறவு கொள்ளுதல், அதிகாரத்தையும் சந்தர்ப் பத்தையும் முதிர்ச்சியடையாத பருவமடைந்த பெண்களையும் வன்புணர்வுக்குட்படுத்தல் என பல வகைப்படும். இதன் உச்சமாக சகோதரிகளை, பெற்றமகளை, சிறு குழந்தைகளை என வரம்பு மீறிய கேவலமான வன்புணர்வுகள் இடம் பெறுகின்றன. இவற்றைவிட ஒரே பெண்ணை பலர் வன்புணர்வுக் குள்ளாக்கி குரூரமாக சித்திரவதை செய்வதும், வன்புணர்வு கொண்ட பெண்ணை கொலை செய்வதும் மனித நாகரீகத்தையே கேள்விக்கு உள்ளாக்கும் விடயங்களாகும்.

ஆணோடு பிறந்த ஆணைப்போலவே ஒரு மனிதப்பிறவி தான் பெண் என்பதை பண்பட்ட அனைவரும் ஏற்றும் கொண்டுள்ளனர். ஆணைப் போலவே பெண்ணுக்கும் சகல உரிமைகளும் சமத்துவ மும் வழங்கப்படவேண்டும் என்பதை கணிசமான ஆண்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர் எனினும் நெல்லி னிடையே வளரும் களை போல இவ்வுலகிலும் சில புல்லுருவிகள் பெண்களின் உரிமைக்கு மாத்திரமன்றி அவர்களது வாழ்வுக்கும் சவாலாக உள்ளனர்.

கொடிய தொற்று நோய் போல பரவி வரும் பாலியல் வன்முறைக்கான காரணம் இன்றைய உலகின் கொடிய யுத்தங்களும், நவீன வாழ்க்கை முறையின் பிறழ்வுகளும், புதிய இலத்திரனியல் தொடர்பு சாதனங் களின் முறையற்ற பாவனைகளும் ஆகும். மேலும் நிம்மதியற்ற வாழ்வில் தரிசிக்கும் இதர வன்முறைகளும் ஆயுத கலாசாரத்தின் அச்சுறுத்தல்களும், வாழ்வு பற்றிய நிச்சயமற்ற தன்மைகள் ஏற்படுத்தும் மனக்குரூரமும் மனித மனங்களைப் பெரிதும் பாதித்து வருகின்றன. இதன் அறுவடையாக நெறிப் பிறழ்வு என்பது சர்வ சாதாரணமாகி வருகின்றது. எந்நேரமும் நிச்சயமற்ற தாக அச்சுறுத்தும் மனித வாழ்வுக் கோலங்களிடையே உளப்பாதிப்புற்றவர்களாகவே மனிதர்கள் வாழ் கின்றனர். வறுமையும் பட்டினியும் இன்னொரு புறம் மனித மனங்களை வெகுவாகப் பாதிப்புக்குள்ளாக்கி சலிப்படைய வைக்கிறது. நாகரீகம் என்பதன் அர்த்தம் இதனிடையே பிறழ்வடைந்து ஒரு பேரலை போல பண்புகள் யாவும் அடித்துச் செல்லப்படுகின்றனவோ என எண்ணத் தோன்றுகிறது.

பாலியல் ரீதியில் தப்பாக நடப்பவர்களைப் பார்த்து, நீ சகோதரிகளுடன் பிறக்கவில்லையா? என்று கேட்பார்கள். ஆனால் இன்று சகோதரிகளை வன்புணர் விற்கு உட்படுத்துகின்ற நிலை. நாகரீக உலகில் பெண் என்றால் அவளை வெறும் உடலாக மட்டும் நோக்கும் துர்ப்பாக்கிய நிலை அதிகரித்தே காணப்படுகிறது.

உடலுக்கு அப்பால் பெண்ணை ஒரு சக மானுடப்பிறவியாக நோக்கும் நிலை வரவேண்டும். அவளது வாழ்வை இச்சமூகத்திலுள்ள அனைவரும் சமமாக அங்கீகரிக்க வேண்டும். பெண்ணின் ஆற்றல், ஆளுமைகள் அனைத்தையும் அங்கீகரிக்கும் நிலை ஏற்படின் இவ்வாறான வன்முறைகள் நிகழாது.



# இரண்டாம் சக்கர வியூகம்

யார் யாரென
அடையாளம் காண முடியாதபடி
இரத்தமும் சதையும்
நிறைந்து கிடந்த
குருஷேத்திரத்தின்
உச்ச நாளொன்றில் தான்
அது நிகழ்ந்திருக்க வேண்டும்.

ஓவென்ற ஓலம்
வானுயர் எழுந்த ஒரு நாளில்
பயத்தின் போர்வைகளை
எல்லோரும் தமக்குத்தாமே
போர்த்துக் கொண்டனர்.

மரணத் தேவதை
சுதந்திரம் பெற்றவளாய்
நிலம் இல்லாத சனங்களை
தனது நிலத்தில்
குடியேற்றிக் கொண்டிருந்தாள்
பிணங்களாக.

திக்குத் திசையறியாத
கால்நடைகள்
பயந்து ஒதுங்குவதைப் போல
குருஷேத்திரத்தின் இறுதி நாளிலோ
அல்லது
அதற்கு முந்தைய ஓரிரண்டு நாளிலோ
அது நிகழ்ந்திருக்க வேண்டும்.

யாருமற்ற அல்லது
யாரும் கண்டிராத
ஒரு வனாந்தர வெளியில்
முதுகெலும்பு அற்றுப்போனவர்களின்
வக்கிரங்கள்
உயிர் அறுக்கத் தொடங்கிற்று அந்த
அமானுஷ்ய வெளியில்

சக்கர வியூகத்தை
தகர்த்தெறிந்து களமாடிய
அபிமன்யுவாக
அவர்கள் நினைத்திருக்கலாம்.

இன்னும் இன்னுமாய்
காரண காரியங்களை முன்வைத்து
பலவற்றை எதிர்பார்த்து
அதனை அவர்கள்
நிகழ்த்தியிருக்கலாம்.

எந்தவிதமான எதிர்ப்புகளும்
இன்றியே
அவர்கள் நினைத்ததை
செய்து முடித்தார்கள்.

இயலாமையின் அத்தனை
கோரத்தையும் அவர்கள்
வெகு இயல்பாய்
அரங்கேற்றினார்கள்.

ஒரு பெருமரத்தில்
பூத்த காரணத்திற்காய்
பூத்த குறையில் கருவறுக்கப்பட்டது
இப்படி இப்படித்தான்
ஆயிரம் பூக்கள்...

அவர்கள் எதை எதையும்
எண்ணியிருக்கலாம்.
கூடிக்குலவி மகிழ்ந்திருக்கலாம்
ஆனால்
எதுவித எதிர்ப்புகளும் இன்றியே
உடைத்தெறிந்தது
அந்தப் பிஞ்சுப் பூ
இன்னொரு
"இரண்டாம் சக்கர வியூகத்தை"
இந்த உலகில்...

வெற்றி.துஷ்யந்தன்

## நிர்வாணமாக்கப்பட்ட நிலங்கள்

எல்லா நிலங்களும்
நிர்வாணமாக்கப்பட்டு
கற்பழிக்கப்பட்டு
வாழ்வுகள் அழிக்கப்பட்டு
கொண்டிருக்கின்றன
வெறும் கவிதையை மட்டும்
எழுதி என்ன செய்ய

மீளப்பட்ட
நிலங்களையாவது
பயிர் செய்ய வேண்டியுள்ளது
வியர்வையும்
கண்ணீரும்
ரத்தங்களும்
விழத்தான் செய்யும் - ஆனால்
பயிர் செய்ய வேண்டும்

இந்த நிலத்தில்
இன்னும் உரம்
மிகையாகவே
உள்ளது நமது
பயிர்களை
பயிர் செய்வோம்

நிலத்தின் வளத்தில்
காட்டு செடிகளை
வளரவிடாது
பயிர்செய்வோம்


எப்போதும் எங்கள் நிலங்களை
நிர்வாணப்படுத்த முடியாது

சேனைகள் முழுவதுமாக
பயிரிடுவோம்
களைகள் வளராது
வேரோடு பிடுங்கி ஏறிவோம்

ஓர் களை என்பது
மௌனிக்காமல் பிடுங்கி ஏறிவோம்

புள்ளுருவிகள்
ஒட்டுண்ணி தாவரங்கள் - எல்லாம்
எங்கள் நிலங்களில்
வளர்வதை தடுப்போம்
கள்ளி செடிகள் போல்
நீரில்லாது பயிரிடுவோம்
எங்கள் நிலங்களை
இனியும்
நிர்வாணப்படுத்த முடியாது

– எஸ்.பி.பாலமுருகன்



## கரை ஒதுங்கா கனவுகள்

பின்நவீனத்துவ
கவிதைகள் போல
கரை ஒதுங்க முடியாத
கனவுகளாய்
எங்கள் வாழ்வு
நிலைக்கொண்டு
நிலையற்று இருக்கிறது

பட்டியலில்
சதவீதம் ஒதுக்கப்படும்
சில மட்டுமே
எங்கள்
கனவின் நிஜங்களை
தொடப்படுகிறது

மூன்றாம் நிலை வாதம்
போல
முடிவெடுக்கப்படாத
கவிதைகளாய்
கரையொதுங்க முடியாது
தத்தளிக்கிறோம்
ஓர் பிறப்பியலின்
இனமாக
யுவதிகள்
கரையொதுங்க முடியாத
எங்கள் கனவுகளோடு

– எஸ். திலகவதி

"எனக்கு நூடில்ஸ் வேணாம்"

"உம்மா என்ட சூ ஒன்டு இல்ல"

"சில்மியா எனக்கு ஷேர்ட் அயர்ன் பண்ணீட்டிங்களா?"

"உம்மா எனக்கு கெதியா சாப்பாட்ட கட்டுங்க"

இப்படி பலவிதமான ஏவல்கள்... கட்டளைகள்... இவற்றுக்கெல்லாம் பதில் சொல்லி, சொல்லித்தான் ஒவ்வொரு நாளும் விடிகாலைப் பொழுதுகள், அமர்க்களமாகவே விடிந்து கொண்டிருக்கும் சில்மியாவுக்கு.

ஒருவாறாக சமையலை முடித்துவிட்டு கணவனுக்கும், பிள்ளைகளுக்கும் உரிய கடமைகளை முடித்துவிட்டு மூச்சுவிடுவாள். பாடசாலை விட்டு பிள்ளைகள் திரும்பும் வரையும், மாலை கணவன் அலுவலகத்திலிருந்து திரும்பும் வரையும் அவளைத் தொந்தரவு செய்ய யாருமில்லாததால் சுதந்திரப் பறவையாய் கற்பனை வானில் சிறகடிப்பாள். சின்னத் திரைக்குள் புதைந்து சீரியல்களுக்காக சிணுங்குகின்ற சிந்தைகொண்டவளல்ல அவள். கிடைக்கும் சந்தர்ப்பங்களை அவள் கற்பனைக் குதிரையை ஓட விட்டு கவிதைகளைப் படைப்பதில் பூரித்துப் போவாள். சந்தர்ப்பங்கள் தாமாகத் தோன்றுவதில்லை. எம்மால் தோற்றிவிக்கப்பட வேண்டியவை. சிந்தனை எம்முள்

# ஒரு கூட்டுப்புழு வண்ணாத்துப்பூச்சியாகிறது

யாழ். ஸைனப்

எப்போது விதை கொள் கிறதோ அப்போதுதான் ஒருவன் அறிவில் முழுமை யடைகிறான். இது போன்ற சந்தர்ப்ப நேரங்களில் தான் அவளால் காகிதக்கற்களில் விரல் உளி கொண்டு கவிச் சிற்பங்களை செதுக்குவதுண்டு. அவளுக்குள்ளே ஒரு சின்னச் சந்தோசமோ, ஒரு சின்னத்துன்பமோ அவள் ஆத்மாவுக்குள் ஆர்ப்பரித்து கவிதை அலைகளை கரைதொட வைப்பதுண்டு. காலத்தின் அசுத்தங்களை கழுவிச் சுத்தம் செய்ய கவிச்சவர்க்காரங்களால் தான் முடியும் என அவள் நினைப்பதுண்டு.

எந்தவொரு தாக்கத்திற்கும் எதிரானதும், சமமானதுமன மறுதாக்கமுண்டு என்கிறது நியூட்டனின் மூன்றாம் விதி. இவளது விதியில் மட்டும் விதிவிலக்கா, என்ன? அவள் ஆற்றல்களுக்கு களம் அமைக்காது நேர்மாற்றமானவனே அவளது கணவன். அதற்காக அழகை இரசிக்கத் தெரியாதவனென்றோ, இரசனை இல்லாதவனென்றோ சொல்ல முடியாது. ஆனாலும் அவளது கவிப்பூக்களெல்லாம் பத்திரிகை பூங்காவில் வானொலித் தடாகத்தில் பூக்கும் போதெல்லாம் பார்க்கவோ, கேட்கவோ ஆர்வம் காட்டுவதில்லை. அவளது நச்சரிப்புக்களுக்காக சில நேரங்களில்



பார்த்தும் கேட்டுமிருக்கிறான். அவனது வேலைப்பளு காரணமாயிருக்குமோ என்று அவள் தன்னை சமாதானப்படுத்திக் கொள்வதுண்டு. இதுவரைக்கும் இறைவன் கொடுத்த அருட் கொடையான இந்த ஆற்றலை ஒருநாளாவது அவன் மெச்சியதில்லை. ஆனால்எழுத வேண்டாமென்று ஒரு போதும் தடை போட்டதில்லை. அதனால் அவனுக்கு அவள் மானசீகமாக நன்றி கூறிக் கொள்வாள்.

கவிதையென்றால் என்னவென்று தெரியாத போது வாழ்க்கை குறித்தது காதலால் அவனுக்காக காத்திருந்த ஒவ்வொரு வினாடியும், அவனுக்காக வாசற்படி வந்து நின்று அவனைத் தேடியது வரைக்கும் அவளுள் அவனால்தான் கவிதைகள் பிறந்தன. அவனால் கருக்கொண்ட கவிக்குழந்தைகளை அவனே தூக்கி கொஞ்சவில்லை என்ற ஒரு வெறுப்பும், காலப் போக்கில் குடும்பச் சுமையும் காரணமானதால் நத்தைத்தனமாக அவளது இலக்கியப் பயணம் நகர்ந்து கொண்டிருந்தது. யார் யாரினது ஆத்மாக்களை அபகரித்த அவளது படைப்புக்கள் அவள் மனம் பறித்தவனின் ஆத்மாக்குள் பெரிதாய் நுழையாதது கண்டு மனம் வெம்பினாள். படிப்படியாக தாள் வீதியில் பேனா வாகனம் கொண்டு கவியாத்திரை செய்யாம லிருக்க எத்தனித்தாள். அவள் மனப் பாதாளத்தில் மௌனம் மௌனமாய் பதுக்கி வைத்திருந்த கவிப்

பொக்கிஷங்களை எப்போதாவது பத்திரிகைக்கு அனுப்புவாள்.

காலங்கள் உருண்டோடின கணவனின் வேலை நிமித்தம் இடம்மாறிய போதுதான் அவளுக்குள்ளும் சில மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. அவளது இதயக் கதவுகள் மெல்லத் திறக்க புத்துயிருட்டும் புதுவிருந்தாளி யாய் ஊனமுற்ற அவளது உணர்ச்சிகளுக்கு ஊன்று கோலாய் ஓர் இலக்கியத் தோழியின் அறிமுகம் கிடைத்தது. சில்மியாவின் படைப்புக்களை பார்வை செய்துவிட்டு ஆத்மார்த்தமாக பாராட்டிய முதலாவது ஒரே ஒரு இலக்கியவாதி அவளாகத்தான் இருக்கும் என அடிக்கடி மெய்சிலிர்ப்பாள். என்றும் நன்றிக்குரிய ஒரு ஜீவனாய் அவளை நேசித்தாள். அவளது ஊனமாகிப் போன கவிக்குழந்தைகள் அவளது தோழியின் உற்சாக வருடல்களால் அந்த ஈர இதயத்தால் நேசிக்கப்பட்டபோது மீண்டும் உயிர்த்தெழுந்தது.

இலக்கியம் தனிமனிதனதும், சமூகத்தினதும் உணர்ச்சி வெளிப்பாடாகவும், கருத்து வெளிப்பாடாகவும் அமைகின்றது. அவளைச்சூழ அவளால் நேசிக்கப்படு கின்றவர்களின் இன்ப, துன்ப நிகழ்வுகளைக் கூட எழுத் தாக்கி அவர்களிடமே காட்டி தீர்வுகாண எத்தனிப்பாள். ஆனால் சூழ்நிலை அவளது குரல்வளை நசுக்கப்பட்டதாய் உணர்ந்து மனதின் அடித்தளத்தில் அவற்றை சில காலம் புதைத்தாள். இல்லை விதைத்தாள் என்று தான் சொல்ல வேண்டும். இப்போது இவளது தோழியின் ஆதரவு நீர் பட்டு அவை மீண்டும் துளிர்க்க ஆரம்பித்துவிட்டன. அதனால் முன்னரைவிடவும் உற்சாகமாக எழுதிக் கொண்டிருந்தாள்.

காலத்தின் சோதனைக்குள் அகப்படுவதற்கு யார்தான் விதிவிலக்கு. ஒருநாள் கணவனுடன் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த போதுதான் அந்த எதிர்பாராத விபத்து ஏற்பட்டு அவளது வலது கையின் இரண்டு விரல்கள் துண்டிக்கப்பட்டன. கலங்கிப் போனாள். கண்ணீர் விட்டு அழுதாள். " எண்ணெய் திரண்டு வரும் வேளை தாழி உடைந்த" கதையாய் ஆனது அவள் நிலை. அவளது இலக்கிய கனவுகள் காற்றிலே கரைவதாய் உணர்ந்தால், உடைந்தாள்.

இவ்வாறான ஒரு நிலையில் தான் அந்த அதிசயம் நிகழ்ந்தது. "சில்மியா இனிமேல் உங்கட உள்ளத் தோட்டத்தில் பூக்கும் கவிப்பூக்களை எல்லாம் மாலையாக்கி மாடத்திலேற்ற நான் துணையா யிருப்பேன். உங்கட உணர்வுகளை என்னிடம் சொல்லுங்க. வரிகளை வார்த்தையாக்கி வார்த்தை களை நூலாக்குவேன்" என்றான் அவள் கணவன். அவள் அவனை ஆழமாக நேசித்ததன் பாதிப்புத்தான் இது என்பதை அவள் உணர்ந்துகொண்டாள். வீணை ஒன்று வீதிவிபத்தில் நரம்பு அறுந்து ஜீவனை நனைக்கின்ற கீதத்தை தராமலே மூலையில் முடங்கி விட்டதே என்று நினைத்தவளுக்கு நரம்புகளாய் மாறி விட்ட அன்புக் கணவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

இளவேனில் இன்னிசையாய் பட்சிகளின் கானம் அவளை துயிலெழுப்ப, கூட்டுப்புழுவொன்று வண்ணச் சிறகுகள் முளைத்து வண்ணத்துப்பூச்சியாய் வானில் பறக்கவிருப்பதை எண்ணி இறைவனுக்கு நன்றிகூறி சிரம்சாய்த்தாள். "எல்லாப் புகழும் இறைவன் ஒருவனுக்கே" என்று.

## நெருப்புக்கனிகள்

பஞ்சமும் பசியும் ஏற்றுப்
பாரினில் உழைப்போர் தம்மின்
நெஞ்சினிற் கனன்று நிற்கும்
நெருப்பெனும் கனிகள் ஓர்நாள்
வெஞ்சினத்தோடு மண்ணில்
வீழ்ந்திடும் வீறு கொள்ளும்
பஞ்செனக் கனி நெருப்பில்
பாதகர் தீய்ந்து மாள்வர்

சுதந்திர ஒளியை வாழ்வுச்
சுவைகளைப் பறி கொடுத்து
நிதந்துயர்க் கடலில் மூழ்கி
நிலத்திடை வாழுவோரின்
இதய மாங்கனியில் நாளும்
எரிந்திடும் கனி நெருப்பு
புதுயுகம் படைக்கவோர் நாள்
பூதமாய் உருவெடுக்கும்

நிலத்தினிற் கொடுமை யாவும்
நிச்சயம் எரித்துத் தீய்த்து
வளத்தொடு வசந்த வாழ்வு
வையக மெங்கு மோங்க
பலத்தொடு மண்ணில் இந்தப்
பசுங்கனி நெருப்பு மூளும்
நிலத்தினை நெருப்புக் கனிகள்
நிச்சயம் ஓர் நாள் வெல்லும்!

**– கவிஞர் நிலா தமிழின்தாசன் –**

குறுநாவல்

# புதுவீடு



ஆனந்தி

## அங்கம் ஆறு

இருபத்தைந்து வருடங்களுக்கு முன், இந்த கிராமத்தை விட்டு பிரிந்து போன விசாகன், ஒரு யுகத்திற்கு பிறகு, திரும்பி வருகிறான். அவன் போய் சிறிது காலத்திற்குள், மம்மியும் இறந்து போனாள், டாடியும் போன இடம் தெரியவில்லை, அவனுக்கு உறவு என்று சொல்லக்கூடியதாய், இந்த மண்ணில் துளசி ஒருத்தி மட்டுமே இருந்தாள். எவ்வித மாறுதலுமின்றித் தன் சொந்தப் பெருமைகளோடு, இயல்பு மாறாமல் இருந்து வரும் துளசிக்கு, அவனை எதிர்கொள்வது கூட ஒரு சவாலாகப்பட்டது. பெருமை இழந்து, நொந்து கெட்டு வரும் அவன் முன், தான் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதே, அவளின் இப்போதைய கவலையாக இருந்தது, அதற்கு ஒத்திகை பார்க்கவும் அவள் தவறவில்லை.

அவனுக்காகவே கதைத்து நிற்கிற மாதிரி, பெருமை இழந்து போன அச்சிறு கிராமம் துங்கி வழிந்து கொண்டிருந்தது, நவீன நாகரீக வளர்ச்சியில், அது முன்னேறி நிற்பது போல் தோன்றினாலும், காலத்தால் அழியாத சிரஞ்சிவீப் பெருமைகளை இழந்து நிற்பதால், அதன் காட்சியழகைக் காணக் கூடிய எல்லா இடத்திலும், உயிரில்லாமல் அழுதுவடியும் அதன் முகமே, ஒரு பொய்யாக நின்று உறுத்திக் கொண்டிருந்தது. அந்தப் பொய்யே ஒரு சாபமாக ஏற்பட்டு போன நிலையில், விசாகன் வந்து சேர்ந்தான்.

அப்போது மணி இரண்டு இருக்கும், பகலின் உக்கிரம் தாங்காமல், அவள் வாசலுக்கு வந்து, தெருவைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

சிறிது நேரத்திற்கு பிறகு, கேட் கதவைத் திறந்து கொண்டு, யாரோ ஒரு அந்நிய புருஷன் உள்ளே வருவது அவளின் பார்வைக்கு மங்கலாகத் தெரிந்தது. அவள் திடுக்கிட்டுப் போய், அவனை கண்டு வெட்கப்பட்டவாறே, புடவைத் தலைப்பை இழுத்துக் கழுத்துவரை மூடிப் போர்த்துக்கொண்டு, தூண் மறைவில் மறைந்து நின்றபடி அவனை வேடிக்கை பார்த்தாள்.

அதற்குள் அவன் உள்ளே வந்து விட்டான். அவனுக்கு நடுத்தர வயதிருக்கும். நீண்ட நாள் பயணத்தில் களைத்து வந்திருப்பவன் போல், அவன் மிகவும் சோர்வுடன் தோன்றினான், அவனின் தோளிலே அழுக்கு மண்டிய, கனமான ஒரு தோள்பை தொங்கியது. பரட்டையடித்துச் சிதறிக் குத்திட்டு நின்ற தலைமுடி காற்றில் சிலிர்த்தது, அவன் அணிந்து இருந்த சாயம் போன பழுப்பு நிற உடைகள், ஒரே அழுக்காக இருந்தன. அவனின் முகம் உணர்ச்சியின்றி மரத்துப் போய் இருந்தது, அதன் பின்னணியில் கவிந்து மூடிக்கொண்டிருக்கும் ஒரு நிரந்தர சோகத்தினது முழு இருட்டினிடையே, ஒருசிறு ஒளிக்கீற்றுப் போல், மின்னி ஒளிவிடும், அவனது அன்பின் சுவடு வற்றிப் போகாத அந்த கண்கள், அவளை ஊடுருவிக் கொண்டு துளைத்துப் பார்த்தன. அந்த பார்வையின் கனத்தை நெஞ்சில் ஏந்தியவாறு, திடுக்கிட்டுப் போய் தலை நிமிர்த்தி, அவள் அவனை இனம் புரிந்து கொண்டு, உணர்ச்சிவசப்பட்டு அழுதுவிட்டாள்.

அதைப் பார்த்தவாறே அவன். அந்த விசாகன் விறைத்துப்போய் நின்றிருந்தான். அவனால் அழக்கூட முடியவில்லை, தீட்டுக்குளித்துவிட்டு வந்து நிற்கிற மாதிரி, புனிதம் நிரம்பிய அவள் முன், இப்படி ஓர் அழுக்கு மூட்டையாய், பாவத்தை சுமந்து கொண்டு, வந்து நிற்கிறேனே என நினைத்து, அவன் மிகவும் வெட்கம் கொண்டான். அதனால் அவளைத் தலை நிமிர்த்தி பார்க்கவே மனம் கூசியவனாய், அவன் எங்கேயோ வெறிக்கப் பார்த்துக்கொண்டிருந்தான்.

இரு துருவங்களாய் பிரிந்து போன அவர்களிடையே, நெருங்கி வர முடியாதபடி, ஒரு கனத்த மௌனம் நிலவிற்று, யார் முதலில் பேசுவது என்று புரியாமல் அவள் மிகவும் குழம்பிக் கொண்டிருந்த போது எதிர்பாராதவிதமாக, முகத்தை திருப்பி, அவளை வெறுமையாய் பார்த்துக்கொண்டே, குரலை உயர்த்தி அவனே கேட்டான்.

"என்ன துளசி பேசாமல் நிற்கிறாய்? உன்னை கண்டதும், எனக்கு பழைய கதையெல்லாம் நினைவுக்கு வருகிறது. அப்ப நீ என் மீது எவ்வளவு அன்பு வைத்திருந்தாய், இப்ப இந்த விசாகன் முகத்தை பார்க்கவே உனக்கு பிடிக்கேலை? அப்படித்தானே?"

"போதும் நிறுத்து விசாகா! நான் ஒன்றையும் மறக்கேலை. உன்னை எந்த நிலையிலும், நான் வெறுக்கமாட்டேன், நான் எல்லோரையும் போலவே உன்னையும், கரிசனையோடு நேசிக்கிறேன். இப்ப இந்த கதையெல்லாம் எதுக்கு? நீ புது உலகத்திற்கு வந்திருக் கின்றாய்! இவ்வளவு காலமும் அலைந்து களைத்து போனியே! உள்ளே வா! குளிச்சிட்டு சாப்பிடு! பிறகு ஆறுதலாய் பேசுவம்" —

அவன் பழகிய உரிமையை மறவாமல், உள்ளே அவளைப் பின்தொடர்ந்து போனான்.

"அப்பா! ஆர் வந்திருக்கென்று பாருங்கோ" என்று அவள் வராந்தாவில் நின்றவாறே, அப்பாவின் காதில் படும்படி உரத்துச் சொன்னாள்.

அவள் சொன்னதை கேட்டு அவசரமாக, அறைக்குள்ளிருந்து வெளிப்பட்ட சுந்தரம், அவன் வாசலிலே ஒரு புது விருந்தாளியைப் போலத் தயங்கி நிற்பதைப் பார்த்துவிட்டுக் கேட்டார்.

"யாரது? தெரியேலையே!"

"நான்தான் பெரியப்பா! விசாகன் வந்திருக்கிறன்"

"விசாகனா? ஆளே அடையாளம் தெரியேலை! என்ன, இப்படியாகிவிட்டாய்?"

அவன் அதை கேட்டு மனம் வருந்தியவனாய், பேச வராமல், அங்கேயே தனிமை கொண்டு நிற்கும் பிரமை யோடு, குழம்பி வெறித்த முகத்துடன், வந்த வேஷத் துடனேயே, அந்த வராந்தாவில் குறுக்கும் நெடுக்குமாய், தன்னை மறந்து உலாவத் தொடங்கினான்.

அதற்குள் துளசி உள்ளே போய், அவனுக்கு தேநீர் எடுத்துக் கொண்டு, திரும்பி வந்தாள்.

இந்தா விசாகா! நன்றாக களைத்துப் போனியே, முதலில் இதை குடி, பிறகு குளிக்கலாம். என்று கூறிய அவள் தேநீர் கோப்பையை அவனிடம் கொடுத்து விட்டு எதையோ நினைத்துக்கொண்டு அறைக்குள் வந்தாள். அவள் திரும்பி வரும் போது, அப்பாவின் சலவை செய்த வேட்டி ஒன்றை கையில் எடுத்து வந்தாள்.

"இந்தா விசாகா! குளிச்சிட்டு நீ உடை மாற்றுவியே, அப்ப இதை கட்டிக்கொண்டுவா"

"எனக்கு வேட்டி கட்டுவதே மறந்து போச்சு! இதை சொல்லிவிட்டு, அவளின் முகத்தை சந்திக்க துணிவின்றி, அவன் தலையை குனிந்து கொண்டான்.

வெட்கமில்லாமல், தனது உண்மை நிலையைப் பிரகடனப்படுத்துவது போல், அவன் கூறிய அந்த வார்த்தை அவளை நெருப்பாய் நெஞ்சில் சுடவே, இதுவரை அடக்கி வைத்திருந்த தார்மீக கோபம், அவளை அறியாமலே பொங்கி வெடிக்க குரலில் சூடேறி, சத்தியாவேசமாய் அவள் அவனை பார்த்துச் சொன்னாள்.

"நீ இதைச் சொன்னதற்காக, வெட்கப்பட வேணும் விசாகா! இதைகேட்காமலே, நான் இருந்திருக்கக்கூடாதா? ஏன்டா! உன்ரை புத்தி இப்படிப் போச்சு?. உனக்கு மட்டும்தானா? இல்லை! முழுப் பேரையுமே கால வெள்ளம் அடித்துக் கொண்டு போட்டுதா என்ன? எனக்கு ஒன்றுமே புரியேலை! நாம் யார் என்று சொல்லித் தெரிய வேண்டாம்! எப்படியெல்லாம் பெருமையோடு பிறந்தோம்! இப்ப வேரே அறுந்து போச்சு. புரையோடிப்போச்சு. எல்லாம் போற போக்கில! எரிந்து போய்விடும் போல இருக்கு! எரியட்டுமே! இந்த கிராமமும் தான்! உன்னைப் போல, இப்ப நல்லாய், தீப்பற்றி எரிகிறது! எனக்கென்ன யோசனை? நான் இதைப்பற்றியெல்லாம் ஏன் சிந்திக்கிறன்? "

இவன் யோசனையில் ஆழ்ந்தான். அப்போது கதவை திறந்து கொண்டு, யாரோ உள்ளே வந்த மாதிரி இருக்கவே, உணர்ச்சி குழம்பிய முகத்துடன் துளசி திரும்பிப் பார்த்தாள்.

"விசாகா! இவன் யார் தெரியுமா? நான் என்ன என்று சொல்வேன். இவன் பெயர் விலாசம் எல்லாமே மறந்து போச்சு. ஒன்றுமேயில்லாதவனை என்ன சொல்லி அழைப்பது?"

அவன் சிரித்தவாறே, ஆனால் மனம் நொந்து போய்ச் சொன்னான்.

"உண்மைதான் ஒரு நாடோடி மாதிரி நான் மாறிப்போனேன். துளசி! இங்கேயே உன்னுடன் அன்பு மறவாமல், நான் இருந்திருந்தால், என் பெயர் நிலைத்திருக்கும். வீண் ஆசை காட்டி, மம்மி என் மனசையே அழிச்சிட்டா! நான் பெரிய ஆளாய் வர வேணுமென்று, என்னை லண்டனுக்கு அனுப்பி விட்டா, நானோ படிக்காமல், நாடு நாடாய் அலைந்து கெட்டுப் போனேன். நிம்மதியிழந்து நிறைய குடிச்சன், உடலே அழுகிப்போச்சு! எனக்கென்ன பெயர்? வெறும் பிணம்"

வருத்தப்படாதே விசாகா! இவளைப் பார், கை கால் எல்லாம் ஒடிஞ்சு போற, குச்சி மாதிரி இருக்கு, நெஞ்சிலே இவளுக்கு ஓட்டை இருக்காம், திடீரென்று ஒருநாள் செத்து போவாளாம். ஆனால்

இவள் சந்தோஷத்தை பார்த்தியே. இவள் மிகவும் உயரத்திலே இருக்கிற ஒரு துருவ நட்சத்திரம் மாதிரி. நீயும் ஏன் இப்படி இருந்திருக்கக்கூடாது?

அவன் கன்கலங்கியவாறே, ராணியை இழுத்து குனிந்து அவளின் நெற்றியில் முத்தமிட்டான். துளசி தொடர்ந்து சொல்லிக் கொண்டிருந்தாள்.

"ஏன் முடியேலை! பேராசை நமக்கு அதிகம் பெரிய வீடு கட்ட வேணும், கார் ஓட வேணும், நிறைய வசதிகளோடு, ஒரு பெரிய கனவான் மாதிரி வாழ்ந்தாலே போதும். நாங்கள் பெரிய மனிதனாகிவிட, இதைவிட வேறென்ன வேணும். இதுக்கு மேலே வாழ்க்கையிலே என்ன இருக்கு? இதையெல்லாம் அடைய எம் சொந்தப்பெருமை, எப்படி போனாலென்ன? இப்ப இதுதான் இஞ்சை நடந்து கொண்டிருக்கு. இது எங்கட மண்ணைப் பிடித்த சாபம். நீ வந்ததாலே இந்த சாபமே தீர்ந்த மாதிரி இருக்கு. வா! நானும் நீயுமாக சேர்ந்து, எரிந்து போன நம் வீட்டை புதுப்பித்து, ஒரு புது வீடு கட்டப்பார்ப்போம் என்ன நான் சொல்வது, உனக்கு புரியுதா?"

"அப்படியென்றால்... என்று அவன் இழுத்தான் அவளே தொடர்ந்தாள்"

ஆமாம்! உன்னாலே, இதைப்புரிந்து கொள்வது கூட கஷ்டம்தான். வெளிநாடு போனால் பணம் வரும், வீடு மிதக்கும், வீடு மிதந்தால், மனிதன் காலடியில் நாய் கூட விழும். இதுக்காக நாம் வேடம் கூடப் போட்டுக் கொண்டு ஆடலாம்.

நமக்கு இவ்வளவே பெருமை. மற்றதெல்லாம் அடியோடு மறந்து, அத்திவாரமே ஆட்டம் கண்டு தகர்ந்து போச்சு, இனியென்ன பெருமை! ஆன்மீக ஞானமே இல்லாமல், வரட்டு கௌரவமே பெரிசென்று, நினைத்தால் இப்படித்தான் நடக்கும். உண்மையான பெருமை தெரியாமல் கடவுள் போக்குக்கு மாறாய், வெறும் வீட்டிலே நம்பிக்கையும், ஆசையும் வைச்சு எல்லாமே தடம் புரண்டு தலைகீழாய் போச்சு! இது ஒரு கலியின் காலாக்கினி மாதிரி, என்னையும் உன்னையும் எல்லோரையும் எரித்துக்கொண்டிருக்கு! இதிலிருந்து மீளவேண்டுமானால், மேலான நன்மை தரக்கூடிய கடவுள் ஞானமில்லாமல் முடியாதே!

அவன் இதையெல்லாம் கேட்டு கிரகித்துக் கொண்ட பாவனையில், தலை ஆட்டியவாறே ஜன்னலைத் திறந்து விட்டு வெளியே பார்த்தான். மாறுதலாகத் தெரிந்த, அந்த பழம் பெரும் கிராமத்துத் தெருக்களில், வழியை அடைத்துக் கொண்டு இரு மருங்கிலும் வளர்ந்து ஓங்கி நிற்கும் நவீன மயமான, பெரிய பெரிய வீடுகளினிடையே, உயிரிழந்த வெறும் நிழலாகக் கண்ணுக்கு தெரியாமல் மறைந்து தோன்றும் ஒரு வெறுமை துளசி சொன்ன மாதிரி அவன் மனதை நெருடியது, அதைப் புரிந்து கொண்டதும், அவனது போலி நிலை மாறி, மனதை நிறைத்து ஓர் ஒளிவட்டம் சூழ்ந்தாற் போல், அவன் முகம் களை கொள்ளக் கண்கள் சிரித்து, ரொம்ப உணர்ச்சி வசப்பட்டு போனவனாய், அவளை திரும்பி பார்த்துக்கொண்டு ஒரு வேத வாக்குப் போல, அவனின் குரல், துளசியின் காதிலே கணீரென்று ஒலித்தது.

துளசி! நீ சொல்வது எனக்குப் புரிகிறது. வெறும் பெருமையாலே பலனில்லை. ஆன்மாவை அந்த வழியிலே தேடிப்பார்க்க வேண்டும். இதுதான் உண்மை. வாழ்க்கையின் சத்தியத்தை நம்புவதும், ஏற்றுக்கொள்வதும் தான் உண்மையான பெருமை. இதை நல்வழியில் அடைய நினைக்கிறதே, நீ சொல்கிற புது வீடு. இதை எப்ப கட்டத்தொடங்கலாம்?

"காசில்லாமல் கட்டப்போறே, இந்தப் புதுவீட்டைப்பற்றி உனக்கென்ன கவலை" என்று அவள் எல்லாம் மறந்து சிரித்தாள்.

**முற்றும்**

## ஒட்டகமும் நாயும்

வள்வள்ளென்று நாய் குரைக்க,
எள்ளளவேனும் குழம்பாது
எட்டி நடக்கிறது ஒட்டகம்.
துரத்தித் துரத்திக் குரைக்கின்றது,
தொடர்ந்தோ ஒட்டகம் நடக்கின்றது.

தனிநாய்க் குரைப்பு காழ்ப்புணர்வால்
தானும் உயரமில்லை என்று.
தூண்டி மகிழும் ஒத்த நாய்கள்.
சூது அறியா ஊர் நாய்கள்
சேர்ந்து குரைக்கும் கடிப்பதற்காய்.

அலட்சியம் செய்யும் உயர்ந்த ஒட்டகம்
இலட்சியப் பயணத்தைத் தொடர்கின்றது.
குழப்ப நினைத்த நாய்க்கூட்டம்
குழம்பிக் கலைந்தது தோல்வியுடன்.
பயண இறுதியில் கற்பாறைமீது
பொன்னென ஒளிர்ந்தது ஒட்டகப் பெயரே.

–அருள்தந்தை இராசேந்திம் ஸ்ரலின் –

# பாலம்



ஏ.எஸ்.உபைதுல்லாஹ்



பாய்ந்தும், பரந்தும், தடவியும், தாவியும் வரும் மகாவலி கங்கை, மோகரித்து எழும் வங்கக்கடலைக் கண்டு உணர்ச்சி வசப்பட்டு கிளைகளாகப்பிரிந்து கொட்டியாரக்குடாவில் வந்து கலந்து தாகம் தீர்த்துக் கொள்கிறது. பிரிந்த கிளைகள் வளைந்தும் நெளிந்தும் அரவணைக்கும் அழகிய நிலமே என்தாய் நிலம் என்று பெருமை கொண்டதெல்லாம் முப்பதாண்டு கால யுத்தத்தால் தலைகீழாகி அவலத்தாலும், அழிவாலும், அலைக்கழிவாலும் அறியப் பட்ட ஊராகி விட்டது. போதாக்குறைக்கு சுனாமியும் இந்த அழகிய கிராமத்தை ஒருகை பார்த்துவிட்டது.

2004 ல் அடித்த சுனாமி தென்னந்தோப்புக்கிராமத்தையும், கரச்சவெட்டையையும் ஊடறுத்து ஓடும் ஆற்றை இன்னும் ஆழமும் அகலமும் உடையதாக மாற்றிவிட்டது. முன்பென்றால் கோடை காலத்தில் வற்றி புறங்காலளவு தண்ணீர்தான் கிடக்கும். மாரிகால மென்றால் முழங்காலளவு. இப்போது சாதாரணமாகவே இடுப்பளவு காணப்படுகிறது.

தரையில் ஓடும் கார் அப்படியே ஓடிவந்து மாறா அதே வேகத்தில் படகாகமாறி ஆற்றைக்கடந்து அப்பால் மீண்டும் காராக மாறி ஓடிப்போவதைப்போல பொதுமக்கள் நடந்து வந்து ஆறு நெருங்கியதும் லாவகமக ஆடையைத்தூக்கிக்கொண்டு ஆற்றைக் கடந்து அப்பால் நடந்து போவார்கள். இப்போது அது முடியாத காரியமாகிவிட்டது.

“ஆறில்லாத ஊருக்கு அழகு பாழ்.” அந்தப்பழி இந்த ஊருக்கு இல்லை. சேனக்காட்டையும், தென்னந்தோப்புக் கிராமத்தை யும் ஊடறுத்து ஓடும் ஆற்றின் தெளிந்த நீரும், அதன் கரை தொட்ட செழித்த கோரைப்புற்களும், மஞ்சளும் சிகப்புமாகப் பழுத்த தில்லைகளும், எட்டத்தில் வரிசை கட்டி நிற்கும் குலைதாங்கிய தென்னைகளும், அதன் கீழ் கொட்டிப்பரத்தியது போல தோற்ற மளிக்கும் வெண்மணல் பரப்பும் காலம் பூராகவும் தென்னந் தோப்புக் கிராமத்திலேயே வாழச்சொல்லும்.

என்னதான் ஆற்றின் இரு கரைகளும் அலங்கரிக்கப் பட்டிருந்தாலும் அக்கரைப்படுவது என்பது எப்போதும் ஒரு பிரச்சினையாகவே இருந்து வந்தது.

ராணுவமும், புலிகளும் மோதிக்கொண்ட காலங்களில் பிரதான வீதியில் இருந்த எல்லாக்கடைகளும் கொள்ளையடிக்கப் பட்டு நெருப்பு வைக்கப்படும் போதெல்லாம் பனைக்குமேலாலும், தென்னைக்கு மேலாலும் தீச்சுடர் ஆங்காரத்தோடு சாம்பலையும் தீப்பொறிகளையும் மேலே வீசி எறிந்து எரிந்ததும், ரவுண்டப் என்று சொல்லி இந்திய ராணுவத்தினர் ஆட்களைப்பிடிக்க துரத்துகின்ற பொழுதுகளிலும் இந்த ஆத்துக்குள்ளால் ஓடி விழுந்து எழுந்து பட்டபாட்டை இபபோது நினைத்தாலும் குலை நடுங்குகிறது. ஆற்றைத்தாண்டினால் தென்னந்தோப்புக்கிராமம். அதையும் தாண்டினால் கொட்டியாரக்குடாதான்.!

அப்போதே மக்கள் ஒரு முடிவுக்கு வந்து விட்டிருந்தார்கள். எப்படியும் இந்த ஆத்துக்கு ஒரு பாலம் போடணும்.

“ஒடனயே ஒரு கடிதம் எழுதிக்கிட்டு எம்பிமாரப் போய்ப்பாப்பம்”

“என்னத்துக்கு பாலங்கட்டயா? ஒடன ஓமென்றுவாக... அடுத்தநாளே கல்லு கம்பியெல்லாம் வந்து எறங்கிரும்... வேற வேல

இல்லியா... எம்பிமார்ட்டப் போய் காலத்த வீணடிக்காம உருப்படியா எதாவது செய்யலாமாண்டு பாருங்க"

"உண்மதான். இது தேர்தல் சிசனுமில்ல....

"நா... என்ன சொல்றனென்டாக்கா... யாரு வேணுமென்டாலு கட்ற நேரத்துல கட்டட்டும். நம்மலுக்கு பாலம் இப்ப வேணும். அதால பொது மக்களாகிய நம்ம நம்மலால ஏன்டமட்டுக்கு கட்டுவோம். என்ன சொல்றிங்க"

"மெய்யான பேச்சி. இப்பயே வசூலக்கிசூலப் போட்டு வேலயத்தொடங்குவோம். என்ன?...."

ஆற்றுக்குள் வரிசையாக பாலக்கட்டைகளை நாட்டி, பழைய கேடறால் இணைச்சி, குறுக்கால சிலாக பொறவெட்டு என்டு போட்டு அடிச்சி ஒரு மாதிரி பாலம் ரெடி. அண்டெய்க்கெண்டு சேனக்காட்டு பிள்ளைகளும், தென்னந்தோப்பு பிள்ளைகளும் அங்காலயும் இஞ்சால யுமா பாலத்தால ஓடித்திரிஞ்சதை நினைக்க நினைக் இன்றைக்குப் போல் இருக்கிறது.

பொதுவாக, பொதுப்படையாக ஒரு வேலையை தொடங்கும் போது சமூக சேவை என்று சொல்லிக் கொண்டு எல்லோரும் வந்து வரிந்து கட்டிக் கொண்டு நிற்பது வழமை. சுல்தானும், நண்பர்களும் அவ்வாறுதான் இரவு பகலாக பாலத்தோட பாலமாக நின்று பிடித்தார்கள்.

பால வேலைகள் முடிய வழமைபோல கரச்ச வெட்டைப் பள்ளத்துக்குள் றால்கட்டிக்கொண்டும், ஜெய்லாப்பாட தோட்டத்துல கிண்ண மூக்கப்பாத்து எளனி குடித்துக்கொண்டும் திரிந்தார்கள். சுல்தானின் தலைமையில் ஒரு நண்பர் குழாம் இருந்தாலும் றகுமானும், வதூத்தும் நிரந்தர அங்கத்தவர்கள் போல எப்போதும் சுல்தானுடன் தான் திரிவார்கள்.

மணித்தியாலக்கணக்கில் கச்சிக்காக்காவின் துறையில் முழுவுவார்கள். அப்பிடியே நைஸா நடுத்தீவில் கரையேறி வதூத்தை ஒரு பற்றைக்குள் ஒழித்து வைத்துவிட்டு முந்திரியங் தோப்புக்குள் நுளைந்து காயவைத்திருக்கும் முந்திரியங் கொட்டைகளையும், கொத்துங்குலையுமாக முந்திரியம் பழங்களையும் மடக்கிக் கொண்டு வருவார்கள்.

வந்த வேகத்தில் கபீப் நகர் கடற்கரைக்குப் போய் மணலுக்குள் காலைப் புதைத்துக் கொண்டு இருந்து முதலில் நல்லபழமாகப் பார்த்து வதூத்துக்கு கொடுப்பார்கள். பின்பு பக்குவமாக கூட்டிப்போவார்கள். எப்போதும் கண்தெரியாத வதூத்தின் நலனில் கண்ணும் கருத்துமாக இருப்பார்கள்.

இவ்வாறு சின்னவயதில் இருந்தே இணை பிரியாத நட்பாக அவ்வுறவு வளர்ந்து வந்தது. அந்நேரம் தான் அக்கரைச்சேனையின் அறிவுக் கண்களுள் ஒன்றென்று வர்ணிக்கப்படுகின்ற அல்ஹிலால் உதய மானது. அப்போது சுல்தானும், றகுமானும் பாட சாலைக்கு போக,வதூத் வாப்பாவின் தேத்தண்ணிக் கடைக்குப் போனான். வதூத்தின் வாப்பா பாலத்தடி யில் ஒரு தேத்தண்ணிக்கடை வைத்திருக்கிறார். வாப்பாவுக்கு ஒத்தாசையாக அவர் இல்லாத நேரம் பொடியனின் உதவியோடு கடையில் இருந்து கொள்வான்.

சிறிய வயதில் ஏற்பட்ட ஒரு விபத்தில் வதூத் தனது பார்வையை இழந்தவிட்டான். பார்வை இல்லையே தவிர மனோதைரியமும் உடல் வலுவும் வாய்க்கப்பெற்றவன். மிகவும் நிதானமானவன். தைரியமானவன். காரியகாரன்.

கடலுக்கும் பாடசாலைக்கும் பள்ளி வாசலுக்கும் செல்வதற்கு ஒரே வழி இந்தப் பாலந்தான்.

பயன்பட்டாலும், பயன்படாவிட்டாலும் மனிதர்க்கே வயதாகிறதென்றால்,பாலம் மட்டும் சிரஞ்சீவியாக நீடிக்குமா? நாளுக்கு நாள் பாலம் சில சிலாகைகளை இழந்து பொக்கைவாய் காட்டி சிரிக்கத்தொடங்கியது. சில அடாத்துப்பிடித்ததுகள் அந்த மரப்பாலத்தால் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்யப்போய் அது இன்னும் சிதைவடையத் தொடங்கியது.

இப்பொழுது பாலம் பல்லிழித்துக் கொண்டி ருந்தது. கரணந்தப்பினால் மரணம் என்றகணக்கில் பயணிகள் கயிற்றில் நடக்கும் சாகசக்காரன் போல பலன்ஸ் பண்ணி போய்வந்து கொண்டிருந்தார்கள். சில சமயம் தவறி ஆற்றுக்குள் விழுந்து முழுக்க நனைந்து பொருட்களையும் ஊறவைத்துக்கொண்டு போவார்கள். சில நேரம் விழுந்தவர்களுக்கு குவாட்டி காலைப்பொளந்து விடும். அப்படியே ரெத்தவாறோட கெந்திக்கொண்டு வந்து வதூத்தின் கடையில் முதலுதவியாக சுண்ணாம்பு வாங்கித் தடவிக்கொண்டு போவார்கள்.

அதேவேளை மறக்காமல் "இந்தபாலத்துக்குப் பதிலாக ஒரு உருப்படியான பாலங்கட்டணும். ஓடனயே கட்டணும்" என்று பேசிக் கொண்டு போகத் தவறுவதில்லை. அவ்வாறு திடசங்கற்பம் பூணுவதோடு சரி. யாரும் அதற்காக முன்வருவதில்லை. இந்த முரண்நகை பால விடயத்தில் மாத்திரமல்ல. மூதூரில் இருந்து திருகோணமலைக்கு கடல் வழியாக பயணம் செய்பவர்கள் மணித்தியாலக்கணக்கில் ஜெற்றியில் வெய்யிலில் காத்துநின்று பின் பொலிஸ்காரன் அருள்கூர்ந்து அடையாள அட்டை பரிசோதிக்க முன்வந்து, பின் ஆண்பெண் என வேறாகப்பிரித்து உடல் முழுவதும் ஆயுதம் தேடி அனுப்ப, அடுத்து வரிசைகட்டி நின்று லோஞ்சிக்குள் ஏறி வசதியான இடம் தேடும் படலம் முடிந்து பொருத்தமான இடத்தை கைப்பற்றி அமர்ந்து கொள்வார்கள். பாதாளமலை ஓரமாக இந்த சிறிய படகு தன் வயிறு நிரம்பி வழியுமளவு ஏற்றிய மக்களை தனக்குள் வைத்துக் கொண்டு அந்த மரண மாரிசா அலைகளுக்கு ஈடு

கொடுக்க முடியாமல் இப்போதோ அப்போதோ தாண்டு விடப்போகிறேன் என அலையின் மடியில் அலைக் கழிக்கப்படுகையில் "இந்த லோஞ்சை உடனே போக்கு வரத்தில் இருந்து நிறுத்தி ஒரு சிறிய கப்பல் ஒன்றை போக்குவரத்தில் ஈடுபடவைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என திட சங்கற்பம் எடுப்பார்கள். ஆனால் அப்பால் வில்லூண்டியில் அடிபிடிப்பட்டு இறங்கியதும் அனைத்தையும் மறந்து விடுவார்கள்.

இனி மீண்டும் திருகோணமலையில் இருந்து திரும்பிவரும் போது திடசங்கற்பம் பூணப்பட்டு பாதாள மலை தாண்டி மூதூரின் கரையோரத் தென்னைகள் கண்ணில் தெளிவாகத்தெரியத் தொடங்கியதும் திடசங்கற்பம் மீண்டும் அம்பேல். இந்தபரம்பரைப் பழக்கதோசந்தான் இப்போது பாலத்தின் விடயத்திலும்.

வதூத்துக்கு கண்தெரியாதென்றாலும் கடையடியில் வந்து மக்கள் நாளாந்தம் பாலம் பற்றிய



மாராயத்தை கதைத்துக்கொண்டு போவதை செவி மடுக்கத் தவறுவதில்லை. அந்தப்பாலத்தின் முக்கியத்தை உணர்ந்து கதைத்துக் கொள்ளும் மக்கள் அதனை உருப்படியாக உருவாக்க முனைகிறார்களில்லை என மக்களின் மீது அவனுக்கு கோபம் வந்ததில்லை.

மக்களுக்கு மேற்கொண்டு யாரிடம் சென்று என்ன விதமாக காரியம் சாதிக்க வேண்டும் என்ற விபரம் தெரியாது. ஆனால் அரசியல்வாதிகள் தேர்தல் பருவகாலத்தில் வந்து பாடல், கவிதை என திருவிழா நடத்தி உருவேத்தி அடுத்த கட்சிக்கு வாக்கு போய்விடும் என தெரிந்தால் இறுதி ஆயுதமான சமயத்தை கட்சியுடன் கலந்து கட்டியடிக்கிற அடியில் மூளையுள்ளவர்கள் கூட வாக்குகளை வாரிக்கொடுத்து விடுவார்கள்.

அரசியல்வாதிகளும் ஏறக்குறைய ஒரு மாதகாலம் மெனக்கெட்டதற்கு சில்லறை சில்லறை யாய் வாக்குப் பொறுக்கி சொல்லி வைத்த பிரகாரம் மொத்தயாவாரம் பண்ண கொழும்புக்கு போய்விட, மக்கள் மற்றுமொருமுறை ஏமாற்றப்பட்டதை பெருமை யாகப்பேசிக்கொண்டு திரிவார்கள். இந்தப் பரிதாபங் களையெல்லாம் நன்றாக அறிந்த வதூத், அரசியல் வாதிகளின் கன்னத்தில் ஓங்கி அறைய வேண்டும் என நினைப்பான். ஆனால் பார்வையிழந்த அவனால் என்ன செய்ய முடியும்.

சின்னவயதுப்பழக்கம் மாறாமல் பின்னேரப் பட்டால் றகுமானும். சுல்தானும் வதூத்தைத் தேடிக் கொண்டு தேனீர் கடைக்கு வந்துவிடுவார்கள். அவர்கள் இருவரும் "புட்போல்" பிரியர்கள். வதூத்துக்கு பார்வ யில்லையாயினும் அவனையும் கிரவன்டுக்கு கூட்டிப் போவார்கள். வதூத்துக்கு விளங்கும் விதமாக போட்டியை விளக்குவார்கள். அன்று முகம்மதி யாக்கும். விக்டரிக்கும் மெச் என்று கூப்பிட்டு வந்தார்கள்.

"வதூத் வாவென்டா மெச்சிக்கி போவம்"

"நா...வரயில்ல"

"அப்படியெல்லம் ஒன்னுமில்ல. ந...வரயில்ல"

"டேய்... இவன் பொய் சொல்றான்டா... என்னத்தயோ யோசிச்சிக்கிட்டு இரிக்காம் போல தெரியிது. ஏன்டா...வதூத் சொல்லன்டா என்னடா விசியம்"

"ஒண்ணுமில்லடா...நா... இன்டக்கி வரயில்ல"

"டேய்..டேய்.. பொய் சொல்லாத. நீ என்னத்தயோ யோசிச்சிக்கிட்டு இரிக்கா. மொசல் புடிக்கிர நாயெ எங்களுக்குத் தெரியாதாக்கும்? மரியாதியா சொல்லு. என்ன விசியம்...?"

"சொல்றன். ஒவ்வொரு நாளும் இந்த ஓடஞ்ச பலத்தால நம்மட சனம்பர்ர பாடு இரிக்கே... அத நெனச்சாத்தான்...?"

"அட... இஞ்சப்பார்ரா... அதுக்கு நம்மென்னடா செய்ர....சரி. எம்பிமார்ட்ட சொன்னாச்சரி... தேர்தலுக்கு வருவானோளு. இப்ப நீ வெளிக்கிடு"

வதூத்துக்கு நண்பர்களை நினைத்து அழுவதா சிரிப்பதா என்று விளங்கவில்லை. இன்னும் தாமதித்தால் அவர்கள் வேறு எதையாவது ஆரம்பித்து விடுவார்களாகையால் வதூத் புறப்பட்டான்.

நண்பர்கள் நல்லதொரு "மெச்" பார்க்கலாம் என உற்சாகமாகப்புறப்பட்டுப் போக அங்கே... மைதானத்தின் நடுவே ஆட்கள் குழுமி நின்றார்கள். டெக்டர் ஒன்றில் பாடசாலை மேசைகள், கதிரைகள் வந்து பறிபட்டுக் கொண்டிருந்தது. சிலர் கம்பம் ஒன்றை நடுவே நாட்டி நடுக்குத்தாக நிமிர்த்திக்

கொண்டிருந்தனர்.

கிட்டப்போய் விசாரித்த போது தான் அமைச்சர் வரப்போகும் விடயம் தெரிந்தது. முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டு நண்பர்கள் மூவரும் நேரே வதூதின் கடைக்கே வந்து சேர்ந்தனர்.

"சுல்தான்"

"என்ன வதூத்?..."

"நாளைக்கு அமைச்சர் வாற கூட்டத்துக்கு போறதானெ?"

"இன்ஸால்லாஹ்"

"என்ன மறந்திரப்புடா"

"பைத்தியமா... கட்டாயம் வந்து கூட்டிப் போவோம்"

அடுத்த நாள் பக்கத்து தென்னயின் இடுப்பளவில் இரண்டு ஸ்பீக்கர்கள் கட்டப்பட்டு பிற்பகல் மூன்று மணிக்கே "அதிகாலை நேரம்... சுபகுக்குப் பின்னே..." என நாகூர் கனிபா ஆரவாரம் பித்துவிட்டார். சத்தத்தைக்கேட்டதும் சேனக்காட்டு நண்டு சிண்டு களெல்லாம் அவ்விடத்தில் ஒன்று சேரத் தொடங்கி விட்டன. தூரத்தில் ஆங்காங்கே சில பெரிசுகள் தென்னம்பிள்ளை வளவுக்குள் அண்ணல் நபியின் தலையில் குப்பை கொட்டப்பட்ட கதையை கனிபாவின் கணீர் குரலில் கேட்டு தம்மை இழந்து கொண்டிருந்தார்கள்.

பிற்பகல் நான்கு மணிக்கெல்லாம் தக்பீர் முழக்கத்தோடு அமைச்சர் மேடைக்கு வந்து விட்டார். அமைச்சரின் காதுக்குள் ஆதரவாளர்கள் ஏதோ கூறி அமைச்சருக்கும் தமக்கும் இருக்கும் இறுக்கத்தை உலகறியச்செய்து, அமைச்சரின் முக்கிய கவனத்தையும். அருட்பார்வையையும் பெறும் வழமையான சம்பிரதாய பூர்வ சடங்குகள் செவ்வனே நிறைவு பெற்றதும் கூட்டத்துக்கு தலைமை தாங்கியவர் அமைச்சரைப் பேச அழைக்க, அமைச்சர் எழுந்தார்.

கட்டுச்சீனவெடிகள் ஓர் ஐந்து நிமிடங்கள் காதை செவிடாக்கி ஓய, அமைச்சர் பேசத்தொடங்கி முழுநீள வசனங்களில் தெள்ளுதமிழும், கொல்லு தமிழும் கலந்து கட்டி அடித்துக்கொண்டிருந்தார்.

மக்களுக்கு விளங்குகிறதோ இல்லையோ ஆங்காங்கே ஸ்தாயியை உயர்த்தி, நிறுத்தி மானசீகமாக மக்கள் கைதட்டல் பிச்சையை எதிர் பார்த்தார். மக்களும் வஞ்சம்வைக்காமல் வழமைபோல தட்டிவிட்டுக் கொண்டிருந்தனர். ஒருவாறு ஒன்றரை மணிநேரம் சிறப்புச்சொற்பொழிவாற்றிய அமைச்சர் வழமை போல "எனவே... உங்கள் உரிமையை கட்டிக்காப்போம்.... தட்டிக் கேட்போம்....என வீர முழக்கம்செய்து அமர, கைதட்டல் தென்னஞ்சோலைகளெல்லாம் எதிரொலித்தது.

பேச்சு முடிய என்வலப்பில் வேண்டு கோள் களை எழுதி அமைச்சர் சாதித்துத்தருவார் என்ற நம்பிக்கையில் மக்கள் என்வலப்புடன் அமைச்சரை நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தனர். அமைச்சரும் வழமைபோல மாறாத புன்னகையுடன் என்வலப்புக் களை வாங்கி மிக்க பக்குவமாக? அஸிஸ்டன்டிடம் கொடுத்தார். அவ்வாறு மக்கள் முண்டியடிப்பதை உணர்ந்த வதூத், தானும் ஒருதடவை அமைச்சர் வரை போய் வருவோம் என மேடையை நோக்கி போக முற்பட்டான்.

"எங்கடா வதூத் போப்பறா..."

"மேடைக்கி..."

"நீ என்னத்... சரி. போ" ஏதோ அமைச்சருக்கிட்ட போக ஆசைப்படுகிறான். அமைச்சர் இவனது நிலையைப் பார்த்துவிட்டு ஏதாவது கவனிப்பார் என்ற நினைப்பில் றகுமானும், சுல்தானும் வதூத்தை மேடையை நோக்கி அழைத்துச் சென்றார்கள்.

மேடையை நோக்கி முன்னேறிக் கொண்டி ருந்த நண்பர்களை அமைச்சரின் ஆதரவாளர்கள் கண்டுவிட்டார்கள். உடனே "அமைச்சரை ஏதும் சங்கடத்துக்கு உட்படுத்திவிடுவார்களோ" என்ற உயரிய நோக்கோடு அவர்களை நெஞ்சில் பிடித்து பின்னோக்கி தள்ளிக் கொண்டு வந்து–

"போங்கடா...ஆக்கள்ற செப்பத்துக்கு..." என விட்டுவிட்டுப் போனார்கள்.

கண்தெரியாத வதூத்துக்கு கிடைக்க இருந்த உதவி தடைப்பட்டுவிட்டதே என்ற கவலையில் றகுமானும், சுல்தானும் கூட்டத்தின் மற்றுமொரு மூலை யில் இருந்து மேடையை நோக்கி முன்னேறினார்கள். இப்போது பாதுகாப்பு தரப்பினர் அவர்களை தடுத் தார்கள். எப்படியோ கண்தெரியாத ஒருத்தர் மேடைக்கு வரவிரும்புகிறார் என்பதைக்கண்டு விட்ட அமைச்சர் கையசைத்து மேடைக்கனுப்புமாறு சைகை செய்ய வதூத் மேடையில் ஏற்றிவிடப்பட்டான். அன்றைக்கு அமைச்சருக்கு அருகில் செல்லும் பாக்கியம்!?

கிட்டிய வதூத்தை சிலர் ஒரு வித பொறாமையுடனும்,நையாண்டியுடனும் பார்க்கத் தொடங்கிவிட்டார்கள்.

தட்டுத்தடுமாறி மேடைக்கு வரும் இப்படியான வேண்டாத சங்கடங்களை சமாளிப்பதற்காக தயாராக வைத்திருந்த ஐந்நூறு ருபா அடங்கிய நீள என்வலப்பை அமைச்சர் உடன் கையிலெடுத்து கெமராவுக்கும், பொதுமக்கள் பார்வைக்கும் ஏற்ற பொசிசனை தலைவர் கண்ணால் கணக்கிட்டு அவ்விடத்தில் நகர்ந்து போய் நின்றுகொண்டார்.

மேடையில் நின்ற வதூத்தை வெள்ளாடை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தோளில் பிடித்து அமைச்சரின் முன்னே கொண்டு விட்டனர். அமைச்சரும் புன்னகையை வரவழைத்துக்கொண்டு முதலில் வதூத்துக்கு கைகொடுத்தார். அப்படியே வதூதின் வலதுகையைப்பிடித்து என்வலப்பை வைக்க கையில்

என்வலப் பட்டதும் ஏதோ அசூசைபட்டுவிட்ட பதட்டத் துடன் வதூத் கையை வெடுக்கென பின்னே இழுத்தான்

அப்படியென்றால்...என்னதான் வதூத்தின் எதிர்பார்ப்பு...?

அமைச்சரும் பொது மக்களும் முகத்தில் கேள்விக்குறியேந்தி பார்த்துக்கொண்டு நிற்க, வதூத் அங்கிருந்தவர்களிடம் "மைக் எங்க இரிக்கி" என சத்தமாக கேட்டான். உடனே வதூத்தை மைக் இருக்கும் இடத்துக்கு தள்ளிக்கொண்டு போய் விட்டார்கள். அமைச்சரோ ஆதரவாளர்களைப் பார்த்து "என்ன இதெல்லாம்"என்பது போல் முறைத்துக் கொண்டு தொடர்ந்து மாறாத புன்னகையை முகத்தில் மெய்ன் டெய்ன் பண்ணிக்கொண்டார்.

ஆனால், றகுமானுக்கும், சுல்தானுக்கும் ஏகசந்தோசம். வதூத்துக்கு கண்தெரியாதே தவிர காது ரொம்பக் கூர்மை. நடுத்தீவு, கரச்சவெட்டை, உமிரிக் கரச்சை, சவ்க்காலப்பனிச்சையடி, சுலைமாப்பாடமில் வளவு என்று எங்கவிளையாடப் போனாலும் எந்த வீட்டிலாவது ரேடியோவில் பாட்டு கேட்டாலும் உடனே பிரேக் போட்டுவிடுவான் ஒருதரம் கேட்டால் போதும் அப்படியே திருப்பிப் படிப்பான். அதிலும் சௌந்தராஜன் பாடலென்றால் அனாயாசமாகப் பாடுவான். அதிகம் மூக்கை சம்பந்தப்படுத்தி பாடும் போது அவ்வப்போது சௌந்தரராஜனுக்கு கிட்டக்கிட்ட வந்து போவான். அவ்வளவு மோசமில்லை. கேக்கலாம்.

"ஆகா! இன்டெய்க்கி நம்மட வதூத் மைக்ல பாடப்போறான்" என்ற புளகாங்கிதத்தில் காத்திருக்க....

வதூத் மைக்கை நெருங்கினான்.

"பிஸ்மில்லாஹி ரகுமானிர்ரஹீம்... அமைச்சர் அவர்களே! கண்தெரியாத எனக்கு ஏதாவது ஒதவி செய்ங்க என்டு நான் கேக்கவரயில்ல. கண்தெரிஞ்ச மக்களுக்காக ஒரு சேவ செய்யச் சொல்லி வந்திரிக் கென்... இந்த சேனக்காட்டுக்கும், தென்னந்தோப்புக்கும் எடயால ஓர்ர ஆத்தப்பாருங்க ரெண்டுபக்கத்து மக்களும் போக்குவரத்து செய்ய இந்த மரப்பாலத்தத்தான் பாவிக்கிராக. அதுவும் எறந்து இத்துப்பெய்த்துது. இதுல ஒரு நெரந்தரமான பாலம் ஒன்ன நீங்க கட்டித்தரனும்.

பாலங்கட்டுனா....பின்னால ரோட்டுவரும். வாகனம்வரும் எங்கட பள்ளிக்கொடத்துல படிப்பிக்க மாஸ்டர்மார் சந்தோசமா வருவாக. இந்த கரச்ச வெட்யில கூட ஒரு பள்ளிக்கூடங்கட்டலாம். அதால தயவு செஞ்சி இந்த ஆத்துக்குக் குறுக்கால பாலங்கட்றத்துக்கு ஏற்பாடு செய்ங்கன்டு எங்கட மக்கள்ற பேரால கேட்டுக்கிறன் அல்ஹம்துலில்லாஹ்"

சற்று நேரம் மெய்ம்மறந்து போய் நின்ற சனம், திடீரென கைதட்டவாரம்பித்தது. ஏறக்குறைய அமைச்சர் கிடுக்கிப்பிடிக்குள் அகப்பட்டதப் போலத்தான். குறுடனையும் ஏமாற்ற முடியாதாகையால்... வேறு வழியில்லை.

அமைச்சரும் பாலங்கட்டுவதாக வாக்குறுதி யளித்தார்.

இரண்டு நாளில் பால நிர்மாண வேலை களுக்கான கல் மண் கம்பியெல்லாம் வந்து குவிந்து அத்திவாரக்கல்லும் நடப்பட்டு வேலைகள் ஆரம்ப மானது. மேடையின் மீது வதூத் ஏறிய போது கொதித்துப்போன ஆதரவாளர்கள், வதூத்தால் ஒரு கொண்ட்ரக்ட் வருகிறது என்றதும் ஆறிப்போனார்கள்.

பாலம் கட்டும் இடத்துக்கு ஆதரவாளர்கள் தவணைமுறையில் படையெடுத்தார்கள். நாங்கள் தான்... எங்களால்தான்.... என்பதை ஊருக்கு உறுதிப் படுத்து முகமாக பால வேலைத்தளத்தை சுற்றிச் சுற்றி வந்தார்கள். அடுத்துவரும் பிரதேசசபைத் தேர்தலை குறிவைத்து சிலர்,பெரும்பாலான நேரங்களில் கடனே என பாலத்தடியிலேயே கிடந்தார்கள்.

இரவுபகலாக பால வேலைகள் துரிதமாக நடைபெற்று திறப்புவிழாவுக்கான ஏற்பாடுகளும் மள மளவென நடைபெற்றது. அதுவரை பாலம் அவர்களுக்கு ஒரு கனவுப்பொருளாகவே இருந்து வந்தது. அது மெய்ப்பட்டதும் மக்களின் வாயில் பாலமும் ஒருபேசு பொருளாகவே இருந்தது.

சுல்தானும், றகுமானும் வதூதைக்காணும் போதெல்லாம் திறப்புவிழா பற்றியே பேசிக் கொண்டார்கள். விழாமேடையில் வதூத்தும் ஒரு விருந்தினனாக அமரச்செய்யும் போது தாங்களும் அவனருகில் நின்று கொள்ளவாவது கிடைக்கப்போகும் சந்தர்ப்பத்துக்காக காத்திருந்தனர்.

நாளைக்கு பாலம் திறப்புவிழா.

ஆனால் இதுவரையில் வதூத்துக்கு அழைப்பிதழ் கிடைக்கவில்லை.

விடிந்ததும் விழா களைகட்டத்தொடங்கியது. வதூத்தை யாரும் கண்டுகொள்ளவில்லை. விழாவும் சகலசம்பிரதாயங்களுடனும் கோலாகலமாக நடை பெற்று முடிந்தது.

கண் தான் ஊனமே தவிர, காது தெளிவாகவே இருந்து விழா வைபவங்களை உள்வாங்கிக்கொண்டது.

பாலம் அமைவதற்குக் காரணமாக இருந்த வதூத்தை யாரும் கண்டுகொள்ளாதது நண்பர் களுக்குப் பொறுக்கமுடியவில்லை.

"வதூத் நன்டிகெட்ட நாயோளப்பாத்தியா... மச்சான். ஒன்னச் கூப்பிடமாட்டன்டுட்டானோளு"

"உர்ரா.... உர்ரா.... நம்மள என்னத்துக்கு கூப்புர்ர.... எப்புடியோ பாலங் கட்டுப்பட்டுட்டுலவா சனம் சந்தோச மாப் போவுமலவா... அது போதும். அல்ஹம்து லில்லாஹ்...".

"சீ...என்ன கதக்கிரா...எல்லாரும் வாயப் பாத்துக் கிட்டு இரிக்கக்கள நீதானடா பாலங்கட்டனு மென்டு சொன்னா. ஒனக்கு ஒரு அழைப்புத் தந்திரிக்கனுமலவாடா..."

"தந்து தான் என்ன செய்ர. அது ஒரு மங்களகரமான காரியம். அதுக்குள குருடனையும் கொண்டு வெச்சா நல்லாவா இரிக்கும்....?. உடு....உடு..."

"என்ன வதூத் கதக்கிரா...நீ குருடன் இல்லடா...ஒன்னக்கண்டுக்காம உட்டவனோளுதான்டா உம்மயான குருடன்" என்று நண்பர்கள் தம் ஆத்திரத்தைக் கொட்டிவிட்டுப் போனார்கள்.

நண்பர்கள் போனாலும் அவர்கள் விட்டுச் சென்ற வார்த்தைகள் காதுக்குள் ரீங்காரித்துக் கொண்டே இருந்தது. வதூத்துக்கு பார்வை இல்லையே தவிர அவனது உணர்வுகள் செத்துவிட வில்லை. அவனும் மனிதன் என்றவகையில் இதயத்தின் ஒருஓரத்தில் விழா வுக்கு போவதற்கான ஒரு எதிர்பார்ப்பு இருக்கவே செய்தது. அதனால், நண்பர்கள் மூட்டிவிட்டுப்போன தீ அவனது உள்ளத்தில் மெல்லக் கொழுந்து விட ஆரம்பித்தது.

இரவு வெகுநேரமாகியும் வதூத்துக்கு தூக்கம் வரவில்லை. புரண்டு புரண்டு படுத்தான். சோடனை களால் அலங்கரிக்கப்பட்ட பாலம் எப்படி யிருக்கும் என்பது அவனுக்குத் தெரியாவிட்டாலும் அந்த வைபவத் தோடு தானும் இணைந்து அப்புதிய பாலத்தை ஊரோடு ஊர்வலமாகப் போய் அதன் கன்னித்தன்மையோடு தொட்டாவது பார்த்திருக்க வேண்டும் என அவனது மனம் குமைந்து கொண்டது.

ஊர் உறங்கிக் கொண்டிருந்தது. கொட்டியாரக் குடாவின் ஓயாத அலைகள், கரைதடவும் ஓசை தெளிவாகக் கேட்டது. கடல் காற்று தென்னையின் தலை தடவ அதன் சரசரப்பும் காதில் விழந்தது.. பனியும் லேசாக இறங்க ஆரம்பித்தது. வதூத் ஒரு முடிவுக்கு வந்தான். அந்தப்பாலத்தை போய் தொட்டாவது பார்க்கவேண்டும். பகலில் போய் பார்த்தால் ஊரார் நகைக்கலாம் என எண்ணிய வதூத் அந்த இரவிலேயே சென்று தொட்டுப்பார்த்துவிட எழுந்தான். விழியிழந்த வனுக்கு இரவென்னபகலென்ன ஊரின் ஒவ்வொரு மூலையும் வதூத்தின் கால்களுக்கு அத்துப்படி.

மெல்ல நடந்து சரியாக வீட்டுப் படலையின் கொக்கியில் கைவைத்து படலையை விலக்கி வீதிக்கு இறங்கினான். கால்களால் தடவிக்கொண்டே பாலத்தை நெருங்கினான். அந்த நள்ளிரவில் அதன் அடுத்த அந்தம் வரை ஒரு முறை தொட்டுத் தடவி நடந்து திரும்பினான். அதன் வழுவழுப்பான தூண்களைத் தடவிப்பார்த்தான். படி போன்ற ஓர் இடத்தில் அப்படியே அமர்ந்து தூணில் சாய்ந்து தன் மக்கள் அப்பாலத்தால் சந்தோசமாக பயணிப்பதை கற்பனை செய்து பார்த்தான்.

வாய் தானாகவே "அல்ஹம்தலில்லாஹ" என்று கூற அந்த இன்பத்தின் பிரதிபலிப்பாக அவனது கடைக் கண் ஓரமாக ஒருதுளிக்கண்ணீர் உருண்டோடியது, உறங்கிக்கொண்டிருந்த ஊருக்கு, அது தெரியாது.

# காரணன்



செல்வம் பலம்
அதிகாரம்
அதிகமாய் இருந்த போதும்
இதனிடையே
கடுகுமணி ஒன்று
பலசாலியாய்.

## பிணி தீர்க்கும் மருந்து



சர்க்கரை வெல்லம்
கொண்டு வந்த பாவையின்
சீனி நோயை
பாகற்காய்ச் சாறு
தீர்த்து விடட்து.

## எது?



செல்வத்தைப் பெற பலமும்
பலத்தைப்பெற செல்வமும்
பயன்படும் போது
வெல்லப்படுவது?

**– எம்.எம்.மன்ஸூர் –**

# மனைவி இருக்கிறாவா...?
# Is your wife at home?



முருகபூபதி

இந்தப்பத்தியின் தலைப்பாக உபாதை என்றும் குறிப்பிட நினைத்தேன். ஏன் என்பதை வாசகர்கள் பத்தியின் இறுதியில் தெரிந்து கொள்ளலாம்.

அன்று ஒருநாள் மாலை, நான் எனது நூலக அறையில் கணினியில் எழுதிக் கொண் டிருந்தேன். வாசலில் அழைப்பு மணியோசை கேட்டது. யார் என்று பார்க்கும்படி மனைவிக்கு சற்று உரத்தகுரலில் சொன்னேன். மனைவி வீட்டின் பின்புறத்தில் தான் புதிதாக நட்டு வளர்க்கும் பூஞ்செடிகளுக்கு நீர் விட்டுக்கொண்டிருந்திருக்க வேண்டும்.

"கையில் வேலை. நீங்களே போய்ப் பாருங்கள்" என்று அவளும் உரத்த் குரலில் சொன்னாள்.

யார்... இந்த நேரத்தில் வந்திருக்கக்கூடும். எவரும் வருவதாக இருந்தால் முற்கூட்டியே சொல்லியிருப்பார்கள். பத்து நிமிட கார் ஓட்டத் தூரத்திலிருக்கும் இரண்டாவது மகள் அன்று மாலை வருவதாகவும் சொல்லவில்லையே... தற்பொழுது நாம் இருப்பது மெல்பன் நகரிலிருந்து சுமார் 200 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள கிராமமும் அற்ற மாநகரமும் அற்ற சனசந்தடி செறி வற்ற மிகவும் அமைதியான பிரதேசம். மெல்பனி லிருந்து இந்த மாலைவேளையில் எவரும் புறப்பட்டு வந்திருக்கமாட்டார்கள். வந்திருப்பது யாராக இருக்கும்? என்ற யோசனையுடன் எழுந்துசென்று வாசல் கதவைத்திறந்தேன்.

ஒரு அழகிய இளம் யுவதி. முப்பது வயதிற்குள் மட்டிடலாம். புன்முறுவலுடன் மாலை வணக்கம் சொன்னாள். நானும் பதிலுக்குச் சொல்லிவிட்டு உள்ளே அழைத்தேன். ஆனால் அவள் உள்ளே வராமல் வாசல் கதவுக்கு வெளியே நின்றவாறே உரையாடினாள். அவளது ஒரு கையில் ஒளிப்படங்கள் பதிவுசெய்யப்பட்ட சிறிய அட்டைகள். அத்துடன் ஒரு ஹேண்ட்பேக்.

எமது உரையாடல் ஆங்கிலத்தில் அமைந்தது. அதனை தமிழ்ப்படுத்தினால் இப்படித்தான் இருக்கும் என நம்புகின்றேன்.

"சொல்லுங்கள்... என்ன விடயம்?"

"நான் வேர்ல்ட் விஷன் அவுஸ்திரேலியாவிலிருந்து வருகின்றேன். ஒரு ஏழைப்பிள்ளைக்கு உங்களால் உதவமுடியுமா?"

"ஏற்கனவே நாங்கள் இலங்கையில் போரிலே பெற்றவர்களை இழந்த ஏழைப்பிள்ளைகளுக்கு உதவி வருகின்றோம்."

"அப்படியா...? மிக்க மகிழ்ச்சி. நீங்கள் இலங்கையரா? இலங்கையில் கொழும்பா?"

"இல்லை அதற்கு சமீபமாக உள்ள ஒரு மேற்குகரையோர நகரம் நிகம்பு. நீங்கள்..?"

"இந்தியா. வடக்கு, பஞ்சாப்."

"நல்லது இந்தியரான நீங்கள் ஆபிரிக்க நாட்டுப்பிள்ளைகளுக்கு உங்கள் அமைப்பின் ஊடாக உதவுகின்றீர்கள். சிறந்த மனிதாபிமான பணிகளை வேர்ல்ட் விஷன் செய்வது அறிவேன். எனது மகனும் ஒரு பிள்ளைக்கு உதவிவருவதாக அறிகின்றேன்."

"அப்படியா...நல்லது. மகன் எங்கே இருக்கிறார்?"

"அவன் தொலைவில் தென்அவுஸ்திரேலியா மாநிலத்தில் இருக்கிறான். தற்பொழுது உடல்நலக்குறை வினால் நான் வேலைக்குச்செல்வதில்லை. அதனால் சற்று பொருளாதார நெருக்கடி. பிறிதொரு சந்தர்ப்பத்தில் உங்கள் சேவைக்கு உதவமுடியும். ஏற்கனவே எமது குடும்பம் இலங்கையில் சில பிள்ளைகளுக்கு உதவிவருகிறது. தற்பொழுது உங்களது வேண்டுகோளை என்னால் நிறைவேற்ற முடியாமைக்கு வருந்துகின்றேன்."

"பரவாயில்லை... நீங்களும் பிள்ளைகளுக்கு உதவுவதாக சொல்கிறீர்கள்... நல்லது. அதுபற்றிய ஏதும் பிரசுரங்கள் இருக்கிறதா...பார்க்க விரும்புகின்றேன்."

"ஆம்... நிச்சயமாக...உள்ளே வாருங்கள். எடுத்துவருகின்றேன்."

நான் வீட்டினுள்ளே திரும்பிச்சென்று எமது இலங்கை மாணவர் கல்வி நிதியத்தின் இந்த ஆண்டுக்கான 40 பக்க அறிக்கை மற்றும் வரவு-செலவு அறிக்கை அடங்கிய பிரசுரத்தை எடுத்து வந்து கொடுத்தேன். அப்பொழுதும் அந்த

யுவதி வீட்டினுள்ளே வராமல் வெளியே நின்றவாறு அந்தப்பிரசுரத்தை பார்த்துவிட்டு, "இதனை நான் எடுத்துக்கொள்ளலாமா?" எனக்கேட்டாள்.

"தாராளமாக" என்றேன்.

சில கணங்களில் அவள் கேட்ட கேள்வி என்னை துணுக்குறச்செய்தது.

"உங்கள்... மனைவி தற்பொழுது வீட்டில் இருக்கிறாவா?"

" ஆம்... இருக்கிறாள். பின்புறம் தோட்டத்தில் மரங்களுக்கு தண்ணீர் விடுகிறாள். அழைக்கட்டுமா? "

"இல்லை...வேண்டாம்..." எனச்சொல்லிவிட்டு, சற்று தயங்கினால். பின்னர் மூன்று செக்கண்டுகளில், "உங்களது குளியலறையை பாவிக்கலாமா?" எனக் கேட்டாள்.

"ஆம்... வாருங்கள் உள்ளே..."

நன்றி சொல்லிவிட்டு, கொண்டுவந்த பேக்கையும் பிரசுரங்களையும் தரையில் வைத்துவிட்டு உள்ளே வந்தாள். அழைத்துச்சென்று குளியலறையை காண்பித்தேன். அதற்கிடையில் மனைவியும் வீட்டின் பின்புறமாக வந்துவிட்டாள். மனைவியைக்கண்டதும் அவளுக்கும் மாலைநேர வணக்கம் சொன்ன அந்த யுவதி, தனது உபாதையை போக்கிவிட்டு கைகளை கழுவி சுத்தம் செய்தவாறு வந்து மனைவியுடனும் சிறிது நேரம் உரையாடினாள்.

"இந்தப்பிரதேசம் மிகவும் அமைதியானது. உங்கள் நாட்டவர்களை மட்டுமல்ல எங்கள் இந்தியர் களையும் இந்தப்பிரதேசத்தில் அரிதாகவே பார்க்க முடிகிறது. உங்களுக்கு போரடிக்கவில்லையா? இந்த இடம் உங்களுக்கு பிடித்தமானதா?" எனக்கேட்டாள்.

நான் குறுக்கிட்டு, " இல்லை போரடிக்க வில்லை. எவருக்குமே தாய்நாடு விருப்பமானதுதான். ஆனால் ஏதோ விதிவசத்தால் இங்கு நாமெல்லோரும் புலம்பெயர்ந்து வந்துவிட்டோம். இனம், மொழி மதங்களுக்கு அப்பால் நாங்கள் மனிதர்கள் என்ற அடை யாளத்துடன் வாழ்ந்தால் எல்லோருமே நேசத்துக் குரியவர்கள்தான்" என்றேன்.

"சரியாகச்சொன்னீர்கள்...மீண்டும் சந்திப் போம்" எனச்சொல்லிவிட்டு புறப்படத் தயாரானாள்.

"ஏதும் கோப்பி...தேநீர் அருந்துகிறீர்களா...?" என்று மனைவி அவளை உபசரிக்க முனைந்தாள்.

"வேண்டாம். நன்றி. உங்கள் குளியலறையை பயன்படுத்துவதற்கு உதவியதே பெரிய உபசரிப்புத்தான். மீண்டும் சந்திப்போம்" அவள் விடைபெற்றாள்.

"பாவம் அந்தப்பிள்ளை" என்றேன்.

"ஏன்...?" எனக்கேட்டாள் மனைவி.

"அவளுக்கு வந்த உபாதையை போக்குவதற்கு சிரமப்பட்டிருக்கவேண்டும். தெருவிலே ஆட்களின் நட மாட்டமே இல்லை. எங்கள் வீட்டுக்கு வந்தாவது தனது சிரமபரிகாரத்தை முடித்துக்கொள்ள நினைத்திருக் கிறாள். எனினும் முன்னெச்சரிக்கையாக "உங்கள் மனைவி வீட்டில் இருக்கிறாவா..? என்று கேட்டுக் கொண்டாள்."

நான் அப்படிச்சொன்னதும் மனைவி, "அவள் புத்திசாலிப்பெண். பிழைத்துக்கொள்வாள். நாட்டில் நடக்கும் பாலியல் வல்லுறவு தாக்குதல் சம்பவங்களை அறிந்திருப்பாள்தானே..?" என்றாள்.

சிறுநீர் உபாதை எத்தகையது என்பது என்னைப்போன்ற நீரிழிவு நோய் இருப்பவர்களுக்குத் தெரியும். நண்பர் டானியல் ஒரு சமயம் எனக்குச் சொன்னார், "தம்பி நான் தூரப்பயணங்கள் வெளியூர் பயணங்களை முடிந்தவரையில் தவிர்த்துக் கொள்வ தற்கு எனக்குள்ள நீரிழிவு வியாதியும் ஒரு காரணம்."

ஆம் உண்மைதான். வெளியூர்ப்பயணங் களில் எங்காவது இரவில் தங்கநேர்ந்தால், அந்த இடத்தில் அல்லது இல்லத்தில் எங்கே மலகூடம் இருக்கிறது என்பதை கேட்டுத்தெரிந்துவைத்துக் கொள்வேன். இரவில், இருட்டில் தட்டுத்தடுமாறிவிடக் கூடாது என்பதற்காகத்தான்.

சமீபத்தில் தமிழக இலக்கியவாதி தமிழச்சி சுமதி தங்கபாண்டியனின் பாம்படம் என்ற கட்டுரைத் தொகுதியில் புறவழிச்சாலை கட்டுரையில் பெருந் தெருக்களின் அருகே வளர்ந்திருந்த மரங்களை அழித்திருக்கும் கொடுமை பற்றி உருக்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

அருப்புக்கோட்டை புறவழிச்சாலையில் கொளுத்தும் வெய்யிலில் தலையில் முக்காடு போட்டுக்கொண்டு இளநீர் விற்கும் ஒரு பெண்ணைப் பற்றி பதிவுசெய்கிறார்.

வெய்யிலில் தாகம் எடுத்தாலும் தான் விற்கும் இளநீரைக்கூட குடிக்காமல் எச்சிலை விழுங்கியவாறு தனது உபாதையை கட்டுப்படுத்தும் அந்தப்பெண்ணின் வார்த்தைகளை இங்கே பாருங்கள்:-

" இங்கன இருந்த மரமெல்லாம் வெட்டி, ரோடு போட்டப்ப நானும் காண்ட்ராக்ட்ல வேலை செஞ்சேன். அப்பவும் சரி இப்பவும் சரி...ஒதுங்குறத்துக்கு எங்க போறதுங்கிறதுதான் பொம்பிளைகளுக்குப் பெரும் பாடு. மரத்துக்குப்பின்னாடி இன்னொருத்தி காவலுக் கிருந்தா படக்குன்னு ஒதுங்கிட்டு வந்துடலாம். இதனாலயே இத்தனை இளநி இருந்தும், நா தாகத்துக்கு ஒண்ணும் குடிக்கிறதில்லை. எச்சியை முழுங்கிட்டே இறங்கு வெயில் வரைக்கும் தாக்குப்பிடிச்சுடுவேன். அந்த மூணு நாட்களில் இன்னும் சித்ரவதை. சமயத்துல தூக்கு மாட்டிச்செத்துடலாமான்னு இருக்கும். அட, அதுக்கும் ஒரு மரமில்லாம நாதியத்துப்போச்சு"

நடுவீதியில் உபாதைகள் வந்தால் ஒதுங்க ஏதாவது ஒரு இடம்வேண்டும். அந்த உபாதைகளை எழுத்தில் சொல்வதாயின் வார்த்தைகளும் வேண்டும்.



-அபூர்வன் -

# புனிதம் தகர்க்கும் "புறஹந்த களுவற"

தூய விழுமியமான தியாகத்தினை தேசத்திற் கான சேவை என்னும் மாயச் சட்டகத்துள் முடக்கி ஆதாயம் தேடும் மதம் சார் அரசியல் இருட்டை அடையாளம் காட்டும் படைப்பாக "புறஹந்த களுவற" (Death on a full moon day) அமைந்துள்ளது. பௌர்ணமிதினம் கங்குல் விலக்கும் புனிதநாளாக பௌத்தர்களால் போற்றப்படு கிறது. இயக்குநர் பிரசன்ன விதானகே விழிப்புலன் பாதிப்புற்ற கதாபாத்திரக் கட்டமைப்பினை பின்புலமாகக் கொண்டு முழுநிலா தினத்தின் தூய்மையினை நொருக்கி யுள்ளார். இலங்கைத் திரைப்பட வரலாற்றில் தனித்துவ மான படைப்பாக "புறஹந்த கருவற" காணப்படுகிறது.

பிரசன்ன விதானகே Sisila Gani (Ice of fire -1992) Anantha Rathiya (Dark Night of the soul -1996) Pawuru walalu (Walls with in 1997) Purahanda Kalu wara (Death on a full moon day 1997) Ira Madiyama (August Sun -2003) Akasa Kusum (Flowers of the sky-2008) முதலிய படங்களை இயக்கியுள்ளார்.

பார்வை பாதிபுற்று ஏழ்மையில் வாழும் வன்னிகாமி என்ற முதியவர் (Joe Abeywickrama) நீர் நிலையொன்றில் அழுக்கு நீரை வடித்தெடுத்து சுரைக் குடுவையில் நிரப்பிக் கொண்டு வீட்டுக்கு வருகிறார். சிங்கக்கொடி போர்த்தப்பட்ட பிரேதப்பேழையொன்று காரில் வந்து இறங்குகிறது. இராணுவத்தில் ஊழியம் செய்த "பண்டார" மரணமடைந்த செய்தியை உணர்ந்த, தந்தையான வன்னிகாமி உறைந்து போகிறார். உடல் நிதைந்திருப்பதால் பிரேதப்பேழை "சீல்" செய்யப் பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டு புதைக்கப்படுகிறது. இந்நிலையில் "பண்டார" எழுதிய மடலொன்று வந்து சேர்கிறது. தன்மகன் உயிரோடிருப்பதாக வன்னிகாமி நம்புகிறார். எனினும் அக்கடிதம் மரணமடைவதற்கு முன்னர் எழுதி அனுப்பப்பட்டதாக அனைவரும் வன்னி காமிக்கு தெளிவுபடுத்துகிறார்கள். இராணுவத்தில் சேவையாற்றி மரணமடைந்தோருக்கு அரசு வழங்கும் உதவு தொகையைப் பெறும் படிவத்தினை கிராம சேவகர் வன்னிகாமியிடம் கொடுக்கிறார். வன்னிகாமியோ அப்படிவத்தினை "ரங்கு பெட்டி" ஒன்றில் வைத்து விட்டு மகனின் வரவுக்காகக் காத்திருக்கிறார். ரங்குப் பெட்டியிலிருந்து படிவத்தைக் கைப்பற்றும் மூத்தமகள், கணவனிடம் கொடுத்துப் படிவத்தினைப் பூர்த்தி செய்கிறாள். வன்னிகாமி அப்படிவத்திலே கையெழுத் திட விரும்பவில்லை. மனவுறுதியோடு மண்வெட்டி யினைத் தூக்கிக் கொண்டு சவப்பெட்டி புதைக்கப்பட்ட இடத்திற்கு வந்து தோண்ட ஆரம்பிக்கிறார். விடயமறிந்து கிராமத் தினர் திரண்டு விடுகின்றனர். ஊரவர்களுள் ஒருவர் மண்வெட்டியைப் பெற்று புதைகுழியைத் தோண்டி பிரேதப் பேழையை வெளியே எடுத்துத் திறக்கிறார். உள்ளே இரு வாழைக்குத்திகளும், பெரிய கல்லொன்றும் காணப்படு கின்றன. அவ்விடத்திற்கு வந்த கிராம சேவகர் ஊரவரின் செயலைக் கண்டிக்கிறார். பிரேதப் பேழை மீளவும் புதைக்கப்படுகிறது. இறுதிக்காட்சியில் வன்னிகாமி சுரைக் குடுவையில் நீர் நிரப்பிக் கொண்டிருக்கிறார். மழைபொழிகிறது. நீர் நிலையிலே சிறுவர்கள்



குதூகலமாக விளையாடி மகிழ்கிறார்கள். படம் முடிவடைகிறது.


ஏழ்மையின் கொடுமையால் பாமர மக்கள் இராணுவத்தில் இணைய வேண்டி நேரிடுகின்றது. அரசு விளம்பரப்படுத்தும் கவர்ச்சிகர வருவாயைக் கொண்டு பொருளாதார அழுத்தத்திலிருந்து மீள்வதற்கு கிராமப் புற வறிய இளைஞர்கள் முயல்வதனை இயக்குநர் சுட்டிக் காட்டுகிறார். கட்டற்ற ஏமாற்றுவித்தைகளின் கருவறை யில் அவதரித்த அரசின் உதவு தொகையைப் பெற வன்னிகாமியின் உள்ளார்ந்த உணர்வு இடங் கொடுக்க வில்லை. எனினும் உறவுகளும், அரசின் பிரதி நிதியும், மதகுருவும் நேர்மையின் பிடிவாதத்தை தளர்த்தி விட எத்தனிக்கின்றனர். பிரசன்ன விதானகே போரின் அச்சு அசலான நகர்வை அழுகுறக் குறியீட்டில் உணர்த்தியுள்ளார்.

படம் ஒரே நாளில் நிகழும் சம்பவங்களை வெளிக் கொணரவில்லை. எனினும் காட்சிகள் விரியும் தினங்களில் பௌர்ணமி நிலா தென்படுகின்றது. அப்பதிவுகள் காலமுரணாக அமையாமல் மாறுபட்ட அர்த்தத்தினை நோக்கி பார்வையாளனை நகர்த்து கின்றன. பிரேதப் பேழைமீது போர்த்தப்பட்ட தேசியக் கொடியில் ஒழுக்கு நீர் சிந்துதல், இராணுவ வாகனங் களின் வேகம், படைவீரரின் ஈருளியில் மதகுரு, ரங்கு பெட்டி மீதுள்ள குப்பி விளக்கு போன்ற பல காட்சி களில் போரினை நியாயப்படுத்தும் தரப்பினர் மேல் விமர்சனப் பதிவுகளை நிகழ்த்திச் செல்கிறார். சிறுவர் களின் எதிர்காலம் குறித்த பிரக்ஞையினை இறுதிக் காட்சியில் அற்புதமாக, ஏக்கம் ததும்ப வெளிப்படுத்திப் படத்தினை நிறைவு செய்துள்ளார். ஊடகத்துறை அமைச் சால் தடை செய்யப்பட்டு, உயர் நீதிமன்றத் தீர்ப்பினைத் தொடர்ந்து வெளிவந்த இத்திரைப்படம். Amiens திரைப்பட விழாவில் Grand prix விருதைப் பெற்றுள்ளது.

# அந்தனி ஜீவாவின் அரை நூற்றாண்டு அனுபவங்கள்

# ஒரு வானம்பாடியின் கதை

15



அந்தனி ஜீவா




உலகப் புகழ் பெற்ற சுழற்பந்து வீச்சாளரான முரளிதரனின் திருமண நிகழ்வு சென்னையில் நடைபெற விருந்தது. வீடு தேடி வந்து திருமண அழைப்பிதழை தந்தார் முரளியின் தந்தை முத்தையா அவர்கள். எனது இலக்கிய முயற்சிகளுக்கு கரம் கொடுக்கும் இலக்கிய ஆர்வலர். நான் கண்டியில் மலையக கலை இலக்கிய பேரவை என்ற அமைப்பை தொடங்கிய பொழுது இவரை அழைத்து வந்து எனக்கு அறியமுகப்படுத்தியவர் பத்திரிகையாளர் க.ப.சிவம். இவரே பேரவையின் ஸ்தாபகத்தலைவர்.

சென்னைப் பல்கலைக்கழக கருத்தரங்கு நடைபெறும் நாட்களில் திருமண நிகழ்வு நடைபெறுவதால், அந்த நிகழ்விலும் பங்கு பற்றலாம் என நினைத்தேன். 2005 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் திகதி சென்னை சென்றேன். விமான நிலையத்தில் பல்கலைக்கழக பிரதிநிதி ஒருவர் என்னை அழைத்துச் செல்ல வந்திருந்தார். எனது தொலைபேசி அழைப்பை ஏற்று எழுத்தாளர் பா.செயப்பிரகாசமும் விமான நிலையம் வந்திருந்தார். பல்கலைக்கழக வாகனத்தில் வளாகத்தை வந்தடைந்தோம். பல்கலைக்கழக விடுதியில் எனக்காக ஒதுக்கப்பட்ட அறையில் பயண பைகளை வைத்துவிட்டு மானிடவியல் பிரிவின் தலைவரை காணச் சென்றேன். அவரை சந்தித்து திரும்பி வரும் பொழுது "வாருங்கள், தமிழ்த்துறைத் தலைவர் வீ. அரசு அவர்களை சந்திப்போம் என்று பா.செயப்பிரகாசம் அழைத்துச் சென்றார். சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை தலைவரான வீ.அரசு ஏற்கனவே எனக்கு அறிமுக மானவர். அவரது துணைவியார் அ.மங்கை ஆங்கில விரிவுரையாளர், நாடகத்துறையில் ஈடுபாடு உள்ளவர்.

தமிழ்த்துறைத்தலைவர் வீ.அரசு எங்களை அன்போடு வரவேற்று உரையாடியதுடன் கருத்தரங்கு முடிந்த மறுநாள் தமிழ்த்துறையில் மலேசிய அறக்கட்டளை சார்பில் மலேசிய இலக்கியம் பற்றிய கருத்தரங்கம் ஒன்று இடம் பெறுவதாகவும், அந்த ஆய்வுரையை நம்மவரான பேராசிரியர் அ.சண்முகதாஸ் நிகழ்த்துவதாகவும், அதே அரங்கில் மலையக இலக்கியம் பற்றி உரையாற்றும் படியும் கேட்டுக் கொண்டார். அந்த நிகழ்வில் முனைவர் பட்டப்படிப்பு மாணவர்கள் 120 பேர் கலந்து கொள்வதாகவும் குறிப்பிட்டார். மலையக இலக்கியம் பற்றி இங்குள்ளவர்கள் நன்கு அறிந்து கொள்ளும் வாய்ப்புண்டு என்று தெரிவித்தார். நானும் உரையாற்றுவதாக எனது சம்மதத்தை தெரிவித்தேன். மறுநாள் ஓய்வு என்ற படியால் கலைஞன் பதிப்பகம் சென்றேன். கலைஞன் பதிப்பகத்தை தங்தைக்கு பிறகு பொறுப்பாக நடத்தும் திரு நந்தன் அவர்களின் அறைக்குச் சென்றேன். என்னை அன்புடன் வரவேற்ற நந்தன் சிறிது இருக்கும்படி கூறிவிட்டு உள்ளே சென்று திரும்பி வந்தார். அவர் கையில் கொண்டு வந்த புத்தகத்தை என்னிடம் தந்தார். அது "அம்மா" என்ற சிறுகதைத்தொகுப்பு. சிறுகதைத் தொகுப்பை கையில் வாங்கியதும் என் கண்கள் கலங்கி விட்டன. "அம்மா" தொகுப்பை கலைஞன் பதிப்பகத்தினர் மிகவும் சிறப்பாக பதிப்பித்திருந்தார்கள். திரு நந்தனின் கரங்களைப் பற்றிய படி அவரை வியப்புடன் பார்த்துக் கொண்டிருந்தேன். நன்றி சொல்ல வார்த்தைகள் வரவில்லை. அவரும் அதைப் புரிந்து கொண்டார். நூலின் அட்டையை மிகவும் சிறப்பாக அமைத்து இருந்தார்கள். உள் பக்கங்களைப் புரட்டிய போது சமர்ப்பணம் அம்மாவுக்கு என்று இருந்தது. அமரத்துவம் அடைந்த என் தாயாரின் நினைவிற்கு நான் செய்த கடமையாகும். மேலும் நந்தனிடம் இருந்து இன்னுமொரு பிரதியும் வாங்கிக் கொண்டு நன்றி தெரிவித்து கருத்தரங்கு பற்றிய விபரத்தைக் கூறி மீண்டும் நாடு திரும்பு முன் வருவதாகக் கூறி விடைபெற்றேன். பின்னர் தியாகராஜ நகரில் உள்ள கம்யூனிஸ் கட்சி அலுவலகம் சென்று "தாமரை" ஆசிரியர் சி.மகேந்திரனை சந்தித்துவிட்டு பல்கலைக்கழக விடுதிக்கு திரும்பினேன். ஓய்வாக அமர்ந்து அம்மா சிறுகதைத்தொகுதியைப் புரட்டினேன். அம்மா தொகுதிக்காக நான் எழுதிய தொகுப்புரைக்கான முன்னுரை "தொகுப்பாசிரியரின் இதயத்தில் இருந்து" என்ற மகுடத்தில் பிரசுரமாயிருந்தது. அதனை ஆர்வத்துடன் படித்தேன். "...சிறுகதை வாழ்க்கையின் சாளரம் என்றான் சிறுகதை மன்னன் புதுமைப்பித்தன். அதனால் அன்றிலிருந்து இன்றுவரை தமிழ்ப்புனை கதை இலக்கியத்தில் சிறுகதைகள் உன்னத இடத்தினை வகிக்கின்றன. இலங்கையில் தமிழ் இலக்கியத்திலும் சிறுகதைகள் முக்கிய இடத்தினை வகிக்கின்றன. மனித வாழ்வியலை மிக நுட்பமாக சித்திரிக்கின்றன. அறபது களுக்குப் பின்னர் இலங்கையின் தமிழ் இலக்கியத்தில் வளமூட்டிய சிறுகதைகளை பெண் எழுத்தாளர்கள் எழுதியுள்ளார்கள் என்பதற்கு இத்தொகுதியிலுள்ள சிறு கதைகள் ஒரு சான்றாகும். இத்தொகுதியிலுள்ள பெண்

எழுத்தாளர்களின் படைப்புகள் தொகுப்புகளாக வெளி வருவது மிகக்குறைவாகும். பல சிறுகதைகள் பத்திரிகை களில், சிறு சஞ்சிகைகளில் வெளிவந்து அதன் சுவடு கூடத்தெரியாமல் மறைந்து விடுகின்றன. இலங்கையில் இதுவரை 300 சிறுகதைத்தொகுப்புகள் வெளிவந்துள்ள தாக அறிய முடிகின்றது. இவற்றில் பெண் எழுத்தாளர் களின் தொகுதிகள் மிகக் குறைவாகவே வெளிவந்ததாக அறிய முடிகின்றது. "எழுதத் தொடங்கிய 35 வருட காலத்தின் பின்பே நூலுருவில் உங்களைச் சந்திக் கின்றேன்." என 1954 இல் எழுதத்தொடங்கிய மூத்த பெண் படைப்பாளியான குறமகள் 1989 இல் வெளிவந்த சிறுகதைத்தொகுதியில் குறிப்பிடுகின்றார். இலங்கைப் பெண் எழுத்தாளர்களின் நிலை இதுவே. அவர்களே பாதையும் வெட்டிப் பயணம் போக வேண்டும். "அம்மா" என்ற மகுடத்தில் வெளிவரும் இத்தொகுதியில் 25 பெண் படைப்பாளிகளின் சிறுகதைகள் இடம்பெறுகின்றன. என் தாயாரின் முதலாம் ஆண்டு நினைவாக 50 பெண் எழுத்தாளர்களின் படைப்புக்களை தொகுத்து வெளியிட வேண்டும் என ஆர்வம் கொண்டேன். இதற்காக நானே எழுத்தாளர்களுடன் தொடர்பு கொண்டேன். அவர்களின் படைப்பு ஒன்றை அனுப்பும் படி கேட்டுக் கொண்டேன். அவர்கள் சம்மதம் தெரிவித்தாலும் ஓரிருவரைத்தவிர ஏனையவர்கள் அனுப்பவில்லை. தேடுதல் வேட்டையில் ஈடுபட்டேன். மிகச்சிரமப்பட்டு கதைகளை தேடி எடுத்தேன். இந்தத் தொகுதியில் மூத்த பெண் படைப்பாளியான குறமகள் முதல் இன்றைய இளைய தலைமுறை எழுத் தாளர்கள் கதைகளும் இடம்பெற்றுள்ளன. இலங்கையின் சகல பிரதேச எழுத்தாளர்களின் கதைகளை உள்ளடக்கி யுள்ளேன். பெண் எழுத்தாளர்கள் தங்கள் சிறுகதைகளில் அவர்களின் பிரச்சினைகளை சிறப்பாக சித்திரித்துள்ளனர் தாங்கள் வாழும் பின்னணியில் என்ன நடந்தது, என்ன நடக்கிறது என எழுதத் தவறவில்லை. அவர்களின் உள்ளத்து உணர்வுகள் படைப்புகளில் வெளிப்படுகின்றன.

"என் தாயின் நினைவாக முதலாம் ஆண்டு வெளிவர வேண்டிய இத்தொகுதி அவர் மறைந்து மூன்றாம் ஆண்டு வெளிவருகிறது. எவ்வித கைமாறும் கருதாது இத்தொகுதியை வெளியிட முன் வந்த கலைஞன் பதிப்பகத் திற்கும் அதனை வழி நடத்தும் பெரியவர் திரு.மாசிலாமணி அவர்கட்கும், இளவல் மா. நந்தன் அவர்கட்கு இலக்கிய உலகம் சார்பாக நன்றி செலுத்த கடமைப்பட்டுள்ளேன். மீண்டும் என் தாயின் நினைவாக கொண்டு வர துணை நின்ற அனைவருக்கும் வணக்கத்துடன் வாழ்த்துக்கள்"

இவ்வாறு எனது முன்னுரை அம்மா கதைத் தொகுப்பில் இடம்பெற்றிருந்தது. "அம்மா" தொகுதியில் பெண் படைப்பாளிகளான குறமகள், குந்தவை, யோகா. பாலசந்திரன், கோகிலா மகேந்திரன், அன்னலட்சுமி இராஜதுரை, சந்திரா தனபாலசிங்கம், தாட்சாயணி, நயீமா சித்தீக், லஹீனா, ஏ.ஹக், தாமரைச் செல்வி, பூரணி, பேராதனை ஷர்புன்னிஷா, புசல்லாவ ஸ்மாலிகா, அட்டன் சாந்தா ராஜ், ஷாந்தி மோகன், அக்னஸ் சவரி முத்து, பாலரஞ்சனி, ரோகினி முத்தையா, சுகந்தி, கெக்கிராவ ஸஹானா, பத்மா சோமகாந்தன், ராஜேஸ்வரி பாலசுப்பிர மணியம், ராணி ஸ்ரீதரன், மண்டூர் அசோகா, எம்.ஏ.ரஹீமா ஆகிய பெண் எழுத்தாளர்களின் கதைகள் தொகுதியில் இடம்பெற்றிருந்தன. மாலையில் பல்கலைக் கழகத்திற்கு என்னைத்தேடி வந்த எழுத்தாளர் பா.செயப்பிரகாசத்திடம் கொடுத்தேன். அவர் ஆர்வத்துடன் புரட்டிப் பார்த்து விட்டு உடனே தனது கைபேசி மூலம் "திசைகள்" மாலனுடன் தொடர்பு கொண்டு சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு அவர் ஏற்பாடு செய்துள்ள விழாவில் "அம்மா" சிறுகதைத் தொகுதியை அறிமுகப்படுத்த ஏற்பாடு செய்தார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பால், இனம் இவற்றை கடந்து மானுடம் பாடும் பெண் படைப்பாளிகளின் படைப்புகளை அறிமுகம் செய்து வைக்கும் ஒரு முயற்சியாக திசைகள் இயக்கம் 2005 மார்ச் 23ஆம் திகதி மாலை 5மணிக்கு சென்னை மயிலை பாரதி வித்திபவன் அரங்கில் வைகச்செல்வியின் "கறிவேப்பிள்ளை செடிகளும், நெட்டி லிங்க மரங்களும்" என்ற சிறுகதைத்தொகுதியை எழுத்தாளர் திலகவதியும், திலக பாமாவின் "கூர் பச்சையங்கள்" என்ற கவிதைத் தொகுப்பை எழுத்தாளர் பொன்னீலனும், இலங்கை எழுத் தாளர் பத்மா சோமகாந்தனின் "மாண்புறு மகளிர்" கட்டுரைத் தொகுப்பை எழுத்தாளர் செ.கணேசலிங்கனும், "அம்மா" சிறுகதைத்தொகுப்பை எழுத்தாளர் பா.செயப் பிரகாசமும் விமர்சனப் பார்வையுடன் அறிமுகப்படுத்தினார்கள்.

திசைகள் அமைப்பின் சார்பில் விழாவை ஏற்பாடு செய்திருந்த பத்திரிகையாளரும், எழுத்தாளரு மான மாலன் விழாவை தொடக்கி வைத்து உரையாற்றும் போது "ஆண்டாண்டு காலமாக இச்சமுதாயத்தை பலர் வேறுபட்ட தளங்களில் நின்று மாறுபட்ட கருத்துக்களை நோக்கினர். மொழி, இலக்கியம், சமயம், சமூக உணர்வு கள் முதலியவை கூட வித்தியாசமான பார்வைக்கு உட் பட்டவையாக இருந்துள்ளன. இவற்றையெல்லாம் அறிதல் ஆக்கம் பகிர்தல் என்ற அடிப்படையில் திசைகள் இயக்கம் கருத்தில் கொண்டு செயற்பட்டு வருகிறது சென்ற ஆண்டு 2004ஆம் ஆண்டில் உலக மகளிர் தினத்தில் முழுவதுமே பெண்கவிஞர்கள் பங்குபற்றிய நிகழ்ச்சியாக கொண்டாடியது. இவ்வாண்டு மூன்று பெண்படைப்பாளிகளையும் அவர்களின் நூல்களையும் வெளியிட்டு பாராட்டி கௌரவிப்பதில் மகழ்ச்சியடை கிறது. தமிழ் நாட்டின் எல்லைகளுக்கு அப்பால் கடல் கடந்து இலங்கையைச் சேர்ந்த பெண் எழுத்தாளரான பத்மா சோமகாந்தனை அழைத்து இங்கு பாராட்டக்கூடிய வாய்ப்பு கிடைத்திருப்பது எமக்குப் பெருமகிழ்ச்சி தருகிறது. அத்துடன் அந்தனிஜீவா தொகுத்த இலங்கை பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகளைக் கொண்ட "அம்மா" தொகுதியையும் இவ்விழாவில் அறிமுகம் செய்யக் கிடைத்தது சிறப்பம்சமாகும். படைப்பாளி களுக்கு நினைவு பரிசுகள் வழங்கினார்கள். கவிதாயினி தமிழச்சி தங்கப்பாண்டியன் விழாவை சிறப்பாக கவிதா வரிகளுடன் வழங்கினார். பத்மா சோமகாந்தன், திலகபாமா, வைகைச்செல்வி, அந்தனி ஜீவா ஆகியோர் ஏற்புரை நகிழ்த்தினார்கள். விழா சிறப்பாக நடைபெற்றது. பின்னர் சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை நடத்திய கருத்தரங்கில் தமிழகத்தின் முக்கியமான படைப்பாளியை சந்திக்கும் வாய்ப்பு ஏற்பட்டது.

– தொடரும்

# கவிமணி நீலாபாலனின்
# "கடலோரத் தென்னைமரம்"

கிழக்கிலங்கையில் ஆளுமையுள்ள நல்ல பல கவிஞர்களின் தாயகம் கல்முனைப்பிரதேசம். கல்முனைப் பிரதேசத்தில் அமரர் கவிஞர் நீலாவணன் அவர்கள் ஒரு கவிஞர் பட்டாளமொன்றையே உருவாக்கியிருந்தார். இப்பாசறையில் பயிற்சி பெற்று இன்று இலங்கையின் முன்னணிக் கவிஞர்களில் ஒருவராக விளங்கும் கவிமணி நீலாபாலனுக்கு இன்னுமொரு முகமுண்டு. "கல்முனைப் பூபால்" என்று அப்போது அறியப்பட்டவர்தான் இன்றைய நீலாபாலன். எழுபதுகளில் என்னையும் அவரையும் இலக்கியமும் எழுத்தும் இணைத்து வைத்தன. கவிதை எம்மைக் கட்டிப் போட்டது. கல்முனை நீர்ப்பாசனத் திணைக்களத்தில் இருவரும் சம காலத்தில் பணிபுரிந்தோம். நாற்பது வருடகால நட்பு எமக்கிடையில். கல்முனை அவரது பிறப்பிடம். காரைதீவு எனது ஊர். இரண்டுக்குமிடையில் இடைவெளி மூன்று மைல்களே.

"பூபால் கவிதை புனைவான்; அவன் கவிதை
சாவாத பேறுடையதாம்"

என்று கவிஞர் நீலாவணனால் பாராட்டப் பெற்றவர். பூபாலின் இயற்பெயர் பூபாலரத்தினம். கல்முனையில் 14.04.1948 இல் பிறந்தார். மாணவனாக இருக்கும் போதே கவிதை எழுதத் தொடங்கினார். "சுதந்திரன்" பத்திரிகையில் பிரசுரமான "அன்னை" என்ற கவிதை மூலம் எழுத்துலகிற்கு அறிமுகமானார். கல்முனை என்.பூபாலரத்தினம் எனும் பெயரில் "சுதந்திரன்", "தினகரன்", "கலைச்செல்வி", "தேசிய முரசொலி" ஆகிய பத்திரிகைகளில் ஆரம்ப காலத்தில் எழுதினார். ஆனால் தற்போது இவரது கவிதைகள் வெளிவராத பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் இலங்கையில் இல்லை என்றாகி விட்டது.

"ஜீவநதி" வெளியீட்டின் 20ஆவது நூலான "கடலோரத் தென்னைமரம்" இவரது இரண்டாவது நூற்பிரசவம். அழகான கடலோரத் தென்னைமர அட்டையுடன் 116 பக்கங்களில் கவிதைகளை உள்ளடக்கியுள்ள இப்புத்தகம் பார்த்தவுடனேயே படிக்கத்தூண்டும் வகையில் படைக்கப்பட்டிருக்கின்றது. முதலில் "ஜீவநதி"




வெளியீட்டின் பிதாமகனும் "ஜீவநதி" சஞ்சிகையின் ஆசிரியருமான பரணீதரன் அவர்களுக்கு எனது பாராட்டுக்கள். கவிமணி நீலாபாலன் தனது மூத்தப்பா நாகமணிக்கு இந்நூலை சமர்ப்பணம் செய்துள்ளார். நூலின் முதற்கவிதை "அக்கினிப்பாவலன்" கவிமணி நீலாபாலனின் கொள்கை பிரகடனம். அக்கவிதையில் சில வரிகள்:

"பசியோடு உலவிடும் மனிதனின் துயரினைப்
பாடிடும் பாடகன் நான்.
பாவையர் சதையினிற் காவியம் தேடிடும்
பாவலர் வைரியும் நான்.
அசைகிற உலகினிற் பணமொரு பசையெனும்
முதலைகட்(கு) அக்கினி நான்.
ஆர்ப்பரித்தெழுகிற கீழ்த்திசைக் கடலென
பாத்தொடுக்கின்றவன் நான்......."

ஒரு பானை சோற்றிக்கு இக்கவிதை ஒரு பதம். கவிதைக்குச் சந்தம் இன்றியமையாதது. தொடர் ஓசை இல்லாவிட்டால் அது கவிதையாகாது. யாப்பை முற்றாகவே உதறித் தள்ளி விட்டு இக்காலத்தில் எழுதப்படுகின்ற புதுக்கவிதைகளைப் போல் அல்லாது யாப்பை அறிந்து கொண்டு அதனைப் புரிந்து கொண்டு – அதனை அவசியம் கருதி மீறுகின்ற அல்லது நோகாமல் உடைக்கின்ற அல்லது தனக்கு

ஏற்றாற்போல் வளைக்கின்ற வித்தை கவிமணி நீலா பாலனுக்கு நன்கு வாய்த்திருக்கின்றது. நான் அடிக்கடி மேடைகளில் கூறுவது இலக்கியத்தின் வெற்றி அந்த இலக்கியம் படைக்கப்படும் மொழியை நுட்பமாகக் கையாளும் வித்தையிலேயே தங்கியிருக்கின்றது என்பதே. கவிமணி நீலாபாலன் அந்த வித்தையிலே விற்பன்னராக விளங்குகின்றார் என்பது அவரது கவிதை வரிகளிலே வெளிப்படுகின்றது. (உ+ம்) "பயணம்" என்ற கவிதை:

"இடறி விழுந்தெழுந்து வழி
தொடர்ந்து நடந் தடர்ந்த வடு
இறந்துபட பிறந்த நடை தொடர்கிறேன்
அடவி தொடர் வழியெனினும்
இடர்கள் பல தடை வரினும்
உடைகள் அனுபவம் அணிந்து போகிறேன்.
பயணம் போகிறேன்"

சந்தம் இழையோடும் சத்தான கவிதைகளில் இது முத்தானது. "பட்டமரம்" நல்லதொரு குறியீட்டுக் கவிதை. கவிதைகளை மரபுக்கவிதை என்றும் புதுக்கவிதை என்றும் பிரித்துப் பார்ப்பது பிழையான வழக்காகும். நேற்றைய புதுமை இன்று மரபு. இன்றைய புதுமை நாளை மரபாகிவிடும்.

கவிஞர் காசி ஆனந்தன் அவர்கள் உரை வீச்சான புதுக்கவிதையை "பா" இலக்கியத்திற்குள் சேர்க்காது அதனை உயர்ந்த உரை இலக்கியமாக நிறுவியுள்ளார். புதுக்கவிதை இலக்கியத்திற்கு அவர் இட்டுள்ள பெயர் "பொழிச்சல்". "பொழிச்சல்" இலக்கியத் திற்கு ஓசை ஒரு பொருட்டல்ல என்பது தான் பொது விதி. ஆனால் "கடலோரத்தென்னை மரம்"தில் காய்த் துள்ள கவிதைத் தேங்காய்கள் "பொழிச்சில்" அல்ல. தமிழ்க்கவிதைப்போக்கில் ஒரு புதிய திசையைச் சுட்டும் – புதுமையைக் காட்டும் – வீச்சான வீரியமுள்ள கவிதைகள். இதுதான் கவிமணி நீலாபாலனின் தனித்துவம். சில கவிதைகள் பார்ப்பதற்குப் புதுக்கவிதை போல் – "பொழிச்சல்" போல் – தோற்றமளித்தாலும் படிக்கும் போது அவற்றில் யாப்பும் சந்தமும் இழையோடியிருப்பது தெரியும். இதுதான் கவிமணி நீலாபானின் கவித்துவம். "அவள்" என்ற கவிதையிலே வரும்:

""சொல்லடி" என்றெல்லாம் சொல்லியதே
இல்லை – அவள் சொக்குப் பொடி அப்படி"

என்ற முதல் வரிகளே இதற்குச் சான்று.

மொத்தத்தில் புதிது புதிய தேடல் – அருமையாகவும் அழகாகவும் அழுத்தமாகவும் சொல்லு கின்ற மொழியாட்சி படிக்கும் போது புரிந்த கொள்ளக் கூடிய படிமங்கள் – உணர்ந்த பின் உச்சமாகத் தெரிகின்ற குறியீடுகள்; செய்யுள் நடையிலே யாத்தாலும் சரிதான் புதுக்கவிதையைப் போல என்றாலும் சரிதான். ஆழ்மனதைத் தொடுகின்ற நுட்பங்கள் நிறைந்த கவித்துவம் இவரின் கவிதை களிலே காய்த்து குலுங்குகின்றன. "புரிந்து கொள்வதற் கானது அல்ல கவிதை. உணர்ந்து கொள்வதற்கானது. அப்படி உணர்ந்து கொள்வதற்கான கவிதையை மரபு புதிதென்ற வடிவங்கள் செப்பனிடா உள்ளடக்கப் பருமனிலல்லாத எந்த வார்ப்பும் கவிதையாகிவிடாது" என்ற அவரது கவிதைக் கோட்பாட்டினை இந்நூலில் அவர் கச்சிதமாகக் கடைப்பிடித்திருக்கின்றார். ஆம்! உண்மையிது; ஊமைப் புகழ்ச்சியில்லை.

"பழைமை சகித்து புதுமை நிறைந்து
உலகைச் செதுக்கும் கலைஞன்"

எனத் தன்னை வெளிப்படுத்தும் அவரது கவிதை வரிகள் அர்த்தம் நிறைந்தவை.

"மீன்களைப் பாதுகாக்க வேண்டிய ஆறுகள்
தூண்டில்களோடு..."
"மந்திரித்து விட்டது போல் கறுத்தவானம்
ஆடாமல் அசையாமல்..."
"சட்டியில் விட்டது போல உன் நினைவு
ஒட்டியொட்டி..."

இவை கவிமணி நீலாபாலன் கையாண் டுள்ள புதிய நல்ல– படிமங்களில் சில.

தற்காலத்தில் புற்றீசல்களாகப் புரியாத புதக்கவிதை தொகுதிகளை "பூச்சித் தேங்காய்கள்" என்றால். இக்கடலோரத்தென்னைமரத்தின் காய்கள் நன்கு முற்றிப் பழுத்த எண்ணெய்த் தேங்காய் களாகும். இவற்றை நீங்களே ஆய்ந்து தோலுரித்து உடைத்துத் துருவி உருக்கி எண்ணெய் வடித்து இன்புறும்படி கேட்டுக்கொள்கின்றேன்.


**கிளிநொச்சி மாவட்டத்தின் தொன்மையையும் வரலாற்றையும் ஆவணப்படுத்துவதற்கான ஆய்வு முயற்சிகள் – 2013**


கிளிநொச்சி மாவட்டத்தின் தொன்மையையும் வரலாற்றையும் ஆவணப்படுத்தும் நோக்கில் புலமையாளர்களிடம் இருந்து ஆய்வுக்கட்டுரைகள் கோரப்படுகின்றன. ஆய்வுக் கட்டுரைகள் பின்வரும் அம்சங்களை அடிப்படையாக கொண்டு அமைதல் வேண்டும். வரலாறு, விவசாயம், வனம், குடியேற்றம், கல்வி நடவடிக்கை, நீர் வளம், நிலவளம், பொருளாதாரம், வாழ்வியல், பண்பாடு, தொல்லியல், மரபுரிமை, இலக்கியம், சமயம், கலைமுயற்சிகள், நாட்டார் வழக்காற்றியல்.

கட்டுரைகள் 28.05.2013 இற்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு : – அதிபர், மாவட்டச் செயலகம், கிளிநொச்சி. தொலைபேசி – 0212283945, 021228 3964

# இலக்கிய கடிதங்கள்







– 8 –

வல்லிக்கண்ணன்
சென்னை
3.11.1962

அன்பு மிக்க சிவகுமாரன் அவர்களுக்கு,

வணக்கம். எனது 29.10.1962 கடிதம் கிடைத்திருக்குமே? நீங்கள் அன்புடன் அனுப்பிய "விவேகி" இதழ் கிடைத்தது. நன்றி. "தோணி" சிறுகதைத்தொகுப்பு பற்றிய உங்கள் கருத்தைப் படித்தேன். "எழுத்து" இதழில் வெங்கட் சாமிநாதன் எழுதியுள்ள கட்டுரையை இதற்குள் படித்திருப்பீர்கள். நான் "தோணி" தொகுதியைப் பார்க்கவில்லை. திரு.எம்.ஏ.ரகுமான் அது பற்றி எனக்குக் கடிதம் எழுதியிருந்தார். "சாந்தி"க்கு மதிப்புரைக்காக அனுப்பப்பட்ட "தோணி" தொகுதி என்னிடமே தரப்படும் என எதிர் பார்த்ததாகவும், அதுவேறு ஒருவரிடம் கொடுக்கப்பட்டு விட்டதை அறிந்ததனால், எனது பதிலைப் பார்த்துக் கொண்டு எனது பார்வைக்காக "தோணி" ஒரு புத்தகம் அனுப்பி வைக்க விரும்புவதாகவும் அவ்அன்பர் எழுதியிருந்தார். ஆகவே, விரைவில் அப்புத்தகம் எனக்குக் கிடைக்கலாம் என்று எண்ணுகிறேன்.

"எழுத்து" பத்திரிகையை இதைவிட அதிகமான பக்கங்களோடும் சிறப்போடும் வெளியிடுவது சாத்தியமில்லை என்றே தோன்றுகிறது. நிதி வசதிகள் வேண்டுமல்லவா? பொதுமானப்படி வசதிகள் பெற்றிராத ஒரு தனிநபரின் ஆர்வமும் உழைப்பும் பிடிவாதமும் நம்பிக்கையும் போதாதே. இவ்வளவு காலம் இப்படி "எழுத்து" வாழ்ந்து வந்திருப்பதே பெரிய சாதனை தான்.

அன்பு
வ.க

– 9 –

வல்லிக்கண்ணன்
சென்னை
26.11.1962

அன்பு மிக்க சிவகுமாரன் அவர்களுக்கு

வணக்கம். உங்கள் 8.11.1962 கடிதம் மகிழ்ச்சி...! "கரையோர விமர்சனங்கள்"? "புதுக்கவிதை விமர்சனம்" ஆகிய இரு கட்டுரைகளையும் படித்தேன். திரு.மு.தளையசிங்கம் உங்களைக் "கவனித்து கௌரவித்து" இருப்பதையும் அறிந்தேன்.

சும்மா கதை எழுதிக் கொண்டிருப்பவர்களையே வம்புக்கு இழுப்பவர்கள் பெருகிவிட்ட காலத்தில், விமர்சனம், கருத்துரை, ரசனையை விளக்குகிறேன் என்று ஏதேதோ சொல்லிக் கொண்டு அவ்வபிப்பிராயங்களை உதிர்த்து வருகிறவர்களை சும்மா விட்டு விடுவார்களா? "விமர்சனம்" என்பதே வீணர்களின் வெட்டி வேலைதான். தங்கள் மேதாவித் தனங்களை ஆராய்ச்சி அறிவை, விவகார போக்கை, குதர்க்கப்புத்தியை, கோணல் சுபாவத்தை, குறுகிய நோக்கை எல்லாம் - அல்லது, இவைகளில் ஒன்றையோ சிலவற்றையோ வெளிச்சிட முயலும் விளம்பர மோகிகளின் தம்பட்ட ஓசை என்றும் கூறலாம். சுலபத்தில் பலரது கவனத்தைக் கவர ஆசைப்படும் அரைவேக்காட்டு அறிஞர்களின் தடபுடல் வேலையும் அதுவே. மற்றவர்கள் தங்களைப் பெரிய மனிதராகவும் மகாபுத்திசாலியாகவும்

மதிக்க வேண்டும் என்று விரும்புகிற முட்டாள்களின் கடலடித்தனமான அபிப்பிராய ஒலிபரப்பாகவும் அது அமையும். இப்படி! "விமர்சனம் பற்றி ஒரு விமர்சனம்" என்ற கட்டுரையில் எழுதினேன்.

இப்படி வீணத்தனம் செய்த நானும் ஒரு வீணனே! ஆகவே விமர்சகர்கள் எதைப் பற்றியும் கவலையடையக் கூடாது.

அன்புடன்
வ.க

*-10-*

வல்லிக்கண்ணன்
சென்னை 5
*30.11.1962*

அன்புமிக்க சிவகுமாரன் அவர்களுக்கு வணக்கம்,

நீங்கள் அன்புடன் அனுப்பிய "ஸண்டெ டைம்ஸ்", ஞாயிறு இதழ் கிடைத்தது. நன்றி... ஓகோ நீங்கள் ஆங்கிலத்தில் கூட எழுதுகிறீர்களா? பேஷ் பேஷ்! மிக்க மகிழ்ச்சி. எனது பாராட்டுக்கள். தமிழ் சினிமாவில் தொடர்ந்து எழுதப்போவதாக முன்பு ஒரு கடிதத்தில் அறிவித்தீர்களே? "தமிழ் சினிமா"வில் "இலங்கைக் கடிதம், யாரோ "தாஸ்" என்று ஒரு பெயரில் அல்லவா வருகிறது. ஒருவேளை அது உங்கள் புனைபெயரோ? சமீபத்தில் "ஆபாச இலக்கியம்" குறித்து அப்பகுதியில் வந்த குறிப்புகள் சுவையாக இருந்தன. கரீம் துணிச்சலாக, தமது மனசில் பட்டதை எழுதுகிறார். அது பாராட்டப்பட வேண்டிய சிறப்புதான்.

சொந்தப் பத்திரிகை நடத்தினால்தான் அப்படி உண்மையைக் கூற விரும்புகிறவர்கள் உள்ளதை உள்ளபடி எழுத முடியும். தருமு சிவராமுவை சந்தித்தது இல்லை. வெங்கட் சாமிநாதனை தெரியாது. அவரோட கடிதத் தொடர்பு கிடையாது. "தேனருவி" ஆனந்தியைத் தெரியும் என்று எப்படிச் சொல்ல முடியும். ஒரு நாள் இரவு இரண்டு பேர் வந்தார்கள் - முத்துராஜா, குமாரசிம்மன்(?) என்ற என்னவோ பெயர் சொன்னார்கள். அரைமணிநேரம் பேசிக் கொண்டிருந்தோம். செல்லப்பாவும் என் அண்ணாவும் உடன் இருந்தார்கள் அவ்வளவுதான் தெரியும்!

அன்பு
வ.க

*- 11 -*

வல்லிக்கண்ணன்
சென்னை 5
*06.12.1962*

அன்புமிக்க சிவகுமாரன் அவர்களுக்கு, வணக்கம்

உங்கள் 30.11.1962 கடிதம் 1.12.1962 இல் கிடைத்தது. 30.11.1962 அன்று நான் அனுப்பியுள்ள கார்டு உங்களுக்கு இதற்குள் கிடைத்திருக்க வேண்டும். அதை அனுப்பிய பிறகு வந்த "தமிழ் சினிமா"வில் உங்கள் கட்டுரையைப் படித்தேன். நல்ல கட்டுரைதான். விமர்சனம் பற்றி(சினிமா விமர்சனம் தான்) சிந்திக்க வேண்டிய சில கருத்துக்கள் அதில் வெளிப்பட்டுள்ளன.


"எழுத்து" டிசம்பர் இதழில் வெளிவந்துள்ள உங்கள் எழுத்தை நான் இன்னமும் படிக்கவில்லை. இனிமேல் தான் படிக்க வேண்டும். சில தினங்களாக வேலைகள் அதிகம். வீண் வேலைகள் தான் சுவரசிய அலைச்சலும் பொழுது வீணாவதும் தான் கண்ட பலன். தளையசிங்கம் விமர்சனம் முயற்றி பற்றியும் உங்கள் பணி குறித்தும் விளக்கமாக எழுதியதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அவரவர் மனசுக்கு சரி என்று தோன்றுவதை "உள்ளம் தேறிச் செய்வினை"யை ஊக்கத்தோடு செய்து கொண்டு போக வேண்டியது தான். பூச்செண்டுகளும் வீசப்படலாம்; கல்லும் வெங்காயமும் அழுகல் கோழி முட்டையும் விட்டெறியப் படலாம். எல்லாவற்றையும் சமமாக ஏற்றுக் கொண்டு அவரவர் பாதையில் முன்னேற வேண்டும். அதுவே முக்கியம்.


அன்பு
வ.க

# பிரபல எழுத்தாளர் தெணியானுக்குவந்த கடிதங்கள்

## பேராசிரியர் கா.சிவத்தம்பி எழுதியிருக்கும் சில கடிதங்கள்







- 4 -

17.05.2001

அன்புள்ள தெணியான்,

சற்றும் எதிர்பாராத வகையில் இந்தக் கடிதம் எழுத முடிகிறது. தங்கள் கல்லூரி ஆசிரியையை NIE இல் (யோகேஸ்வரி) இன்று கண்டேன். நல்லதாகப்போயிற்று.

தங்கள் மகன் படிப்பு எந்நிலையிலுள்ளது? முதலாவது வருடத்தின் பின்னர் எப்படியும் Special செய்யச் சொல்லவும். அதற்குமேல் அவரிடம் தேடுதலுக்கான உந்துதலை வளர்க்கவும். இவை இரண்டும் முக்கியம். பேரப்பிள்ளைகள் கிடைத்து விட்டார்களே. அது ஒரு தனி அனுபவம். நான் இங்கு எனது இரண்டு பேரன்களையும் நன்றாகப் பழுதாக்குகிறேன். தாத்தா குழந்தையிடம் காட்டும் அன்பில் பொறுப்பும் உண்டு. மங்கைக்கு இரண்டு பிள்ளைகள். மூன்றாவது விரைவில் வரவுள்ளது.

அக்கா அமெரிக்கா செல்லவுள்ளார். எனது சுகயீனம் என்னை அறைக்குள் கட்டுப்போட்டு விடுகிறது. கால்வீக்கம் நடப்பது சிரமம். உடற்பாரம் குறையவில்லை. பின்னாடிகள் செல்லும் போது சில்லாசனம்(wheel chair). பெரிதும் சிரமப்படுகிறேன். சென்ற 10ம்திகதி 69 ஆண்டு நிறைவை கொண்டாடினேன்.(மிகு அமெளிக்கையாக) மங்கை விருதுக்காவும் birthdayஇற்காகவும் ஒரு computer வாங்கித் தந்துள்ளார். இயக்கத் தெரியவில்லை. வர்த்தனிக்கு முடிகிறது.

எனது "மேற் செலவு" எப்படி இருக்குமென்று தெரியவில்லை குறைந்தபட்சம் 2001 வரை வேலையுள்ளது. பாலர்நூல் மீளாய்வு; மாதம் ஒரு சிறு வருமானம்.

ஈழத்துத் தமிழிலக்கியம் (ஈழத்தில் அல்ல) பற்றியொரு நூல் எழுதுவதற்கான முன்முயற்சிகள் முடிந்து விட்டன. இருந்து எழுதுவதற்குத் தான் இயலவில்லை. எப்பொழுது சாத்தியம் ஆகுமென்பது தெரியவில்லை. சுகவீனம் கொடி போல படர்ந்து மேலே வருகிறது. இதுவரை சிந்தனை பாதிக்கப்பட வில்லை. அது ஒன்றுதான் சீவியத்தை தக்க வைக்கிறது.எனது இப்போதைய கருத்துக்கள் பல எனது தோழர்கள், நண்பர்களை எதிரிகளாக்கியுள்ளது. முற்போக்கு பற்றிய கருத்து 1982 லேயே சொல்லப் பட்டது தான். இருந்தாலும் மிகவன்மையாகத் தாக்குகிறார்கள்.

விக்னேஸ்வரா வரவேண்டும் என்று சொன்னே. "பலருக்கு என் கருத்துக்களில் பிடிப்பில்லை. சிலருக்கு என் இருப்பே பிடிப்பில்லை. எனது "தொடர்ந்த இருப்பு பலருக்கு அசௌகரியமாகவுள்ளது. யோகநாதனுக்கு நான் அவரை ஜெயக்காந்தன் அளவுக்கு வளர்த்துவிடவில்லை என்ற கவலை. எதிரியாகிவிட்டார். ஆதவனில் தெரிகிறது. இது நல்லம். மிகுந்த மனத்திருப்தியை தருகின்றன.69 வயதிலும் வளர்ந்து கொண்டிருக்கின்றேன்.

அன்புடன் கா.சி

2/7 Ramsgate,
58, 37th lane
Colombo 06

*4.5.1997*

அன்புள்ள தெணியான்

மிகுந்த அவசரத்தில் எழுதுகிறேன். ராஜஸ்ரீகாந்தன் உங்களைச் சந்திப்பார் என்றதும் உங்களுக்கு கடிதம் எழுதாமல் இருக்கமுடியவில்லை. 65 வயதாகிறது இன்னும் சில நாட்களில் (மாதங்களில்) ஓய்வு பெறுகிறேன். உங்கள் நினைவுகள் மீள மீள வட்டமிடுகின்றன.

இங்கு மு.போ.எ.ச. அரச "ஒலிபரப்புக்களைச் செய்து கொண்டிருக்கிறது. பார்க்க மனசுக்கு ரொம்ப கஷ்டமாக இருக்கிறது. உங்கள் குழந்தைகள் என்ன செய்கிறார்கள். தங்கள் மனைவியாருக்கும் குழந்தைகளுக்கும் என் வணக்கத்தையும் அன்பையும் தெரிவிக்கவும். செப்டெம்பரில் கனடா சென்ற போது நவத்தையும் மனைவியையும் கண்டேன். என்னைக் கண்டதும் அவர்கள் உங்களைக் கண்டது போல உணர்ச்சி வசப்பட்டனர். நானும் நெகிழ்ந்து போனேன். கட்டியணைத்து விடைபெற்றனர்.
அந்த நேரம் நான் தெணியானக இருந்தேன். தங்கள் அகத்தை எழுதவும். தங்கள் கையெழுத்தைப் பாக்க ஆசையாக இருக்கிறது. அக்காவும் கேட்கிறார். வர்த்தனியும் வினாவுகிறாள். அடிக்கடி நான் அந்த நினைவுகளில் வாழ்கிறேன்.

மிக்க அன்புடன் கா.சி

# ஆசை

மனம் ஒன்றியதில் ஆசை வேட்கை கொண்டிடின்
அதனை அடையும் நோக்கில் செயல் பட்டு
எத்துணை இடர்கள் வந்தெய்திடினும்
எவ்வெவற்றைப் பறிகொடுத்தும் அனுபவித்திட முனைவன்.

பாரில் பிறந்தவன் கொண்டிடும் பற்பல ஆசைகள்
பெண்ணாசை, மண்ணாசை, பொருளாசை இத்தியாதி
பெற்றார், உற்றார் தடுத்திடினும் நேர்வழி பிசகியே
பாங்கன் உபதேசமும் தட்டி அடையவே நாடுவன்

ஆசை வெட்கமறியாது என்பது ஆன்றோர் வாக்கு
ஆசைகாட்டி மோசம் செய்வோர் நிறைந்த உலகில்
ஆவல் உந்துதலில் சிந்தனை பிசகி முனைந்து நின்றிட
மோசடி நடக்கலாம் நாணம் அழிந்திடல் தானும் ஆகலாம்.

ஆயின் ஆசை மீதூரப் பெற்றவர் எவரும்
எவ்விடத்தும் ஆசையை விட்டொழிவான் உண்டா?
எந்த இலக்கில் ஆசையை அடைந்திட நாட்டமோ
எவரை அழித்தும் எவ்விதத்தும் அதனை அடைந்திட முனைவன்

பிறன் மனையாள் ஆயினும் ஆசை மோகம் கொண்டிடின்
நெறி பிறழ்வுகள் செய்வது அவளை அடைந்திடத் துடியான்
கொலைகள் நடந்திடக் காரணனாகி அவலங்களில் மூழ்கிடவும் ஆகும்
கொண்ட ஆசை மனிதனை விட்டகலா என்பதை இங்கு காண்பீர்!

– வெலிப்பன்னை அத்தாஸ்

**ஜீவநதி**
**சந்தா விபரம்**
தனிப்பிரதி – 80/=
ஆண்டுச்சந்தா – 1200/=
வெளிநாடு – $ 50U.S
மணியோடரை
அல்வாய் தபால்
நிலையத்தில்
மாற்றக்கூடியதாக
அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய
பெயர்/முகவரி
**K.Bharaneetharan,
Kalaiaham ,
Alvai North west,
Alvai.**
வங்கி மூலம் சந்தா
செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan
Commercial Bank -
Nelliady Branch
A/C No.- 8108021808
CCEYLKLY

# பேசும் இதயங்கள்

**1)** ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம். பங்குனி மாதம். மகளிர் பற்றி அனைவரும் பேசும் மாதம். இம்முறை பெண்கள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படுவது பற்றியே பலரும் கவலை தெரிவித்தனர். அதனைத்தடுக்க என்ன செய்யலாம் என்பது பற்றியும் பல வாதப்பிரதிவாதங்கள். சிலர் அதற்குக் காரணமானவர்களெனப் பெண்களின் பக்கமே விரல் நீட்டினர். அவர்களது கவர்ச்சி காட்டும் உடையலங்காரம் சுட்டிக்காட்டப்பட்டதை உதாரணமாகக்கூறலாம். பச்சைப்பாலகர்களை வன்புணர்விற்கு உட்படுத்துகிறார்களே. அவர்களும் கவர்ச்சி காட்டுகிறார்களா? இல்லை. இது காமத்தின் வெறியாட்டம். மதுவென்றால் சிலருக்குமிகப்பிரியம். அதைக் குடிக்காதே என்றால் கேட்பார்களா?அதன் கேடுகளைக் கூறித்தான் மதுவை வெறுக்கச் செய்யவேண்டும். அதுமட்டுமல்ல. சங்ககாலப்பாடல்களே பரத்தையர் பற்றிக் கூறுகின்றன. இன்றுவரை பாலியல்தொழில் புரிவோர் சகல நாடுகளிலும் உள்ளனர்.

ஆன்ம ஈடேற்றத்திற்குத் தடைகளாக உள்ளவற்றுள் ஒன்று காமம். அந்த இச்சையை ஒழித்துவிட வேண்டுமென்பதற்கு பல்வேறு வழிகளில் அறிவுரைகளைக் கூறியுள்ளனர். அவற்றுள் ஒரு வழியாகவே சித்தர்கள் இவ்வாறு பாடியிருக்கலாம்.சித்தர்களை நாம் வணக்கத்திற்குரிய தெய்வங்களாகக் கருதுகின்றோம். அவர்களது பாடல்களைத் தெய்வீகமாளவையாகக் கருதுகின்றோம். எம் உணர்வுகளை மற்றையோர் மதிக்கவேண்டுமென எதிர்பார்க்கின்றோம். பதிலாக ஒரு கட்டுரையை எழுதுவதைத் தவிர்ப்பது இயலாமையாலல்ல. அன்பே சிவம் என்று கூறிக்கொண்டு அடிபடுவது பைத்தியக்காரத்தனம் என்று கருதுவதினாலேயே.

சித்தர்களின் பாடல்களில் கற்றுணர எத்தனையோ ஆழ்ந்த தத்துவக் கருத்துகளுள்ளன.அவற்றை விட்டுவிட்டு இப்படி எழுதுவது தேவையற்றதொன்று என்பதே எனது கருத்து.

– சி.யோகேஸ்வரி. கோப்பாய்

**2)** வணக்கம், புலவர் ம. பார்வதிநாதசிவம் கடந்த பங்குனி மாதம் 5ஆம் திகதி காலம் சென்றார். அமைதி – ஆற்றல் மிக்க அப்புலவரை பற்றி தேசியப் பத்திரிகைகள் இது வரை முறையாக அஞ்சலி செலுத்தவில்லை. ஜீவநதி கட்டுரை போட்டு – கௌரவித்தமை அபாரம். ஜீவநதியின் ஒவ்வொரு துளியும் இனிமை. எங்கள் பத்திரிகை ஜீவநதி ஆல்போல் தழைக்க – பலன் பல பெருக நல்வாழ்த்துக்கள்

– வேல்.அமுதன்

**3)** ஜீவநதி சித்திரை இதழில் தங்களால் எழுதப்பட்டிருந்த ஆசிரியர் தலையங்கம் இன்றைய யதார்த்த நிலையை நாசூக்காக எடுத்துக் கூறியுள்ளது. ஆமாம், அந்த ஆசிரியர் தலையங்கத்தில் தாங்கள் மூன்றாம் பந்தியில் குறிப்பிட்டிருந்த சில வரிகளே இங்கு என்னால் எழுதப்பட்டிருக்கும் கவிதையை எழுதத் தூண்டியது.

"தாம் சிந்திப்பதையும் தாம் எழுதுபவையும் மாத்திரமே அற்புதமானவை என்றும் ஏனைய எழுத்துக்கள் யாவும் அர்த்தமற்றவையெனவும் கூறும் நவீனத்து நாயகர்கள் சிலரை சிந்திக்க வைப்பதற்காக இக்கவிதை புனையப்பட்டுள்ளது. இதில் ஏதும் சீண்டுதல் இல்லை. அவர்களின் அறியாமையை சுட்டுவதாகவே இது அமைந்துள்ளதன்றி தனிப்பட்ட தாக்குதலேதுமில்லை."

**புத்திசாலிப் புற்றீசல்கள்**

மூன்றாம் பிறை
நான்காம் நாளே தன்னைத்தான்
முழுநிலவாக பிரகடனப்படுத்துகிறது.

மூன்று இலைகள் விடுமுன்னரே
விழுதுவிட்ட விருட்சமாகிவிட்டதாக
நாற்றுக்கள் நர்த்தனமிடுகின்றன.

அகரத்தை அட்சரசுத்தமாக
அறியுமுன்னரே
சிகரத்தைத் தொட்டு விட்டதாக
தகரங்கள் தண்டோரா போடுகின்றன.

பரந்த நிலமும்
விரிந்த நீர்ப்பரப்பும் அறியாத
கிணற்றுத் தவளைகள்
அதி நவின உலகம் பற்றி
ஆலாபனை செய்கின்றன.

மேருமலைகளை "கடி"ப்பதன் மூலம்
எவரெஸ்டில் ஏறிக் குந்திவிட
சுண்டெலிகள் சில
இணையக் கணை ஏவி
"கொலர்" உயர்த்திக் கொள்கின்றன.

எல்லாமே அறிந்த இந்த
புத்திசாலிப் புற்றீசல்களுக்கு
ஏனோ தெரியவில்லை
நாளைய பொழுது புலருமுன்னரே
தமது பரபரப்பான பறப்புக்கள்
செட்டை முறித்தக் கொள்ளுமென்று.

–ஷெல்லிதாசன்.




இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.